
கல்கி



KALKI 12.7.1964

30 காசு

ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம் :



ராஜு எங்களுக்கு ஒரே பிள்ளை—சில சமயங்களில் விஷமம் செய்தாலும் ஒரு போதும் அத்து மீறினது கிடையாது. ஆனால் சமீபகாலமாக அவன் உணவில் கூட சிரத்தை இன்றி சோர்வுற்று வீட்டிலேயே நடமாடிக்கொண்டிருந்தான். ஒரு நாள் விருந்தினர்கள் எதிரில் அவன் மிக மோசமாக நடந்துகொண்டான். என் கணவர் கோபத்தில் அவனை அடிக்கப் போனார். எங்கள் அத்தை அவரைத் தடுத்து "அடிப்பது இருக்கட்டும், முதலில் நான் ராஜுவைப் பரிசோதித்துப் பார்க்கிறேன்" என்றாள். அத்தை ஒரு அனுபவமுள்ள டாக்டர்.



பரிசோதித்துவிட்டு அத்தை சொன்னாள்: "ராஜுவுக்கு கவலைப்படும்படி ஏதுமில்லை. வளரும் குழந்தைகளுக்கு ஏராளமான சக்தி தேவைப்படுகிறது. செலவழியும் சக்தி ஈடு செய்யப்படாவிடில் சிறுவர்கள் சிடுசிடுப்பார்கள். ராஜுவுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தால் பழையபடி சமத்தாகி விடுவான்."



ராஜுவுக்கு தினந்தோறும் ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தோம். சில வாரங்களுக்குள்ளாகவே தெம்பும் விளையாட்டுமாய்க் காணப்பட்டான். அத்தைக்கும் ஹார்லிக்ஸுக்கும் கோடிப் புண்ணியம். தண்டப்பிரயோகம் இல்லாமலேயே குழந்தை திருந்திவிட்டான்.



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

[WT-HL-682(ப)

கல்கி


பொருளடக்கம்


குரோதி, ஆனி 29 ● ஜூலை 12


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மூஷிகர்: ஆந்திர சட்ட சபையில் ஓர் அங்கத்தினர் கேள்விக்கு, கர்னூல் ஜில்லாவில் கிணறுகள் வெட்ட 61-62ல் 3.6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதென்றும் அவ்வருஷம் 60 கிணறுகள் வெட்டப்பட்டன என்றும் மந்திரி பதிலளிக்க இரண்டு வருஷங்கள் ஆயினவாம். இதில் அதிசயமென்ன? விவசாய வேலைகள்நடக்கும்வேகத்தில் தானே பதிலும் கிடைக்கும்!


யானை வருமுன் மணியோசை!
சமுதாயப் பண்ணை
17-வது


"இவர்கள் நீடூழி வாழ்க!
நாம் வசிக்கப் புது வீடுகள்
திறந்து வைக்கிறார்கள்."
அரசாங்க வியாபாரம்
உணவு
தானியங்கள்
லஞ்ச
ஊழல்



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 50

நேருஜிக்கு நினைவுச் சின்னம்

ராஜாஜி

ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தர் அவர்கள் கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதுபோல் லஞ்ச ஊழலை ஒழிக்க விநோதமான யத்தனம் செய்து வருகிறார். அவரை நான் நாற்பது ஆண்டுகளாக அறிவேன். அந்தரங்கசுத்தமுள்ளவர், ஆன்ம சம்பத்துக்களை மதிப்பவர் என்பதாக அவரிடம் மதிப்பு வைத்திருக்கிறேன். லஞ்ச ஊழலுடன் உண்மையாகப் போரிடவேண்டும் என்று வீரத்துடன் அவர் செயலாற்றுகிறார் என்பதை நான் அறிவேன். ஆனால் போர் முறைதான் சரியாக இல்லை.

லஞ்ச ஊழலென்பது குஸ்தி செய்து அழிக்கக்கூடிய தனியொரு அரக்கனல்ல என்பதை ஸ்ரீ நந்தர் அவர்கள் உணரவேண்டும். மூட்டைப் பூச்சி, கொசு முதலிய கிருமி வகைகளைப்போன்றது லஞ்ச ஊழல். கிருமிகள் எங்கு உற்பத்தியாகின்றனவோ அந்த இடத்தைக் கண்டுபிடித்து அங்கே நிவாரண வேலையைச் செய்ய வேண்டும். லஞ்சத்துக்கு ஆதாரமாக உள்ள உற்பத்தி ஸ்தானத்தையே அழிக்க முயன்றால் தான் ஸ்ரீ நந்தர் போரில் வெற்றி பெறுவார். நம் நாட்டில் நிலவும் லஞ்ச ஊழலுக்கு உற்பத்தி ஸ்தானம் பெர்மிட் - லைஸென்ஸ் - கோட்டா முறை. இவற்றைப் பெறுவதற்காகவே அரசாங்க சிப்பந்திகளுக்கும், அரசியல் கட்சிக்காரர்களுக்கும் லஞ்சம் தரவேண்டியிருக்கிறது. இதன் விளைவாக காங்கிரஸ் ஆட்சியில் முந்தி இராத ஒரு லஞ்ச சகாப்தம் பிறந்து வளர்ந்திருக்கிறது. உற்பத்தி, விநியோகம், போக்குவரத்து இவற்றில் ஈடுபட்டுள்ள எல்லாரிடமும் — அரசாங்க சிப்பந்திகள், அரசியல் கட்சிக்காரர்கள், தனி மனிதர்கள் எல்லாரிடமும் — லஞ்ச விஷம் உட்புகுந்து கெடுத்துவிட்டது. பாரத நாட்டு வாழ்வில் நேர்மை மீண்டும் இடம்பெற வேண்டுமானால் லைஸென்ஸ் — பெர்மிட் முறையை நீக்கியாக வேண்டும். லைஸென்ஸ் முறையைப் பூரணமாக ரத்தாக்க ஸ்ரீ நந்தருக்கு சக்தி போதாது. ஏனென்றால் அது சோஷலிஸம் என்கிற மோகினி ஆடையை அணிந்து கொண்டிருக்கிறது. காலஞ்சென்ற பிரதமரவர்கள் விட்டுச் சென்ற பிதுரார்ஜிதம் அது. ஆள்கிற கட்சியிலுள்ளவர்களுக்குக் கல்பக விருட்சமாக இருப்பது பெர்மிட் - லைஸென்ஸ் முறைதான். எனவே அதனை ரத்து செய்யுமாறு தமது சகாக்களை ஊக்க ஸ்ரீ நந்தரால் இயலாது. ஆனாலும் அவர் பிரச்னையைப் பெருமளவுக்குத் தீர்க்க வழியுண்டு. நான் முன்னமே சொன்ன யோசனையை மீண்டும் கூறுகிறேன். தவிர்க்க முடியாதென்று இந்த லைஸென்ஸ் - பெர்மிட் ராஜ்யம் இருக்கும் வரையில் லைஸென்ஸ்–பெர்மிட் வழங்கும் பொறுப்பை அரசியல் சார்பில்லாத ஒரு சுதந்திர போர்டிடம் ஒப்படைக்க வேண்டும்; ஸுப்ரீம் கோர்ட்டைப்போலவே சர்க்காருக்குக் கட்டுப்படாமல் செயல்பட இந்த போர்ட் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். இந்த யோசனையை எதிர்க்கட்சிகள் வரவேற்றிருக்கின்றன. ஆள்கிற கட்சியும் இதுவரை எதிர்க்கவில்லை என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பெர்மிட் - லைஸென்ஸ் விநியோகத்தின் நேர்மைதான் லஞ்ச ஊழலின் உற்பத்தி ஸ்தானத்தைச் சுத்தமாக்கும் கிருமிநாசினி. ஸ்ரீ நந்தர் அவர்கள் விரும்பும் சதாசாரத்துக்கு இதைவிட வேறு வழியில்லை. சமீபத்தில் ஸ்ரீ விநோபா பவே அவர்களிடம் ஆசி

பெறுவதற்காகப் புதிய பிரதமர் சென்றிருந்தபோது விநோபா அவர்கள் நான் சொன்ன யோசனையை வற்புறுத்திச் சொன்னதாகத் தெரியவருகிறது.

மற்றொரு விஷயம்: நிர்வாகத்தில் நடக்கும் ஊழல்களை விசாரிக்கப் பூரண சக்திவாய்ந்த ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். கட்சிக் கொறடாக்கள் இல்லாமல் பார்லிமெண்டில் ரகசிய வாக்கெடுப்பு நடத்தி, உயர் அதிகாரி ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர் தலைமையில் விசாரணை டிபார்ட்மெண்ட்டு ஒன்றை நிறுவ வேண்டும். புகார்களை யெல்லாம் விசாரிக்க அவர் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். அவருடைய முடிவை ஜட்ஜின் தீர்ப்புப் போல் கருதி, பூரணமாக ஏற்று, அமுல் நடத்த வேண்டும். எந்த அரசாங்க தஸ்தாவேஜியையும் கோரிப் பெறவும், நிர்வாகத்தின் சார்பிலோ, புகார் சொல்பவர் சார்பிலோ, தமது சொந்தச் சார்பிலோ எந்தத் தகவலையும் ஆராயவும் அவருக்குப் பூரண உரிமை இருக்க வேண்டும். அவர்முன் பொய் சாட்சியம் கூறப்பட்டால் அதை நீதிஸ்தலத்தில் பொய் சாட்சி சொல்லும் குற்றமாகக் கருதித் தண்டிக்க வேண்டும். ஸ்காண்டிநேவியாவிலும், பிரான்ஸிலும் உள்ள அமைப்புக்களை மாதிரியாகக் கொண்டு இத்தகைய ஓர் அதிகாரியை இந்தியாவில் நியமிக்க வேண்டும். நல்ல நிர்வாகம் ஏற்பட இது பெருத்த உதவி செய்யும்.

இந்த யோசனைகளை அமுலாக்குவதால், அதிகார வர்க்கம் தங்களின் செல்வாக்கைப் பெரும்பாலும் இழக்க நேரிடும். என்றாலும் மந்திரிகள், கட்சி மேஸ்திரிகள் ஆகியோருடைய நிர்ப்பந்தத்துக்கு ஓயாமல் ஆளாகி வருகிற அதிகாரிகள், அந்தத் தலைவலி நீங்கித் தாங்கள் நேர்மையுடனும், நீதியுடனும் செயலாற்ற முடியும் என்பதால் இந்த யோசனையை வரவேற்கக்கூடும். இதன்படி நடந்தால் மந்திரிகள், ஆளும் கட்சிக்காரர்கள் ஆகியோரின் அதிகாரம் நிச்சயமாகக் கட்டுப்படும். தங்களுடைய சுயராஜ்யம் பறிபோய் விட்டதே என்று அவர்கள் விசனிக்கக்கூடும் எனினும், நாட்டில் சுயராஜ்யம் நிலவும். சிப்பந்திகளின் தினசரி நடவடிக்கைகளில் மந்திரிமார்களும் அவர்களைச் சேர்ந்த கட்சிக்காரர்களும் அதிகாரம் செலுத்த முடியாது என்பதால் ஜனநாயகம் வலுக்குன்றியதாக அர்த்தமில்லை. நியாயமாக சர்க்காருக்கு உள்ள அதிகாரம் இந்த ஏற்பாட்டால் குறையாது. கொள்கைகளை வகுப்பதில் சட்டசபைகளுக்கும் மந்திரிகளுக்குமுள்ள நியாயமான அதிகாரமும் குறையாது. ஊழல் மட்டுமே குறையும்.

லைஸென்ஸ் — பெர்மிட் போர்ட் நிறுவவும், ஊழல் விசாரணைக்காகப் பூரண அதிகாரம் பெற்ற ஓர் அதிகாரியை நியமிக்கவும் புதிய சர்க்காரை இணங்கச் செய்தால் ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தர் அவர்கள் தமக்கும் சதாசாரத்துக்கும் மகத்தான வெற்றி பெற்றவராவார். இந்த யோசனைகளை ஏற்க மந்திரி சபையும் ஆளும் கட்சியினரும் மிகவும் தயங்குவார்கள். ஆனால் இது தீய சக்திகளின் எதிர்ப்பு என்பதையும், பொது மக்கள் கருத்து தமக்கு உதவும் என்பதையும் மனத்தில் வைத்து ஸ்ரீ நந்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரு அவர்களுக்கு ஞாபகார்த்தம் எழுப்புவதற்காகப் பலவிதத்தில் யோசித்து வருகிறார்கள். பாரத தேசத்தில் நேர்மையான நிர்வாகம் ஏற்பட்டால் அதுவே நேரு அவர்களுக்குத் தலைசிறந்த ஞாபகார்த்தமாக விளங்கும்.

வெட்கக்கேடு

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இவற்றில் ஒருவாறாக 'அட்மிஷன்' படலம் முடிந்து விட்டது. புனிதத்துக்கு உறைவிடமாக விளங்க வேண்டிய கல்வித் தலங்களில் நடைபெற்ற ஊழல் படலம் ஓராண்டுக்கு முடிந்து விட்டது என்று நிம்மதி கொள்ளலாம். நிர்வாக ஊழல் பற்றி நிறையச் சொல்லி வருத்தப்பட்டாயிற்று. அதற்குப் பரிகாரங்களும் தோன்றுகின்றன. ஆனால் கல்விசாலை அட்மிஷன் ஊழலைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் போதாது. அதற்குப் பரிகாரமும் தெரியவில்லை. தந்தைமார்கள் அட்மிஷனுக்காக எத்தனை எத்தனையோ அலைந்து, யார் யாரையோ பார்த்து, எப்படி எப்படியெல்லாமோ அவர்களைத் திருப்தி செய்து காரியத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தகுதியற்றவர்கள் இடம்பெற வேண்டுமெனில் தகுதியுள்ளவர்களுக்கு இடமில்லாமல் தானே போகவேண்டும்? இவ்வாறு நேராதிருப்பதற்காகத் தகுதியுள்ள மாணவர்களும் புறக்கடை வழியாகப் பிரவேசம் செய்ய முற்பட்டு விட்டார்கள். மொத்தத்தில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. எந்த விசாரணைக் குழு இந்த மகத்தான விசுவரூப ஊழல் முழுவதையும் அலசிப் பார்த்துத் தீர்ப்புக் கூற



முடியும்? கல்விச்சாலையில் சேருவது, பரீட்சையில் பாஸ் செய்வது, அதன்பின் உத்தியோகம் பெறுவது எல்லாமே தகாத முறையில் நடத்திக் கொள்ளலாம் என்னும்போது மாணவர்கள் தகுதியைப் பற்றியும், நேர்மையைப் பற்றியும் ஏன் கவலைப்படப் போகிறார்கள்? இப்படித் தவறான முறையிலேயே பயிரான இந்த வருங்காலப் பிரஜைகள் பிற்பாடு வேலையில் அமர்ந்த பின் இவர்களிடம் நேர்மையை எதிர்பார்ப்பதுதான் எப்படி?

கல்விச்சாலைகள் விஸ்தரிப்புக்காகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழகத்தில்தான் அட்மிஷன் ஊழலும் வெகு நன்றாக விருத்தியாகியுள்ளது என்பது வெட்கக்கேடான விஷயம்.

இந்தியாவின் கடமை

லாவோஸானாலும் சரி, தெற்கு வியட்நாமாயினும் சரி, தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸப் படையெடுப்பு எங்கு நீடித்தாலும் அமெரிக்காவால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது; அது நேரடியாகச் சீனாவுடன் போரிட நேரும் என்று அமெரிக்கப் பிரதம காரியதரிசி டீன் ரஸ்க் அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார். சீனர்கள் தங்கள் ஆக்கிரமிப்பை நிறுத்தாவிடில் அமெரிக்காவுடன் நேருக்கு நேராக முகம் கொடுக்க வேண்டியதுதான் என்று ஜனாதிபதி ஜான்ஸனும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆப்ரஹாம் லிங்கனும், கென்னடியும் எதற்காகப் பிராணத் தியாகம் செய்தனரோ அந்த

நீக்ரோ உரிமைகளை நிலைநாட்டச் சட்டம் கொண்டு வந்து வெற்றி கண்டுள்ள ஜான்ஸன் அவர்கள், இப்போது கம்யூனிஸ அடிமை ஆட்சியை எதிர்த்தும் அதே அளவு தீவிர மனப்பான்மை காட்டுவது போற்றுதலுக்குரிய விஷயம். நமது கண்டத்துக்கே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்தர்ப்பம் இது.

தென் கிழக்கு ஆசியாவில் ராணுவ சூனியப் பகுதிகள் ஏற்படுத்தி சமரஸம் காண வேண்டும் என்பது பிரெஞ்சு அதிபர் டி காலே அவர்களின் கருத்து. சரியான சமயத்தில் சரியான மனிதர்களுடன் சமரஸம் செய்து கொள்வதுதான் சரி; மற்றபடி தீமையுடன் சமரஸம் கூடாது என்பது பெதிக் லாரென்ஸ் தந்த ராஜநீதி சூத்திரம். சமரஸத்துக்குத் தகுதியற்றவர்களாகவே கம்யூனிஸ சீனாவை அமெரிக்கா கருதுகிறது. இதுவே சரியான மதிப்பீடு. இச் சமயத்தில் இந்தியா ஆத்மிக ரீதியில் தனது முழு ஆதரவையும் அமெரிக்காவுக்கு அளிக்க வேண்டியது கடமையாகும். இந்தியாவால் சீனாவைத் தனித்து எதிர்க்க முடியாது என்ற ஒரு காரணத்துக்காகவே நாம் அமெரிக்காவுடன் ராணுவ ரீதியில் இறுக்கமான நட்பு கொண்டிருக்க வேண்டியது அவசியம். அந்த அவசியத்தை நமது ஆட்சியாளர் உணரவில்லை. உணர்ந்தாலும் அதை யொட்டிய நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள். சீனாவுடன் சமரஸம் செய்து கொள்வது சாத்தியம் என்றே ஒரு சமயம் மனப்பால் குடித்து வந்தனர். இப்போது சீனாவின் மண்ணாசை நன்கு வெளியாகி விட்டது. எனவே தற்சமயம் அமெரிக்காவுடன் ராணுவ இணைப்புப் பெற்று கம்யூனிஸச் சக்தியை முறியடிப்பதற்குக் கிடைத்துள்ள வாய்ப்பை இந்தியா பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

என்ன சேதி ?

மகிழ்ச்சி அடைகிறோம்

பிரதமர் ஸ்ரீ லால்பஹாதுர் சாஸ்திரி அவர்களின் உடல் நிலை சிறிதே குன்றிய செய்தி கேட்டு அனைவரும் வருந்தினர். அவர் குணமடைந்து வருவதாக அறிந்து மகிழ்கிறோம். விரைவிலேயே அவர் பூரண நலன் பெற ஆண்டவனை வேண்டிக் கொள்கிறோம்.

கெய்ரோன் என்ன ஆவார் ?

பஞ்சாபுக்குப் புது முதன் மந்திரி வந்தாகி விட்டது. ஸ்ரீ கெய்ரோன் என்ன ஆவார் என்று கேட்கப்படுகிறது.

இதற்கு ராஜாஜி தரும் விடையாவது: அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக சுப்ரீம் கோர்ட்டினால் கண்டிக்கப்பட்ட முன்னாள் ஆந்திர முதன் மந்திரி ஸ்ரீ சஞ்சீவ ரெட்டி என்ன ஆகியிருக்கிறார்? மத்திய அமைச்சரவையில் காபினெட் மந்திரியாகி யிருக்கிறார். அதே பிரமோஷன் கெய்ரோன் அவர்களுக்கு மட்டும் ஏன் கிடைக்கக்கூடாது?

திட்டத்தை வெட்டுங்கள் !


சர்க்கார் செலவைக் குறைப்பதில் பிரதம மந்திரியும், நிதிமந்திரியும் கவனம் செலுத்தியிருப்பது வரவேற்க வேண்டிய விஷயம். சர்க்கார் செலவு அதிகரிப்பதன் விளைவாக ஏற்படும் பணவீக்கம் காரணமாக விலைவாசிகள் உயர்வதாக அவர்கள் ஒப்புக் கொண்டிருப்பது இதுவரை காங்கிரஸ் ஆட்சியினர் ஏற்றுக் கொள்ள மறுத்த ஓர் உண்மையாகும்.

திட்ட வேலைகள் அல்லாத இனங்களில் ஏற்படும் அநாவசியச் செலவைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பிரதமரும், நிதி மந்திரியும் பேசியிருக்கிறார்கள். இது போதாது. பணம் தண்ணீர்ப்பட்ட பாடாக விரயமாவது ஐந்தாண்டுத் திட்டங்களில்தான். உதவாக்கரைச் செலவினங்கள் அவற்றில்தான் அதிகம். எனவே, உண்மையாகவே செலவைக் குறைப்பதில் சர்க்காருக்குக் கருத்திருக்குமாயின் திட்டங்களையும் வெட்டிக் கட்டுத் திட்டம் செய்ய வேண்டியது தான் முதல் தேவை.

பிரதமரின் பெயர்

நமது பிரதம மந்திரி அவர்களின் பெயர் பலவிதத்தில் குழப்பப்பட்டு வருகிறது. 'சாஸ்திரி' என்றே அவரைப் பத்திரிகைகள் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன. இது தவறு. சாஸ்திரி என்பது அவரது இயற்பெயரின் பகுதியோ, வகுப்புப் பெயரோ அல்ல. பி. ஏ., எம். ஏ. என்பது போல் வித்யா பீடத்தின் கல்விப் பட்டம் அது. நமது பிரதமரை 'சாஸ்திரி' என்று குறிப்பிடுவது, ஒருவரை எம். ஏ., அல்லது பி. ஏ. என்று குறிப்பிடுவது போன்ற விசித்திரமேயாகும்.

பிரதமரின் இயற்பெயர் லால்பஹாதுர் என்பதேயாகும்; சாஸ்திரி அல்ல.










1. ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி அருணாசலத்தின் புகைப்படத்தை திரு சிவாஜி கணேசன் திறந்துவைத்தார்.

2. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் எழுபத்தியோராவது பிறந்த தின விழா ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் திரு பி.டி. ராஜன் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. ஆசார்ய சுவாமிகளின் சென்னைப்பேச்சுக்கள் அடங்கிய நூலையும், தர்மமும் மதமும் தழைக்க அவர் அருளிய 71 போதனைகள் அடங்கிய புத்தகத்தையும் பீஹார் கவர்னர் ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் வெளியிட்டார்.

3. தருமபுர ஆதீனம் சைவ சமயப் பிரசார நிலையத்தில் டர்பன் கோ. ராமசாமி இயற்றிய 'தமிழ் வேதம்' என்னும் நூலை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். சதாசிவம் வெளியிட்டார். இவ்வைபவத்துக்கு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் தலைமைவகித்துச் சிறப்பித்தார்.

4. என். ஸி. ஸி. அதிகாரிகளுக்கான விசேஷப் பயிற்சியில் சிறந்த பயிற்சியாளர் பரிசைப் பெற்றார் காரைக்குடி அழகப்பா கல்லூரியைச் சேர்ந்த எபநேசர். தெற்குப் பிராந்திய படைத் தளபதி சென் அவர்கள் பரிசை அவருக்கு வழங்கி வாழ்த்துகிறார்.

5. சென்னை, கிழக்கு அண்ணாமலைபுரத்தில் உள்ள ஆங்கிரஸ ஆசிரமத்தில் சென்ற மாதம் 10ந் தேதி வித்வத் சதஸ் நடைபெற்றது. முன்னாள் நீதிபதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் தலைமை வகித்து ஆங்கிரஸ ஆசிரமத்தின் ஸ்தாபகர் பத்தங்கி ஸ்ரீ நாகேசுவர சிரௌதிகள் வேதநெறி தழைக்கத் தம் அறுபதாண்டு வாழ்க்கையில் செய்த அரிய சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.




பனாமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
செழுமையான வர்ஜீனியாப் புகையிலை
சீர்நிரவிய கலவை
புதுமை மயமானது
GTC
GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.
விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 632 TM
Greens' Advtg.

வளரும் விஞ்ஞானம்



வேகமாகக் கார் சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று கார் டயர் 'பஞ்சர்' ஆகிவிட்டால் விபத்துக்கள் நேரக்கூடும். தெய்வாதீனமாக விபத்து ஏதும் நேரவில்லை என்றாலும் நடுவழியில் வண்டியை நிறுத்திச் சக்கரத்தை மாற்ற வேண்டும். வெளியூர்களுக்குச் செல்கையில் இரண்டு டயர்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பஞ்சர் ஆகி விட்டாலோ அதனால் உண்டாகும் தொல்லையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இந்தத் தொந்தரவுகளிலிருந்துமோட்டாரோட்டிகள் தப்ப குட்இயர் டயர் ஸ்தாபனத்தினர் இப்போது ஒரு புதிய டயரைத் தயாரித்து வருகின்றனர். இதனை டயருக்குள் டயர் என்று சொல்லலாம். உள் டயர் வெளி டயர் இரண்டுக்கும் ஒரே 'ரிம் வால்வ்' வழியாக ஒரே சமயத்தில் காற்றடிக்கலாம். வெளி டயர் ஓட்டையாகிக் காற்று போய் விட்டாலும் காரை உள் டயர் தாங்கி மேலும் நூறு மைல் வரை ஆபத்து ஏதுமின்றி இட்டுச் செல்லும். அதே நேரத்தில் வெளி டயர் பஞ்சர் ஆகியிருப்பதைக் காரோட்டியின் எதிரேயுள்ள ஒரு சாதனம் அவனுக்குத் தெரிவித்து எச்சரிக்கை செய்யும்!

ஃ ஃ ஃ

காரோட்டிகளுக்கு இன்னும் ஒரு விஞ்ஞான ரீதியான வசதி மேற்கு ஜெர்மனியில் செய்யப்பட்டிருக்கிறது. (கீழே உள்ள படம்)

பிரகாசமான ஹெட் லைட்டுகளுடன் எதிரெதிராக இரண்டு கார்கள் ஒன்றை ஒன்று அணுகும்போது காரோட்டியின் கண்கள் கூச அவர் அவஸ்தைக்குள்ளாகிறார் அல்லவா? இதைத் தவிர்க்க மேற்கு ஜெர்மனியின் நெடுஞ்சாலைகளில் நெளிந்து செல்லும் ராட்சதப் புழுவைப் போன்ற ஒரு சாதனத்தை அமைத்திருக்கிறார்கள். காரோட்டிகள் இதைத் 'தகரப் புழு' என்றே அழைக்கிறார்களாம். முக்கியமாக இது திருப்பங்களிலும் வளைவுகளிலும் நெடுஞ்சாலையின் மத்தியில் வைக்கப்பட்டிருக்கிறது. உலோகத் தகட்டினாலான இது, ஹெட் லைட்டின் பிரகாசத்தைத் தானே உள்ளடக்கிக் கொண்டு விடுகிறது. ஆனால் சாலையில் வீசப்படும் ஹெட்லைட்டின் ஒளி குன்றுவதில்லை. சாலை முழுவதையும் காரோட்டி கண் கூசாமல் நன்றாகப் பார்க்க முடியும்.

ஃ ஃ ஃ

வட, தென் துருவத்துக்குச் செல்வோரும் விண்வெளிப் பயணம் போவோரும் வருங்காலத்தில் கற்று வட்டாரத்தில் உள்ள நீர் உறையும் குளிரினால் பாதிக்கப்பட்டுத் துன்பமடைய வேண்டியதில்லை. அவர்களுடைய மூச்சுக் காற்றே அவர்கள் கதகதப்புடன் இருக்க உதவும்! இதற்காக அமெரிக்க பெட்ரோலியம் இன்ஸ்டிட்யூட் ஒரு புதிய உடையைத் தயாரித்திருக்கிறது. இதை அணிபவர்களின் நாசியிலிருந்து வெளிவரும் காற்று ஸோடியம் அலுமினியம் ஹைட்ரைடு அடங்கிய ஒரு சிமிழுக்குள் செல்லும். அப்போது ஏற்படும் ரசாயன மாறுதல்களால் மூச்சுக் காற்றில் உள்ள நீராவியிலிருந்து ஹைட்ரஜன் வாயு தனியாகப் பிரிகிறது. பின்னர் அம்மனிதனின் காலணிகளிலும் கையுறைகளிலும் வைக்கப்பட்டிருக்கும் கிரியாஊக்கிகள் நீராவியிலிருந்து வெளிப்பட்ட ஹைட்ரஜனை இயக்கி உஷ்ணம் உண்டாக்குகின்றன. இந்த விசேஷ ஆடை அணிந்திருப்பவனுக்குக் குளிரே தெரியாது!

ஃ ஃ ஃ

புது மணம் புரிந்த தம்பதிகள் தேன் நிலவுக்காக எங்கேனும் போய் வர விரும்புவது இயற்கை. ஊட்டி, கோடைக்கானல், காஷ்மீரம் என்று போகலாம். ரொம்பக் கொடுத்து வைத்தவர்கள் அயல்நாடுகளுக்குக் கூடச் சென்று வருவார்கள். ஆனால் மேற்கு ஜெர்மனியில் காதனிளம் தம்பதியர் இப்போதெல்லாம் ஆழ்கடலுக்குத்தான் தேன் நிலவுக்காகச் செல்ல விரும்புகின்றனராம்! ஆச்சரியமாக இருக்கிறதா? இதற்காகவென்றே இரண்டே பேர் பிரயாணம் செய்யக் கூடிய சின்னஞ் சிறிய நீர்மூழ்கிக் கப்பல்களை ஸில்வர் ஸ்டார் கம்பெனி தயாரித்து விற்பனை செய்கிறது. இந்தக் குட்டி நீர்மூழ்கிக் கப்பலுக்குப் பெயர் ''டைகர் ஷார்க்'' என்பது.

தேன் நிலவின்போது நிலாவை வேண்டாமென்று ஒதுக்கும் தம்பதிகளுக்கு மட்டுமின்றி ஆழ்கடல் ஆராய்ச்சியாளருக்கும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் பெரிதும் பயன்படும்.



கயல்விழி

அகிலன்

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

இரவும் பகலும்

மருத்துவர் குடிலின் கூரையின் உச்சியில் பற்றிய தீ மறு கணத்திலேயே அதன் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டது. இளைஞன் படுத்துக் கிடந்த கட்டிலை ஆளுக்கொரு புறமாகத் தூக்கிக் கொண்டு, விழுப்பரையரும் கயல்விழியும் அதன் பின்புறமாக வெளியேறி வந்தனர். பிறகு அடர்ந்து கிடந்த இருளில் புகுந்து கல்லையும் முள்ளையும் பாராமல் விரைந்து நடந்தார்கள். சற்றுத் தொலைவில், நீண்ட நெடுஞ்சுவர் போல் தாழம் புதர் மண்டிக் கிடந்தது. அதற்குள் புகுந்து விரைந்தனர்.

மருத்துவரோ தம் கைகளில் அகப்பட்ட மூலிகைகளைச் சுருட்டிக்கொண்டு சூழ்ந்துக் கழியையும் ஒரு கூர்வேலையும் எடுத்துக்கொண்டு அவர்களைப் பின்பற்றினார். தாழம் புதர்களினூடே நெடுந்தூரம் நடந்த பின்னர், மையத்தில் சிறியதோர் இடைவெளிப் பொட்டல், சுற்றிலும் இயற்கையின் மறைவோடு தென்பட்டது. அங்கே கட்டிலை வைத்துவிட்டு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

விழுப்பரையர் புதரினூடே நின்று குடிசையை எட்டிப் பார்த்தார். கொழுந்துவிட்டெரிந்த பின்பு அது சிறிது சிறிதாக வெந்து தணிந்து சாம்பராகிக் கொண்டிருந்தது. பகைவீரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், இருளானதாலும், பழக்கமில்லாத புது இடமாக இருந்ததாலும் ஒருசிலர் பாண்டியவீரர்களின் வாட்களுக்கு இரையானார்கள். ஒருசிலர் வந்த வழியே ஓடத் தொடங்கினார்கள்.

ஒரு நோக்கமுமில்லாமல் அதை ஏதோ ஒரு வீடென்று நினைத்துக் கொண்டு தீயிட்டுச் சூரையாட முனைந்தவர்கள் அவர்கள் என்பது தெரிந்தது. எதிர்ப்பை அவர்கள் எதிர் பார்க்கவில்லை போலும். திரும்பி ஓடியிருப்பவர்கள் அதை அதோடு விட்டுவிடமாட்டார்கள். இன்னும் பலரை அழைத்துக் கொண்டு அங்கு வந்தாலும் வரக் கூடும்.

விழுப்பரையர் மெல்லப் புதரை விட்டு வெளியேறிச் சென்று அந்த இடத்தைக் கண்ணுற்றார். பகைவீரர்களில் ஐவரும், பாண்டிய வீரர்களில் இருவரும் வீழ்ந்துபட்டுக் கிடந்தனர். காவல் தலைவனை அழைத்து அவனுடைய செவிகளில் ஏதோ இரகசியமாய்க் கூறினார். பின்பு புதருக்குள் திரும்பி வந்தார்.

வேளை நடுச்சாம வேளை. போர்க்காலமாதலால் கூகை, கோட்டான், ஆந்தை முதலிய பல்வேறு பறவைகள் அங்கே கூடிப் பல்வகையான ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தன. கயல்விழி அதைப் போன்ற ஒரு நள்ளிரவில் காட்டுக்குள் அதற்கு முன்பு இருந்து பழகாதவள். அருகில் ஆண்மக்கள் இருவர் விழிப்புடன் இருந்தார்களென்றாலும் கட்டிலில் கிடந்த இளைஞனின் நிலை அவளைப் பதறச் செய்தது.

திடீரென்று எங்கோ ஒரு மூலையில் சில நரிகள் ஒன்றுகூடி ஊளையிடத் தொடங்கின. அதைத் தொடர்ந்து, அதற்கு எதிரொலி கிளம்புவது போல் நாலா திசைகளிலிருந்தும் நரிகளின் ஊளைச் சத்தம் நாராசமாய்க் கேட்டது. கயல்விழி நடுங்கினாள். குரல்கள் குதூகலத்தோடும் எக்களிப்போடும் அருகில் நெருங்கிக் கொண்டிருந்தன. விழுப்பரையர் மருத்துவரிடமிருந்த வேலை வாங்கிக் கொண்டு கயல் விழியின் அருகில் வந்தார்.

சலசலப்புச் சத்தம் கேட்டது தாழம் புதர்களுக்குள். குபீரென்று நூற்றுக் கணக்கான தீச்சுடர்கள் பற்றி எரிவது போல் பளிச்சிட்டு மின்னின நரிக் கூட்டத்தின் கண்கள். நெருப்புத் துண்டுகளின் கூட்டம் போன்ற அந்தக் காட்சியைக் கண்டவுடனேயே கட்டிலின் மீது கவிழ்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டாள் கயல்விழி.

மருத்துவரின் சூழ்ந்துக் கழியில் நெருப்புக் கனிந்து கொண்டுதானிருந்தது. அதை நன்றாக வீசிச் சுழற்றினார். அது தீப்பந்தமாக மாறியது. விழுப்பரையர் ஒரே ஒரு நரியை நோக்



கிக் குறி வைத்து வேல் பாய்ச்சினர். அவ்வளவுதான்! எல்லா நரிகளுமே சிதறிப் பறந்தன.

அருகில் வெந்து தணிந்த குடிசையைச் சுற்றிலும் அவைகளுக்கு விருந்து காத்துக் கிடந்ததால் எல்லா நரிகளுமே அங்கு போய்ச் சூழ்ந்து கொண்டன. வீரர்களின் சடலங்களைத் தங்களது கூரிய பற்களால் கடித்து இழுப்பதும் பிறகு ஆனந்தப் பெருக்கால் வானை நோக்கித் தலையை உயர்த்திக் கொண்டு கூவுவதும், தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொள்வதுமாக அவை பொழுதைக் கழித்தன.

'பொழுது புலராதா? இரவு கழியாதா?' என்று துடியாய்த் துடித்தாள் கயல்விழி. இருளுக்கு மத்தியிலிருந்து ஒரு தனிச் சங்கு மெதுவாக ஒலிப்பது போல் கேட்டது. விழுப்பரையர் அதை உற்றுக் கேட்டார். தாமும் அதற்குத் தம் குரல் ஒலியால் மறுமொழி கொடுத்தார்.

''கயல்விழி! வண்டிகள் சித்தமாகி விட்டன; இனி நாம் புறப்படலாம்'' என்றார்.

வீரர்கள் இருவர் வந்து கட்டிலைத் தூக்கியபடி முன்னே நடந்தனர். கயல்விழியின் கரத்தைப் பற்றிக்கொண்டு விழுப்பரையர் பின்பற்றினுர். மருத்துவரின் கைச்சுமையை ஒரு வீரன் வாங்கிக்கொண்டான்.

தேய்பிறை நிலவு நெடுநேரம் சென்று தலைநீட்டி மங்கலான ஒளியைச் சிந்தியது. சாலையிலே இரட்டைக் காளைகள் பூட்டிய கூட்டு வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. அதற்குள் மிருதுவான பஞ்சணையை விரித்திருந்தார்கள். மெதுவாக இளைஞனைத் தூக்கி உள்ளே கிடத்தினுர்கள். அவனுடைய தலைப்புறம் மருத்துவர் உட்கார்ந்துகொண்டார்; கால்மாட்டில் கயல்விழி அமர்ந்து கொண்டார். விழுப்பரையர் வண்டிக்கு முன்னுல் அமர்ந்து மாடுகளை அதட்டி ஓட்டத் தொடங்கினுர். சிறிது தூரத்தில் அந்த வண்டியைப் பின்பற்றி ஒரு வண்டியும், அதற்கு முன்னுல் மற்ருெரு வண்டியும் ஆக மூன்று வண்டிகள் அந்தச் சாலை வழியே தங்கள் பயணத்தைத் தொடர்ந்தன.

மருத்துவர் ஒரு சுரைக் குடுக்கையைச் சுட்டிக் காட்டி, ஒருவேளை அவன் இடையில் விழித்துக் கொண்டால் அதிலிருந்த கஷாயத்தில் ஒரு வாய் அவனுக்குக் கொடுக்கும்படி கயல்விழிக்குக் கூறினுர். வண்டியின் ஓட்டத்தில் அவருக்கு உறக்கம் வந்து விட்டது. அப்படியே சுருண்டு படுத்துக்கொண்டார்.

விழுப்பரையர் எதுவுமே பேசவில்லை. நிதானமாக வண்டியை ஓட்டியபடியே சுற்றிலும் தமது விழிகளைச் சுழலவிட்டுக் கொண்டிருந்தார். முன்னுலும் பின்னுலும் வந்த வண்டிகளில் வீரர்கள் ஆயுதங்களுடன் நிறைந்திருந்தார்கள். என்ருலும் இந்தப் பிரயாணத்தை அவனுடைய உடல்நிலை தாங்க வேண்டுமே என்ற கவலை அவரை வெகுவாகப் பற்றிக் கொண்டிருந்தது.

இளம் புலவனின் உடல் நெருப்பாகச் சுடுவதை உணர்ந்தாள் கயல்விழி. அவனுடைய கால்கள் இரண்டும் அந்தச் சூட்டை அவள் கரங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தன. அங்கயற்கண்ணி அம்மையின் பாதங்களுக்குத் தன் உள்ளத்தை அனுப்பி வைத்து அவன் பிழைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள் அவள்.

நேற்று மாலைப் பொழுது வரையில் அவன் யாரோ; அவள் யாரோ; ஆனுல் இப்பொழுது அவளுடைய ஒவ்வோர் உயிர் அணுவுமே அவனுக்காகத் துடித்தது. 'எப்படியாவது, எப்படியாவது, எப்படியாவது இவரைக் காப்பாற்றிவிடு!' என்று தனக்குள் பலமுறை சொல்லிச் சொல்லித் தேம்பினுள் அவள்.

நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது. காற்று இலேசாக வீசியது. வழியில் தென்பட்ட மரங்களையும், மரங்களில் கூடு கட்டிச் சிறகடித்த பறவைகளையும் கிரீச்சிட்ட அணில்களின் சத்தத்தையும் அவள் கவனிக்கவில்லை. இருளுக்குப் பழகிவிட்ட கண்களால் அவனுடைய முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தாள். களைப்பும் சோர்வும் சேர்ந்து கொண்டு அவளுடைய விழிகளை அழுத்தப் பார்த்தன. அவள் தன் உறக்கத்தோடு போராடியவாறே அவனைப் பார்த்திருந்தாள். ஒருவேளை தான் உறங்கும் வேளையில் அவன் விழித்துக் கொண்டால் அவனுக்கு மருந்து கொடுப்பது யார்?

பைந்தமிழ்க் குமரன் என்ற பெயரைத் தனக்குள் பல முறை உச்சரித்துப் பார்த்தாள். குமரன் என்ற பெயருக்குள்ள அழகு, இளமை, வீரம், சக்தி யாவுமே அவனிடம் குடிகொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அவனைக் காப்பாற்றுவதற்காக விழுப்பரையர் செய்த முயற்சிகளிலிருந்து அவனிடம் அவருக்கு இருந்த பற்றுதலையும் உணர்ந்து கொண்டாள்.

தன்னை மறந்து அவன் ஏதோ முனகினுன். அருகில் சென்று அதைக் காது கொடுத்துக் கேட்டாள். சொற்கள் ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. அவன் கண்களை மெல்ல விழித்தான். நினைவுகளைத் திரும்பவும் ஒருமுகப்படுத்த முயல்வது போல் வண்டிக்குள் விழிகளைச் சுழல விட்டான். பின்னர் ஆர்வத்தோடு தன் முகத்தையே பார்த்திருக்கும் இரு விழிகளைச் சந்தித்தான்.

முதலில் விழிகள் மட்டும் தெரிந்தன; பிறகு விழி மலர்களில் பிறந்த கண்ணீர் மணிகள் தெரிந்தன; பிறகு பிறை நுதல்கள், துடிக்கும் உதடுகள், மதிமுகம், கருங் கூந்தல், யாவுமே தெரிந்தன. அவனுல் அவளை யாரென்று இனம் கண்டு கொள்ள முடிந்தது போதும்! அவன் புன்னகை செய்ய முயல்வதை அவள் கண்டு கொண்டாள். ஆனந்தப் பெருக்கால் அவள் நெஞ்சு விம்மி வடிந்தது.

மெல்ல அருகிலிருந்த மருந்தைக் கிண்ணத்தில் வடித்து, அவன் தலையைச் சற்று மேலே தூக்கியவண்ணம் அவனுக்கு மருந்து கொடுத்தாள் கயல்விழி. அவன் முகம் சுளிக்காமல் அதைப் பருகினுன். பிறகு தலையணையை நகர்த்தி அவன் தலையை மெதுவாக அதன் மேலே கிடத்தினுள்.


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்
CHTP. G. H

நெடுநேரம் அவன் விழிகள் அவள் முகத்தை விட்டு அகலவில்லை. அவளும் பரிவோடு அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு அவனுக்கு உறக்கமோ, களைப்போ மேலிட்டிருக்க வேண்டும். கண்களை மூடிக்கொண்டான்.

கயல்விழிக்கு எப்படியோ ஒரு நம்பிக்கை பிறந்தது. மெதுவாக அவனது காலடியிலேயே தன் தலையை வைத்து முடங்கிக் கொண்டாள். விடிவெள்ளி புறப்படும் நேரத்தில் எழுந்த காலைக் காற்று அவளுடைய இமைகளையும் வருடத் தொடங்கியது. தன்னை மறந்து உறங்கத் தொடங்கினாள்.

காலைக் கதிரொளி சுள்ளென்று அவள் முகத்தில் வீசியபோதுதான் அவளுடைய உறக்கம் கலைந்தது. வண்டி நெடுஞ்சாலையை விட்டுக் காட்டுப் புதர்களினூடே தென்பட்ட குறுகலான பாதை வழியே சென்று, ஒரு குன்றின் அடிவாரத்தில் நின்றது.

கீழே குதித்து அம் மலைக் காட்சியைக் கண்ணுற்றாள் கயல்விழி. குன்றின் மேலே பஞ்சுப் பொதி போன்று மேகக் கூட்டம் தவழ்ந்து கொண்டிருந்தது. கண்கள் திரும்பிய பக்கமெல்லாம் ஒரே பசுமை மண்டிக் கிடந்தது. அங்கு வீசிய காற்றில் சாரல் கலந்து குளுமையைப் பரப்பியது.

மற்ற வண்டிகளிலிருந்து இறங்கியவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பித்துக்கொண்டிருந்தார் விழுப்பரையர். குன்றின் சரிவில் கட்டப்பட்டிருந்த ஒரு மண்டபத்துக்குள் அவனைக் கொண்டு போய்க் கிடத்தினார்கள். கயல்விழிக்கு முதல் நாள் இரவில் அநுபவித்த துன்பங்கள் யாவுமே அந்த இடத்தைக் கண்டவுடன் மறந்து போய் விட்டன.

பாடிப் பறக்கும் பறவைகளோடு அவள் மனம் சிறகடிக்கத் தொடங்கி விட்டது.

திரும்பவும் அவன் கண் விழித்தான்; திரும்பவும் அவள் கஷாயத்தை வார்த்துக்கொடுத்தாள். இப்பொழுது இருவருடைய முகங்களிலும் ஒன்றாகவே புன்னகை மலர்கள் பூத்தன.

இருபத்துநான்காம் அத்தியாயம்

தியாக விநோதர்

குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தி நம்மால் பெயர் மாற்றி வைக்கப்பெற்ற 'சேர பாண்டியர் தம்பிரான்' என்ற பாண்டியர் மாளிகையின் மேல்மாடத்தில் நின்றவாறு கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் எல்லாத் திசைகளிலும் திரும்பிப் பார்த்தார். திரும்பிய திசைகளிலெல்லாம் அவருடைய வெஞ்சினத்தின் விளைவுகள் திட்டுத் திட்டாகத் தெரிந்தன. இடிபாடுகள் நிறைந்த தெருக்கள், கூரையில்லாத சுவர்கள், சாம்பர்க் குவியல்களான வீடுகள், யானைகளால் துவைத்து அழிக்கப்பெற்ற பூங்காக்கள்! வீசும் காற்றுக்கூட நிணவாடை சுமந்த காற்றாக இருந்தது.

வெற்றிப் பெருமிதத்தில் விழாக்கள் நடத்திப் பூரித்த சக்கரவர்த்திக்கு இப்போது ஏனோ எல்லாவற்றிலுமே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. நினைத்த செயல்களை நினைத்தவாறே முடித்து விட்டவர் அவர். மதுராந்தகம் செய்து விட்டார். இளவரசன் சுந்தர பாண்டியனைக் கொன்று பழியும் தீர்த்துக் கொண்டார்; விழாக்கள் நடத்தி விருதுப் பெயர்களும் சூடிக் கொண்டார். ஆனால் யாவற்றையுமே திட்டப்படி முடித்த பிறகு, ஏனோ எல்லாவற்றிலுமே அவருக்கு வெறுப்பு மிகுந்து விட்டது.

அந்த ஒரு செய்தியை அவர் கேள்வியுற்றதிலிருந்தே அவருடைய மன அமைதி பறி போய்விட்டது. அவருடைய குமாரனைப் பற்றிய செய்தி அது. அதைப் பற்றி அவனிடம் தனித்துப் பேசுவதற்காக அவனை அங்கு அழைத்திருந்தார். அவன் வந்து அரை நாழிகைப் பொழுதாக அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவருக்கோ அவனைத் திரும்பிப் பார்ப்பதற்கே மனமில்லை.

அவருக்கே பொறுக்க முடியாதபடி அவருடைய சினம் இப்போது வெடித்து விட்டது. சட்டென்று திரும்பி அவன் முன்னே வந்து நின்று கொண்டார்.

''என் வாழ்நாளில் நான் எத்தனையோ போர்களை நடத்தியிருக்கிறேன். ஆனால் இவ்வளவு வேகத்தோடு என் சக்திகளையெல்லாம் திரட்டிக் கொண்டு நான் யாரையுமே தாக்கி அழித்ததில்லை. இந்தப் போரை எதற்காக நடத்தினேன்? யாருக்காக நடத்தினேன்?—தெரியுமா உனக்கு?''

குனிந்த தலை தூக்காமல் மௌனமாக நின்றான் இளவரசன்.

''உனக்காக, உன் ஒருவனுடைய நன்மைக்காக, உன்னை அழிவிலிருந்து காப்பதற்காக, உன் எதிர்காலப் பகை

வனை அழிப்பதற்காக இதை நடத்தினேன். ஆனால் நீயோ?.... உன்னிடம் நான் எப்படி அதைப் பற்றிப் பேசுவது?'' அவர் அங்கம் பதறியது.

அவனும் நடுங்கினான்.

''வெறியூட்டப்பட்ட படையாட்களை வைத்துக் கொண்டுதான் நாம் போர் நடத்துகிறோம்; ஆனால் அந்த வெறிச் செயல்களும் ஒரு நெறிக்குள் கட்டுப்பட்டு நிற்க வேண்டும். சோழ நாட்டில் பெண்கள் இல்லை என்பதற்காகவா நான் இந்தப் பாண்டிய நாட்டுக்குப் படையெடுத்து வந்திருக்கிறேன்? சுத்த வீரனைப்போல் நீ போருக்கு வருவதாக முந்திக் கொண்டு நின்றாயே, இதற்குத்தான் அப்படி நின்றாயா?''

இளவரசன் இராஜ இராஜனுக்கு இந்த விஷயத்தைப் பற்றித் தந்தையார் எதற்காக இவ்வளவு தூரம் கோபம் கொள்ள வேண்டும் என்று விளங்கவில்லை. போர் என்றால் இதையெல்லாம் இவர் பொருட்படுத்தலாமா?

''போர்வீரர்களின் கட்டுப்பாடு குலைந்து, அவர்களும் உன்னைப் போல் அலையும் அளவுக்கு அவர்களுக்கு நீ வழி காட்டியிருக்கிறாய்! தலைவனே தவறு இழைத்தால், படைக் கூட்டத்தை எப்படிக் கட்டுப்படுத்தி நடத்த முடியும்? இராஜ ராஜா! மதுரை மாநகரத்தை நான் அழிக்க நினைத்தேனே தவிர, அந்த நகரத்துப் பெண்களின் மானத்தை அழிக்க நினைக்கும் துணிவு எனக்கு இன்னும் ஏற்படவில்லை. நம்முடைய வீரர்களில் பலருக்கு நானே கொலைத் தண்டனை விதித்து, அதை உடனே நிறைவேற்றச் செய்திருப்பேன்; ஆனால் முதலில் உன்னையே என் வாளுக்கு இரையாக்க வேண்டுமே என்பதற்காக நான் அதைச் செய்யவில்லை.''

ஒரு பசுங் கன்றைத் தேர்க்காலில் கொன்றதற்காகத் தமது குமாரனையே அப்படிக் கொன்ற சோழர்களின் வழியில் வந்த குலோத்துங்கர்தாம் இப்படிப் பேசினார்.

''இராஜ ராஜா! க்ஷத்தியரின் இல்லத்திலிருந்து உன்னைக் கொண்டு வந்து மாளிகையில் தள்ள வேண்டிய அளவுக்கு, நீ நம் பணியாட்களுக்கு முன் னிலையில் தாழ்ந்து போனாய். உன்னுடைய இந்த வீழ்ச்சி உன்னை எங்கே கொண்டு போய் விடும் என்பதை நீ இன்னும் அறியவில்லை. இதனால் ஏற்பட்டுள்ள பழி பாவத்தை, இனி ஏற்படப்போகும் வஞ்சத்தை, எப்படி நீ துடைத்துக்கொள்ளப் போகிறாய்?''

குலோத்துங்கரின் செவிகளில் படை வீரர்களில் சிலர் வரம்புக்கு மீறி நடந்து கொள்வதாகச் செய்தி எட்டியது. அதை உடனடியாக விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்கும்படி பல்லவராயருக்குக் கட்டளையிட்டிருந்தார். பிறகு தான் அவருக்கே அதற்கான மூலகாரணம் விளங்கியது. நெறி கெட்டலைந்த வீரர்களுக்கு ஊக்கம் கொடுத்தவன் இராஜ இராஜன்!

''இதோ பார்! ஒரு தந்தை தன் மைந்தனிடம் பேசுகிற செய்தி அல்ல இது. சோழ சாம்ராஜ்யத்தின் எதிர்காலச் சக்கரவர்த்தியிடம் பேசுகிறேன். அரசாள்பவனைத் தெய்வம் என்று போற்றி மதிக்கும் நாடு இது. அரசியல் தலைமை என்பது உரிமையால் உனக்குக் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது. தலைவன் கோழையாகவோ, திறமையற்றவனாகவோ, தன்னலத்தால் கடமை மறந்து இன்பம் தேடுபவனாகவோ இருந்தால், அது அவனிடம் நிலைக்கவே நிலைக்காது. அரசுரிமையும் ஆட்சி பீடமும் எதிர்பார்க்கும் நீ, என்னிடமிருந்து எந்த அளவுக்கு அரச நீதியைக் கற்றுக் கொண்டிருக்கிறாய்? எந்த அளவுக்கு உன் தகுதிசளை வளர்த்துக் கொண்டிருக்கிறாய்? என் நிழலில், என் பெயரைச் சொல்லி, எவ்வளவு நாட்களுக்கு உன்னால் இந்நாட்டைக் கட்டி ஆளமுடியும்?''

குலோத்துங்கர் வேகமாக அந்த இடத்தை விட்டுத் திரும்பினார். இராஜ ராஜனும் அவரைப் பின்பற்றினான். மாளிகையின் மேல் மாடத்திலிருந்து கீழே இறங்கிய அவர், நேரே கட்டுக் காவல் நிறைந்த ஒரு கூடத்துக்குள் நுழைந்தார்.

அந்தப் போரில் கிடைத்த விலை மதிப்பற்ற பொன்னும் மணியும் அங்கே குவியல் குவியலாய்க் கிடந்தன. இராஜ ராஜன்கூட இவ்வளவு செல்வத் திரளை ஒரே இடத்தில் அதற்கு முன்பு தன் கண்களால் கண்டதில்லை. அவ்வளவுக்கும் அவை வெற்றி விழாவின்போது சோழ நாட்டு வீரர்களுக்கும் பாணர்களுக்கும் பரிசில்கள் அளித்தது போக மிஞ்சியிருந்தவை. கங்காபுரித் தலைநகரத்தின் தனபண்டாரத்திலே சேர்ப்பதற்கென்று சக்கரவர்த்தி அவற்றை ஒதுக்கி வைத்திருந்தார்.

திருமந்திர ஓலை நாயகரையும் தன பண்டாரத் தலைமை அதிகாரியையும் அழைத்து வரும்படி கட்டளை பிறந்தது. ஓடோடி வந்து வணங்கினர் அவர்கள்.

''கட்டளைகளை எழுதிக் கொள்ளுங்கள்!'' என்று சக்கரவர்த்தியின் ஆணை பிறக்கவே, ஏட்டில் எழுத்தாணி பதித்துக் காத்திருந்தார் ஓலைநாயகர்.

''இந்தப் பொருட் குவை எல்லாவற்றையுமே நான்காகப் பிரித்துப் பின் கண்ட தெய்வப் பணிகளுக்காக உரிமை

யாக்கி விட வேண்டியது: ஒன்று, தென் மதுரைத் திருவாலவாயன் கோவில் திருவிழாக்களுக்கும் அவன் கோவில் கோபுரங்களில் பொன் வேய்தற்கும். இரண்டு தில்லையில் ஆடும் அம்பலவாண ருக்கும் அவர் தம் திருநடனம் கண்டு அரு ளும் பாடகப் பைங்கிளிக்கும். மூன்று, பொன் மதில் திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு. நான்கு, திரிபுவன வீரீச்சுர தேவருக்கு. பாண்டிய நாட்டி லிருந்து பெற்ற இந்தப் பொருள்களை அந்தப் போரில் அறிந்தும் அறியாமலும் நடைபெற்றிருக்கக் கூடிய பழி பாவங் களுக்குப் பிராயச் சித்தமாக இறைவ னுக்கு மேற்கண்டவாறு காணிக்கை யாக்குகிறோம்.''

சக்கரவர்த்தி கடைசியாகக் கூறிய சொற்கள் கூர்மையான ஈட்டி முனை போல் இராஜ இராஜனின் நெஞ்சில் பாய்ந்தன. அதைவிட மிகுதியாக, அவன் அந்தப் பொருட் குவை போய் விட்டதற்காக வருந்தினான்.

அன்றைக்கு ஆலவாயன் கோவிலுக்குச் சென்று நெடுநேரம் சிலையாகச் சமைந்து நின்று அவன் திருவடிகளைத் தொழுதார் குலோத்துங்கர். தம் குமாரனையும் வணங்கச் செய்தார். தன் தந்தையின் செய்கை ஒவ்வொன்றுமே அவன் விருப் பத்துக்கு விரோதமாயிருந்தது. ஆனா லும் அச்சத்தால் பணிந்து நடந்தான்.

''ஆலவாய் அண்ணலே! விஜயாலய சோழர் கனவு கண்டு இந்த சாம்ராஜ் யத்துக்கு அடித்தளமிட்டார். இராஜேந் திர சோழர் இதை மாபெரும் சாம் ராஜ்யமாக்கி உலகப் புகழோடு சிறந் தோங்கச் செய்தார். நானும் எனது முன்னோர்களின் அடிச்சுவட்டை மற வாது இன்றுவரை இதைக் கட்டிக் காத்து விட்டேன். எனக்குப் பின்பு ? எனக்குப் பின்பு?''.... தமக்குத் தாமே கூறிக் கொள்பவர் போல், தழுதழுத்த குரலில் மன்றாடினார் அவர்.

வியப்பும் வெறுப்பும் அடைந்தான் இராஜ ராஜன். எத்தனையோ கோடி மக்கள் அடி பணியக் காத்து நிற்கும் ஒருவர், பல லட்சம் படை வீரர்களைச் சாவை நோக்கி ஏவி விடும் அதிகாரம் படைத்த ஒருவர், ஆயிரமாயிரம் அதி காரிகளை ஆட்டிப் படைத்து நாட்டில் ஆட்சி நடத்தும் ஒருவர் இப்படியா கோவிலில் கண்ணீர் வடித்து நிற்பது ?

அன்றைக்கு இரவில் சக்கரவர்த்தி உணவு கொள்ளவில்லை. உறக்கம் வராமல் போகவே, மீண்டும் இராஜ ராஜனை அருகில் அழைத்து வைத்துக் கொண்டார். அவனுக்கு இது வேதனை யைத்தான் கொடுத்தது.

''நான் சாம்ராஜ்யத்துக்கே தலை வன். ஆனால், இந்த ஈரேழு உலகங் களுக்குமே தலைவனான ஒருவனுக்கு அஞ்சிக் கட்டுப்பட்டு, அன்பு செலுத்தி வாழ்பவன். அவனைத்தான் நாம் இன்று கோவிலில் கண்டு வந்தோம். அந்தத் தலைவன் தன்னைப் பின்பற்றுகிற வர்களுக்காக என்ன தியாகம் செய்தான் என்று உனக்குத் தெரியுமா?''

வயது மிகுந்தவரின் பொருளற்ற பேச்சு என்று எண்ணிப் பேசாதிருந் தான் இளைஞன்.

''தன்னை நம்பியவர்களை வாழ வைப்பதற்காக ஆலகால விஷத்தையே உண்டவன் இந்தத் தலைவன். தலைவ னுக்கு உரிய முதல் தகுதி தியாகசித்தம். அதனால்தான் எத்தனையோ விருதுப் பெயர்கள் எனக்கு இருந்தாலும், என் னைத் 'தியாக விநோதன்' என்று குடி மக்கள் அழைக்கும்போது நான் மட் டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.''

இதுவரை விளங்காதிருந்த ஒரு புதிர் இப்போது விளங்குவது போல் தோன்றி யது அடுத்த தலைமுறையாளனுக்கு.

''இதோ பார்! குடிமக்களும் 'தலை வன் எப்படியிருந்தாலும் தலைவன்தான்' என்று ஏற்றுக் கொள்ளுகிறவர்களாக இல்லை. காலப்போக்கில் அவர்களும் விழிப்படைந்து வருகிறார்கள். அவர் களுக்காகத் தியாகம் செய்யத் துணி யாதவர்களிடம் இனி அவர்கள் கட்டுப் பட்டுப் பணிய மாட்டார்கள். நீ என்ன செய்கிறாய், எப்படி வாழ்கிறாய் என் பதை உனக்குக் கீழே உள்ள ஒவ்வொரு வனும் காணத் துடிப்பான். உன் னுடைய தலைவனாகிய இறைவனும் 'இமைப் பொழுதும் நெஞ்சத்தில் நீங் காது நின்று' உன்னைக் கண்காணித்து வருவான். ஆகவே, நீ அரசியல் வாழ்வு நடத்த வேண்டுமானால், நீ தலைவனாக வேண்டுமென்றால், உனக்குத் தியாக சிந்தையே முதல் துணை !''

''இனி நான் விழிப்போடிருக்க முயல் கிறேன்'' என்றான் இராஜ ராஜன்.

''சென்று வா! விதியுடன் போராடி வெற்றி பெறத் துடிக்கிறேன் நான். என் காலத்தில் என்னுடனேயே நீ வாழ்ந்தும், என் பாதையில் நடக்க நீ பழகிக் கொள்ளவில்லை. உன்னை நான் உருவாக்கி விட்டால், உன் தலைமுறை யில் மட்டுமல்ல, உனக்குப் பின்பு வரக் கூடிய பல தலைமுறைகளுக்கும் இந்த சாம்ராஜ்யம் சிறப்போடு விளங்கும். இல்லையேல் உன் தலையில் நீயே தீயிட்டுக் கொண்டவனாவாய்.''

அவன் எழுந்து சென்றான். சக்கரவர்த் தியின் உடலெங்கும் தீப்பற்றி எரிவது போல் ஒரு வேதனை பரவியது. (தொடரும்)

படம் பிடிக்கும் போதினிலே



"பறக்கும் பந்து" என்ற பாட்டும், அது பாடப்படும்போது கேட்கும் 'ணங் ணங்' என்ற தாளம் தவறாத ஒலியும், அதற்கேற்பப் பந்து துள்ளிப் பாய்ந்ததும், 'பணக்காரக் குடும்ப'த்தில் பலரும் பார்த்து மகிழ்ந்த காட்சி. அதே படத்தில் "வாடியம்மா வாடி" என்ற சடுகுடு விளையாட்டுப் பாட்டும் அந்தக் காட்சியும் மறக்க முடியாத காட்சியாகப் பதிந்து விட்டன. மேற்படி புதுமையான காட்சிகளைப் புகுத்திப் பெயரைத் தட்டிக் கொண்ட ப்ரொட்யூசர் — டைரக்டர் யார் தெரியுமா? ஆர். ஆர். பிக்சர்ஸாரின் உரிமையாளரான டைரக்டர் ராமண்ணா தான்.

இதை அவரிடம் நான் கூறிய போது அவர் சிரித்துக் கொண்டே, "நீங்கள் பாராட்டிக் கூறும் பறக்கும் பந்து பாட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒரு முறை பதிவு செய்யப்பட்டது. ஆனால் தாளத்துக்கு ஏற்பப் பந்தடித்து விளையாடி நடிப்பதென்பது அசாத்தியம் எனக் கருதிக் கைவிடப்பட்டது. எனது வற்புறுத்தலுக்கு இணங்கி ஸ்ரீ விசுவநாதன்–ராமமூர்த்தி நமது படத்துக்கு அப்பாடலைப் பதிவு செய்து கொடுத்தார்கள். நான் எதிர் பார்த்த வெற்றி கிட்டியது!" என்றார்.

டைரக்டர் ராமண்ணா இளைஞர். பல நாட்கள் பழகியவர்போல் புதிய மனிதர்களிடமும் பழகும் பண்புள்ளவர். சில சினிமாக் காரர்களைப் போல் வீட்டுக்குள் இருந்து கொண்டே 'இல்லை' என்று சொல்லிப் பழக்கமில்லாதவர். அவருடைய இனிய சுபாவமே அவரை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறது என்றால் தவறில்லை.

"ஒரு படத்தை நல்ல முறையில் உருவாக்கும் பொறுப்பு முழுவதும் 'டெக்னீஷியன்'களிடம்தான் இருக்கிறது. அவர்களால் நட்சத்திரங்களை உருவாக்கவும் முடியும்; உருத் தெரியாமல் அழிக்கவும் முடியும். பொறுப் புணர்ந்து அவர்கள் செயலாற்றுகிறார்கள். ஆனால் துர்ப்பாக்கியவசமாக நட்சத்திரங்களுக்கு இருக்கும் மதிப்பு அவர்களுக்கு இல்லை" என்றார் டைரக்டர் ராமண்ணா.

பிராக்ஜோதி ஸ்டுடியோவில் ஒலிப்பதிவாளராக நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்ற ராமண்ணா நெப்டியூன் ஸ்டுடியோவிலும், நியூடோன் ஸ்டுடியோவிலும் ஒலிப்பதிவாளராக இருந்து அநுபவம் பெற்றுப் பிறகு ஆர். ஆர். பிக்சர்ஸ் என்ற ஸ்தாபனத்தைத் தொடங்கினார். இவர் சகோதரி டி. ஆர். ராஜகுமாரி நடித்த "வாழப் பிறந்தவள்" இவர் டைரக்ட் செய்த முதல் படம். சிவாஜியும், எம். ஜி. ஆரும் சேர்ந்து நடித்த முதல் படமான "கூண்டுக் கிளி" இவருக்கு இன்றைக்கும் நல்ல வசூலை அளித்து வரும் படம் என்பதோடு அன்றைக்கு ரசிகர்கள் எம். ஜி. ஆர். கோஷ்டி என்றும் சிவாஜி கோஷ்டி என்றும் பிரிந்து தியேட்டரிலேயே மல்யுத்தம் நடத்தக் காரணமாயிருந்த படம்! எம். ஜி. ஆர். நடித்த "குலேபகாவலி" வசூல் விஷயத்தில் டைரக்டர் ராமண்ணாவின் வெற்றிப் படம்.

"பெரிய நடிகர்களைப் போட்டு எடுப்பதனால் கால தாமதம் ரொம்ப ஆகிறதே, நீங்கள் புது முகங்களைப் போட்டுப் படம் எடுக்காததற்குக் காரணம் என்ன?"

"ஸ்டுடியோ வசதிகள் உள்ள பெரிய படாதிபதிகள்தான் புது முகங்களை வைத்துப் படம் பிடிக்க முயற்சி எடுக்க வேண்டும். சிறிய படாதிபதிகள் அதை நினைத்துப் பார்க்கவே முடியாது. பட விநியோகஸ்தர்களின் தயவில் சின்னப் படாதிபதிகள் இருக்கும் வரையில் புது முகங்களைப் படத்தில் புகுத்துவது சாத்தியமில்லை. விநியோகஸ்தர்கள் அம்மாதிரிப் படங்களை ஏறிட்டுக்கூடப் பார்க்க மாட்டார்கள்....." என்று கூறினார்.

"இப்பொழுது படங்கள் எப்படித் தயாராகின்றன?"

"இன்னின்ன நடிகருக்கு இன்னின்ன மாதிரி வசனங்கள், காட்சிகள் வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டு படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்தத் திட்டத்தில் ஒரு சிறு தவறு நேரிட்டால் விநியோகஸ்தர்கள் படத்தில் முதலீடு செய்ய முன்வர மாட்டார்கள். இந்த நிலை மிகவும் வருந்தத் தக்கதுதான்."

டைரக்டர் ராமண்ணா கூறியதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை. புது முகங்களுக்குப் படங்களில் இடம் வேண்டுமானால் பெரிய படாதிபதிகள்தான் பெரிய மனம் வைத்துத் துணிந்து புகுத்த வேண்டும். வேறு வழியில்லை.

—விஜயம்

இளைய பாரதத்தினர்



புதுதில்லியில் ஸ்ரீமதி ருக்மிணி சுந்தரராஜனைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. பல பொது ஸ்தாபனங்களில் நிர்வாகப் பதவி ஏற்றுத் திறம்பட உழைத்தவர். அவர் வாழ்க்கைத் துணைவர் திரு சுந்தரராஜன் ஒரு நிகரற்ற இளைய பாரதத்தினர். இந்தியன் விமான கார்ப்பொரேஷனில் உத்தியோகம் பார்க்கும் அவர் பன்முறை கிளைடரில் பறந்து சென்று அகில இந்திய ரிகார்டுகளைத் தகர்த்தெறிந்திருக்கிறார்.

ருக்மிணியாரின் தந்தை காலஞ் சென்ற ஸ்ரீ ஏ. எஸ். அய்யங்கார் சுதந்திர இந்தியாவின் முதல் செய்தித் துறை அதிபர். அவரைப் பற்றிக் காலஞ் சென்ற பேராசிரியர் கல்கி ஒரு ருசிகரமான கட்டுரை தீட்டியிருந்தார். அப்போது இரண்டாவது யுத்தம்



மும்முர காலம். சரித்திர சம்பந்தமான சில தஸ்தாவேஜுகளைப் பரிசீலிக்கக் கல்கி அவர்கள் அய்யங்காரைப் பேட்டி காணச் சென்றிருந்தார். சிவப்புநாடா மலிந்த அந்தச் சூழ்நிலையில் தம் காரியம் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆயினும் வெற்றி கிட்டி விட்டது. அதைப் பற்றி ரத்தினச் சுருக்கமாய்த் தமக்கே உரிய பாணியில் கல்கி அவர்கள், ''ஏ. எஸ். ஐயங்கார் ஓ.எஸ். என்றார்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

எதற்காக இந்தப் பூர்வபீடிகை என்றால் இந்தப் பரம்பரையில் வந்த குமாரி ஹேமா பரத நாட்டிய வானில் ஒரு புதிய தாரகையாய்த் திகழ அறிகுறிகள் அளிக்கிறாள். படிப்பிலே கெட்டி. ஆங்கிலம், பஞ்சாபி, ஹிந்தி (ஏன் தமிழிலும் கூடத்தான்) எல்லாம் தண்ணீர்ப் பாடம். இருபத்தி நான்கு மணி நேரம் பரதம் பயிலச் சொன்னாலும் அதற்குத் தயாராயிருப்பாள் குமாரி ஹேமா. சுமார் ஏழெட்டு வருடங்களாக உழைத்து இப்போது வெற்றிகரமாக முழுநேரக் கச்சேரிகள் செய்கிறாள். ''ஆறே மாதத்தில் அரங்கேற்றம்'' என்ற குழுவினரிடம் பழகாமல் நல்ல சிக்ஷையின் பயனைப் பெற்றவள். அடவுகள் சுத்தமாகவும், தட்டி — மொட்டக் கவுகள் பளிச்சென்றும், காலப் பிரமாணம் வழுவாமலும் ஓட்டாமலும் கூடிய வரை பாவங்களைப் புரிந்து கொண்டு பிடித்தும் ரஸிகர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகி வருகிறாள்.



இதில் அவளுடைய குரு திரு கே. என். பக்கிரிசாமிப் பிள்ளை அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அகில இந்திய ரேடியோவின் வேலையை உதறித் தள்ளி விட்டு முழு நேரப் பாரதத்தில் ஈடுபட்டு வருகிற இவரிடம் காணப்படும் முக்கியமான அம்சம் சம்பிரதாய சுத்தம். ''டிடககதரிகிடதோம்''களும், சஞ்சாரி பாவங்களும் உயர்வாக இருக்கும். ஜனரஞ்சகமாக இருக்க வேண்டி ரஸக்குறைவான அம்சங்களைப் புகுத்த மாட்டார். அது ஒன்றே போதாதா இந்தக் காலத்தில்.

குமாரி ஹேமாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பது அன்று அவள் பார்த்தசாரதி ஸ்வாமி சபாவில் செய்த முழு நேரக் கச்சேரியில் வெளியாயிற்று.

— சுப்புடு



நம் தமிழ் நாட்டின் தனிச்சிறப்பு பரதநாட்டியம். 'காரினில் செருக்கிய கலாபமஞ்ஞைபோல் நாரியர் ஒரு நடம் நடிப்ப' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பர் நடனத்தின் சிறப்பை நவின்றுள்ளார். கார்மேகத்தைக் கண்ட மயில் உவகையோடு தோகை விரித்தாடுவதுபோல், முதல் அரங்கேற்றத்திலேயே தன் திறமையனைத்தும் பளிச்சிட அதியற்புதமாக ஆடினாள் குமாரி ஜெயஸ்ரீ. பன்னிரண்டே வய

ஜெயஸ்ரீயின் நாட்டியம்

தான இவ்விளம் சிறுமிக்கு நடனம் கற்றுத் தந்தவர் நடன ஆசிரியர் கே. லக்ஷ்மண். அடையாற்றில் ஸ்ரீ கலாலயா என்னும் கலை நிறுவனத்தை நிறுவிச் சிறப்புடன் கலைக்கும் கல்விக்கும் தொண்டாற்றிவரும் லீலாசுவாமியின் புதல்வியான ஜெயஸ்ரீ ரஸிக ரஞ்சனி சபையில் சமீபத்தில் ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் தலைமையில், நீதிபதி ஸ்ரீ அனந்த நாராயணன் அவர்கள் முன்னிலையில், ஆனந்த நடனமாடினாள். தாளத்தை அடிப்படையாகக் கொண்ட நிருத்தத்தில் இவள் சொற்கட்டு பிறழாமல் ஆடியது சபையோரைப் பிரமிக்க வைத்தது. பழனி விஜயலக்ஷ்மியின் பின்னணி இசை நடனத்துக்கு மெருகூட்டுவதாக அமைந்தது.


இரண்டு மணி நேரம் சபையோரைச் சலிக்க வைக்காமல் விறுவிறுப்புடன் ஆடி, ஆண்டாள் திருப்பாவையுடன் ஜனரஞ்சகமாக முடித்த ஜெயஸ்ரீ அன்று அனைவரது பாராட்டுதல்களுக்கும் உரியவளானாள். முதல் அரங்கேற்ற வைபவத்துக்குச் சபை நிறையக் குழுமியிருந்தது உற்சாகமளிக்கக் கூடியதா யிருந்தது.

அன்று இந்தப் பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு நன்றி நவின்ற பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள், 'ஜெயஸ்ரீயின் நடனத்தில் நவின பாணி கலக்காமல் சுத்த பரத நாட்டியம் நிலவுவது பாராட்டுக்குரிய அம்சம்' என்று கூறினார். குமாரி ஜெயஸ்ரீ விரைவில் நடன உலகில் ஒரு தாரகையாகப் பிரகாசிப்பாள் என்பது அன்று நடந்த அரங்கேற்ற வைபவத்திலே நிதரிசனமாகத் தெரிந்தது.


வீரசிம்மனை விரட்டியடிக்கும் தன் திட்டத்தைச் செயல்படுத்தக் கிராமத்தை நோக்கிக் கிளம்பினான் சோமு.
நண்பா! நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். நீ உன் குதிரையுடன் அங்கு தயாராக இரு.
ஆளப்பிறந்தவன்
கதை ராஜி
5
சித்திரம் வினு
அரண்மனையில் யாரிடமும் வீரசிம்மனின் சதித்திட்டத்தைச் சொல்ல வேண்டாமென்கிறான் சோமு. ஏதாவது விபரீதம் நிகழுமானால்! ம்... சோமுவின் திறமையில் எனக்கு நம்பிக்கைதான்.
இரவைப் பகலாக்கும் இந்த நிலவிலே சோமுவின் திட்டம் வெற்றிகரமாகக் கை கூடுமோ? அடர்ந்த மரங்களின் நிழல் படிந்த இடங்கள் பயங்கரமாகவே இருக்கின்றன.
சோமு குறிப்பிட்ட இடம் இதுதான். இங்கு யாரையும் காணவில்லையே..? சோமுவையும் இன்னும் காணோம்... ஒருவேளை.. அது என்ன சப்தம்...?
சோமு, உன்னைக் காணாமல் நான் எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா!
மெதுவாகப் பேசு.


அதோ அந்தப் புழுதிப் படலத்தைப் பார். அது வீரசிம்மனும் அவன் ஆட்களுமாகத்தான் இருக்க வேண்டும்
கீழே இறங்கித் தயாராக இருப்போம் வா.
நில் அப்படியே! ஓர் அடி முன்னேறினாலும் உன் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படும்.
இந்தக் கானகத்தில் எனக்குக் கட்டளை இடுவது யார்?
உன் அரசன் ஜயசிம்மன் தான் உனக்குக் கட்டளை இடுகிறான்.
ஹ..ஹ. ஹா! சுண்டெலியே எனக்கு நீயா அரசன்? யாரங்கே. அந்தப் பையனைக் கட்டிக் கொண்டு வாருங்கள்.
என்னை நெருங் காதீர்கள். எச்சரிக்கிறேன். என் அருகே வந்தால் இக் கானகத்தில் உள்ள பிசாசுகள் உங்களை.....
பிசாசாம் பிசாசு! பூச்சாண்டியா காட்டுகிறாய்? உன் பிசாசுகள் என்ன செய்யும் பார்ப்போம்.. ஹ. ஹா!


உ...ஊ..ம் க்கும்...ம்
இதோ பார் பிசாசுகளை
ஐயோ! பிசாசு! இவைகள்மட்டும் தனியாக... ஓ ஓ...!
ஏன் இப்படிப் பேயைக் கண்டவர்களைப் போல ஓடுகிறீர்கள்! நில்லுங்கள்
ஆ.. ஐயோ! இது மாதிரியே பிசாசுகள் தான் போலிருக்கிறது.. வள்ளலே உதவுங்கள்....
வெள்ளைக் காகிதப் பட்டங்களில் விசித்திரமான முகங்களை வரைந்து பறக்க விட்டபடியே கீழே குதித்து ஓடுவதில் வேடிக்கை தான்!
உங்களைப் போன்ற நண்பர்கள் இருக்கும் போது நான் எத்தனை வீர சிம்மங்கள் வந்தாலும் அஞ்ச மாட்டேன் தோழர்களே! உங்களுக்கு எல்லாம் நாளைக்கு அரண்மனையில் விருந்து
தொடரும்





இன்பமான கனவுகள் உட்வர்ட்ஸுக்கு நன்றி!

மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும்
பல்முளைக்கும்போதுள்ள உபாதை
களிலிருந்து உடனடி நிவாரணம்பெற
உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர்
உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Alyars ATC-508 TAM A



நீண்ட

நெடுந்தொலை நடந்த பதினாயிரம் பேர்

வெ. சாமிநாத சர்மா



கிறிஸ்து சகத்துக்குச் சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால், கிரீஸில் முக்கியமான சாம்ராஜ்யங்களாயிருந்தவை இரண்டு. ஒன்று ஆத்தென்ஸ், மற்றொன்று ஸ்ப்பார்ட்டா. இவை இரண்டுக்கும் எப்பொழுதும் பிணக்கு இருந்து வந்தது. ஆனால் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டின் முற்பகுதியில் பாரசீக சாம்ராஜ்யம் கிரீஸின் மீது இரண்டு தடவை படையெடுத்து வந்தபோது, இரண்டு தடவையும் இந்த இரண்டு ராஜ்யங்களும் ஒன்று சேர்ந்து அந்தப் பாரசீகத்தை எதிர்த்து நின்றன; வெற்றியும் கண்டன. இந்த வெற்றி இவற்றின் நிதானத்தை இழக்கும்படி செய்துவிட்டது. இரண்டுக்கும் கடுமையான போர் மூண்டது. இதற்குத்தான் பெலொப்பொனேஸியப் பெரும் போர் என்று பெயர். சரித்திரப் பிரசித்திபெற்ற இந்தப் போர், கி. மு. 431 முதல் 404ம் வருஷம் வரை சரியாக இருபத்தேழு வருஷ காலம் நடைபெற்றது. இதன் விளைவாக இரண்டுமே அழிந்துபட்டன.

பெலொப்பொனேஸியப் பெரும் போரின் கடைசிக் காலத்தில் பாரசீகத்தை ஆண்டு வந்தவன் இரண்டாவது டேரியஸ் என்பவன். இவனுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பெயர் இரண்டாவது அர்ட்டாக்ஸெர்க்ஸெஸ்; இளையவன் பெயர் ஸைரஸ். இவர்களுடைய தாயார் பாரிஸாட்டிஸ் என்பவள். மூத்த மகனைக் காட்டிலும் இளைய மகனிடத்தில் அதிக பிரியம் வைத்திருந்தாள்.

டேரியஸ் மன்னன் காலமாவதற்குச் சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு, இளைய மகனை



நடை பயணங்கள்

ஸைரஸை, பாரசீக சாம்ராஜ்யத்துக்குட்பட்ட சின்ன ஆசியா என்கிற பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு அரசப் பிரதிநிதியாகவும், அதாவது கவர்னராகவும், அதே சமயத்தில் அங்கு நிறுவப்பட்டிருந்த பாரசீகப் படைகளுக்குத் தலைவனாகவும் நியமித்து அங்கு அனுப்பியிருந்தான். மேற்படி பகுதியின் தலைநகரம் ஸார்டிஸ் என்பது. ஸைரஸ் அங்கு சென்று அரசாங்கத்தை நடத்தி வந்ததோடு, பெலொப்பொனேஷியப் பெரும் போரில் ஆத்தென்ஸுக்கு விரோதமாக ஸ்ப்பார்ட்டாவுக்கு உதவி செய்து வந்தான்.

டேரியஸ் மன்னன் தன் மரண காலம் வெகு தொலைவில் இல்லை என்று தெரிந்ததும், தன் இரண்டு பிள்ளைகளும் தன்னோடு இருக்க வேண்டும் என்று விரும்பினான். ஏற்கனவே மூத்த மகன் தன்னோடு இருக்கிறபடியால், இளைய மகனுக்கு ஆள் விட்டனுப்பி வரும்படி செய்தான். ஸைரஸும், அப்படியே சின்ன ஆசியாவின் மற்றொரு பகுதியின் கவர்னராகவும் சேனாதிபதியாகவும் இருந்த டிஸ்ஸாபெர்னீஸ் என்பவனையும், தன் சேவையில் அமர்ந்திருந்த முந்நூறு கிரேக்க காலாட் படை வீரரையும் அழைத்துக் கொண்டு, டேரியஸ் மன்னன் இருந்த ஸூஸா நகரம் வந்து சேர்ந்தான்.

டேரியஸ் மன்னன் கி. மு. 405ம் வருஷம் இறந்து விட்டான். மூத்த மகனான அர்ட்டாக் ஜெர்க்ஸஸ் அவனுக்குப் பதில் அரச பீடத்தில் அமர்ந்தான். ஸைரஸ் எந்த டிஸ்ஸாபெர்னீஸை, தன் உற்ற நண்பனாகக் கருதி அழைத்து வந்தானோ அந்த டிஸ்ஸாபெர்னீஸே ஸூஸா நகரம் போந்த சொற்ப காலத்துக்குப் பிறகு ஸைரஸுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தான். அதாவது ஸைரஸ் அரச பதவிக்குப் போட்டியிடுவதாக அர்ட்டாக் ஜெர்க்ஸஸிடம் கோள் மூட்டி விட்டான். அர்ட்டாக் ஜெர்க்ஸஸும் இதை நம்பி, ஸைரஸைச் சிறைப் படுத்திக் கொன்றுவிட ஏற்பாடு செய்தான். ஆனால் அவனுடைய தாயார் பாரிஸாட்டிஸ், ஸைரஸுக்காகப் பரிந்து பேசி அவனுக்கு உயிர்ப் பிச்சை வாங்கிக் கொடுத்தான்.

தலை தப்பினால் போதுமென்ற நிலையில் ஸார்டிஸ் நகரம் திரும்பிவந்த ஸைரஸ், அர்ட்டாக் ஜெர்க்ஸஸ் மீது பழி வாங்கவும், முடிந்தால் அவனுடைய அரச





பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும் முனைந்தான். இதற்காக ஒரு படை திரட்ட முயன்று ஸ்ப்பார்ட்டாவின் உதவியை நாடினான். பெலொப்பொனேசியப் பெரும் போரில் இவனுடைய உதவியை ஸ்ப்பார்ட்டா பெற்றிருந்ததால் அதற்குப் பிரதியாகவே இப்பொழுது உதவி கேட்டான். தவிர இவனுக்குப் பொதுவாகக் கிரேக்கர்களின், சிறப்பாக ஸ்ப்பார்ட்டர்களின் போர்த் திறமையில் அதிகமான நம்பிக்கை. ஒரு காலாட்படையைத் திரட்டினான் ஸைரஸ். இவர்களுக்குச் சகல வசதிகளையும் தருவதாக உறுதி கூறினான். சுமார் பதின்மூன்றாயிரம் பேர் கொண்ட இந்தப் படைக்கு, ஸ்ப்பார்ட்டா அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்டுச் சின்ன ஆசியாவில் அப்பொழுது வசித்துக் கொண்டிருந்த கிளியார்க்கஸ் என்பவனைத் தலைவனாக நியமித்தான். ஸ்ப்பார்ட்டா அரசாங்கமும் எழுநூறு பேர்கள் கொண்ட ஒரு காலாட் படையை உதவியது.

இங்ஙனம் ஸைரஸ் படை திரட்டியது, ஸ்ப்பார்ட்டா உதவியது எல்லாம் ரகசியமாகவே நடைபெற்றன. அர்ட்டாக் ஜெர்க்ஸஸுக்குத் தெரிந்தால் எதிர்நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராவானல்லவா? மற்றும், திரட்டப் பெற்ற படையினருக்குக் கூட, யாரோடு போர் செய்ய வேண்டும், எங்கே சென்று போரிட வேண்டும் என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட வில்லை. ஏனென்றால், இவர்களிலேயே சிலர் அர்ட்டாக்ஜெர்க்ஸஸிடம் விசுவாசமுள்ளவர்கள் இருக்கக் கூடும்; சிலர் தொலை தூரம் செல்ல விரும்பாதவர்களாயிருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு முன் கூட்டித் தெரிவிப்பது உசிதமாயிராதல்லவா?

இந்தப் படையில், நல்ல ஊதியம் கிடைக்கும் என்பதற்காகவும், போர்க்களத்து அநுபவம் பெற வேண்டும் என்பதற்காகவும் ஜெனபன் என்ற ஓர் ஆத்தினியன் சேர்ந்து கொண்டான். இவன், மகான் ஸாகரட்டீஸின் சீடன்.

ஸைரஸ், இந்தப் படையுடன் கி. மு. 401ம் வருஷம் மார்ச்சு மாதம் ஸார்டிஸ் நகரத்தை விட்டுப் புறப்பட்டான். புறப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு அதாவது சுமார் முந்நூறு மைல் தூரம் வந்த பிறகு அர்ட்டாக்ஜெர்க்ஸஸை எதிர்த்துப் போரிட அழைத்துச் செல்லப்படுவதாகப் படையினர் ஒருவாறு ஊகித்துக் கொண்டனர். முணுமுணுக்கத் தொடங்கினர். கிளியார்க்கஸ், தான் உத்தரவிடுகிற இடத்துக்குச் செல்ல வேண்டும் என்று அதிகார தோரணையில் சொல்லிப் பார்த்தான். பயனில்லை. அவனைத் தாக்க முற்பட்டனர். அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் போலிருந்தது. உடனே அவன் நயமான முறையில் பேசினான். படையினரும் மேற்கொண்டு செல்ல அரை மனத்துடன் ஒப்புக் கொண்டனர்.

முதலில் சிறிது தூரம் கிழக்காகவும், பிறகு தெற்கு, தென் மேற்கு இப்படி மாறி மாறிப் பல திருப்பங்களையும், சிற்றாறுகள், குன்றுகள் முதலிய பலவற்றையும் கடந்து சுமார் இருநூறு மைல் தூரம் வந்தனர். அப்பொழுது ஸார்டிஸ் நகரத்திலிருந்து புறப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியிருந்தது. இது வரையில் தங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தபடி சம்பளம் கொடுக்கப்பட வில்லை என்றும், இதைத் தீர்த்துக் கொடுத்தால்தான் மேற்கொண்டு செல்ல முடியுமென்றும் படையினர் கிளர்ச்சி செய்தனர். ஸைரஸ் வசம் அப்பொழுது போதுமான பணம் இல்லை. நல்ல வேளையாக, ஸிலீஷியா என்ற ராஜ்யத்தின் அரசி, ஸைரஸ் மீது கொண்ட இரக்கத்தினாலோ, கிரேக்கப் படையினரால் தன் ராஜ்யத்துக்கு எவ்வித தொந்தரவும் ஏற்படக் கூடாதென்பதற்காகவோ, ஒரு பெருந் தொகையைக் கொண்டு வந்து கொடுத்தாள். படையினருக்கு இந்தத் தொகை பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களும் ஒருவாறு அமைதியடைந்து மேலே செல்ல முற்பட்டனர்.

போரில் வல்ல ஒரு கிரேக்கப் படையை அழைத்துக் கொண்டு தனக்கு விரோதமாக, தன் இளைய சகோதரன் படையெடுத்து வருவது அர்ட்டாக்ஜெர்க்ஸஸுக்குத் தெரிந்தது. தெரியாமல் இருக்குமா? அவனும் சுமார் நான்கு லட்சம் பேர் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு ஸைரஸை எதிர் நிற்கத் தயாரானான்.

ஸைரஸின் கிரேக்கப் படை ஸூஸா நகரத்தை அடைவதற்கு முன்பு, சுமார் இருநூற்றெழுபது மைல் தூரத்துக்கு ஒரு பாலைவனத்தைக் கடக்க வேண்டியிருந்தது. புல் பூண்டுகளே இல்லாத இந்தப் பகுதியில் சென்ற போது, படையினரில் ஒரு சிலர் நோய்வாய்ப்பட்டுப் போயினர். கடைசியில் எப்படியோ கி. மு. 401ம் வருஷம் மார்ச்சு மாதம் ஸார்டிஸ் நகரத்தை விட்டுப் புறப்பட்ட இந்தப் படை செப்டம்பர் மாதம், அதாவது புறப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஆயிரத்தைந்நூறு மைல் தூரம் நடந்து வந்து குனக்ஸா என்ற இடத்தை அடைந்தது.

குனக்ஸாவில் ஸைரஸ் படையும் அர்ட்டாக்ஜெர்க்ஸஸ் படையும் சந்தித்தன. கடுமையான போர் நடைபெற்றது. கிரேக்கர்கள் காட்டிய வீரத்தினால், ஸைரஸ் பக்கம் வெற்றி கிட்டும் போலிருந்தது. ஆனால் கடைசி சமயத்தில், ஸைரஸ், அர்ட்டாக்ஜெர்க்ஸஸைத் தன் கையாலேயே கொன்று தீர்க்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் போர்க்களத்தின் நடுவில் புகுந்தான். புகுந்த சிறிது நேரத்துக்குள் அர்ட்டாக்ஜெர்க்ஸஸ் படையினரால் இவனே கொலை செய்யப்பட்டு விட்டான். இவனுடைய தலையும் ஒரு பக்கத்துத் தோளும் துண்டிக்கப்பட்டு விட்டன. இவன் கொலையுண்டது தெரிந்ததும், கிரேக்கப் படையினர் பின்வாங்கிக் கொண்டு விட்டனர். அர்ட்டாக் ஜெர்க்ஸஸ் வெற்றிக்கொடி நாட்டி விட்டான்.

இதற்குப் பிறகு கிரேக்கப் படையினரின் நிலைமை என்ன? அர்ட்டாக் ஜெர்க்ஸஸ் இவர்களைச் சரணடையும்படி சொல்லியனுப்பினான். இவர்கள் மறுத்து விட்டனர். இவர்கள் போக்குக்கே விட்டு விட்டால், கிரீஸுக்குத் திரும்பும் முயற்சியில் திக்குத் திசை தெரியாமல் தவித்துப் பட்டினியால் செத்துப் போவார்கள் என்பது அர்ட்டாக் ஜெர்க்ஸஸின் எண்ணம்.



சூடாக ஒரு கப் தேயிலை
அருந்தியபின் ஏற்படும்
புது மலர்ச்சியே அலாதிதான்!

நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்

டாடா-ஃபின்லே
தேயிலை

ஈடில்லாத தேயிலை!

புத்தம் புது தேயிலை
•
சுவையுள்ள தேயிலை
•
சிறந்த தேயிலை

டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!

பின்வரும் ஐந்து ரகங்களில்
கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜிலிங்-டின்னில
லலித் பொன்னிற அட்டைப்
பெட்டியில
மிலாப் வெள்ளிநிற அட்டைப்
பெட்டியில
பஹாதூர் ஆரஞ்சு நிற
அட்டைப் பெட்டியில
ஷான் நீலநிற அட்டைப்பெட்டியில



கிரேக்கர்களுக்கு எப்படியாவது தாய் நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட வேண்டு மென்று ஒரே ஆவல். ஆனால் வந்த வழியே திரும்பிச் செல்ல இவர்கள் விரும்பவில்லை. மீண்டும் ஆயிரத்தைந்நூறு மைல் நடக்க வேண்டுமல்லவா? ஏதாவது குறுக்கு வழி இருக் கிறதா என்று பார்த்து அந்த வழியே செல்ல விரும்பினார்கள். துரதிருஷ்டவசமாக இவர்கள் மிகவும் சுற்றலான வழியிலேயே செல்ல வேண்டியதாகி விட்டது. இதற்குக் காரணம் முந்திச் சொல்லப்பெற்ற டிஸ்ஸாபெர்னிஸ் தான். இவன், எவ்வழியில் சென்றால், கிரீக் குச் சுலபமாகவும் சீக்கிரமாகவும் செல்ல முடி யாதோ அந்த வழியை இவர்களுக்குக் காட் டிக் கொடுத்தான்; தானே இவர்களை அழைத் துச் செல்வதாகக் கூறினான். கிளியார்க்கஸோடு அவனுக்கு உதவியாக இருந்த வேறு நான்கு படைத் தலைவர்களும் இவனுடைய வார்த் தையை நம்பி, தங்கள் படையுடன் இவனைப் பின்தொடர்ந்தார்கள். சில மைல் தூரம் சென்றதும் கிளியார்க்கஸ் உட்பட ஐந்து படைத் தலைவர்களையும் நயவஞ்சகமாகச் சிறைப்படுத்திக் கொலை செய்து விட்டான். படையினரை ஒன்றும் செய்யவில்லை. தலைவர் களை இழந்து விட்டபடியால், அவர்கள் தாங்க ளாகவே வலிய வந்து தன்னிடம் சரணடை வார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் கிரேக்கர்களுக்கு இயற்கையாகவே இருந்த தன்மான உணர்ச்சி, படையினரைச் சர ணடைய விடவில்லை. முதலில் சிறிது திகைத்து நின்றார்கள் என்றாலும் பிறகு சமாளித்துக் கொண்டு முன்னேறிச் செல்லவே துணிந் தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலில் இவர்களுடன் சேர்ந்து கொண்ட ஸாக்ரடீ ஸின் சீடனான ஜெனபன் என்பவன் முன்வந்து படையினருக்கு உற்சாக மொழிகள் சில கூறினான். இவன் பேச்சில் வல்லவன்; எந்த நிலையிலும் கலக்கமடையாத உள்ளம் படைத் தவன். இவனைத் தங்கள் தலைவனாயிருந்து வழிநடத்திச் செல்லும்படி படையினர் வேண் டிக் கொண்டார்கள். இவனும் ஒப்புக் கொண்டு படையினருடன் புறப்பட்டான்.

முதலில் வடக்குப் பக்கமாகப் புறப்பட்ட இந்தப் படை, பிறகு வடமேற்குப் பக்கமாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்தது. முன்பின் பார்த்தறியாத பிரதேசங்கள். வழியில் எத் தனை ஆறுகளையும் மலைகளையும் கடக்க வேண்டு மென்பது யாருக்கும் தெரியாது. வழி காட்டு வார் யாரும் இல்லை. ஓரிரண்டு இடங்களில் வழி காட்டுவதாகச் சொல்லிக் கொண்டு சிலர் முன்வந்தனர். ஆனால் இவர்கள், அர்ட்டாக் ஜெர்க்ஸஸினால் அனுப்பப்பட்ட உளவாளிகளாக இருந்தார்கள். அத்துடன் அவன் தன்னிடம் சரணடைய மறுத்ததற்

குத் தண்டனையாக இவர்களைத் துரத்திச் செல்லும்படி தன் படைகளையும் ஏவி விட்டான்.

ஓரிடத்தில் கிரேக்கப் படையினர், ஒரு குன்றைக் கடந்து செல்ல வேண்டி வந்தது. குன்றின் மீது ஏறினார்கள். ஏறிப் பார்த்த பொழுது அடுத்தாற் போல் மற்றொரு குன்று தென்பட்டது. முதற் குன்றிலிருந்து இறங்கி அடுத்த குன்றின் மீது ஏறுவதற்கு முன்பு, அந்தக் குன்றின் உச்சியிலிருந்து உருண்டையான பாறுங்கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக இவர்கள் மீது வந்து விழ ஆரம்பித்தன. அந்தக் குன்றுக்குப் பின்புறத்தில் வசித்துக் கொண்டிருந்த காட்டுமிராண்டி ஜாதியினர் ரகசியமாக மலை உச்சிக்கு வந்து இவர்கள் மீது கற்களை உருட்டி விட்டதுடன் அம்பு மழையும் பொழிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

வழியில் இன்னோர் இடத்தில் நாட்கணக்கில் அடை மழை பெய்து கொண்டிருந்தது. இதனால் கூடவே கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்களின் பெரும் பகுதி நாசமாகி விட்டது. பிறிதோரிடத்தில் புயல் காற்றில் சிக்கிக் கொண்டனர். மற்றோரிடத்தில் சுமார் நாற்பத்தைந்து மைல் தூரம் வரை ஆறடி உயரத்துக்குப் பனி உறைந்து கிடந்தது. இதைக் கடக்கிற போது, அநேகருக்குக் கண் பார்வை போய் விட்டது. அநேகருக்குக் கால் விரல்கள் புண்ணாகி அழுகி விழுந்து விட்டன. பலர் உடம்பு விறைத்துப் போய் இறந்துபட்டனர்.

இப்படி எத்தனையோ சங்கடங்களை அநுபவித்துக் கொண்டு கடைசியில் கி. மு. 400ம் வருஷம் பிப்ரவரி மாதம் அதாவது குனக்ஸாவை விட்டுப் புறப்பட்ட ஐந்து மாதங்கள் கழித்து, கருங் கடலின் தெற்குக் கரையில் உள்ள ட்ரெபிஜாண்ட் என்ற ஊரை அடைந்தனர். தாய்நாடு வெகு தொலைவில் இல்லை என்று தெரிந்ததும் எல்லோருக்கும் ஓர் ஆறுதல் ஏற்பட்டது; அச்சத்தினின்று விடுபட்டனர். குறுக்கு வழியில் திரும்ப வேண்டுமென்று முனைந்த இவர்கள், கடைசியில், வந்த தூரத்தைக் காட்டிலும் அதிக தூரம் — இரண்டாயிரம் மைல்களுக்கும் அதிகமாகத் திரும்பி நடக்க வேண்டி வந்தது. ஸார்டிஸ் நகரத்தைவிட்டுப் புறப்பட்டபோது இந்தக் கிரேக்கப் படையில் சுமார் பதின்மூன்றாயிரம் பேர் இருந்தனரல்லவா, ட்ரெபிஜாண்ட் நகரத்துக்கு வந்து சேருகிறபோது பதினாயிரம் பேரே யிருந்தனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இவர்களுடைய நடைபயணத்தைப் பற்றி ஜெனபன் உருக்கமானதொரு நூல் எழுதியிருக்கிறான். இதற்கு அனபாஸிஸ் என்று பெயர். வருணனைகளோ, கற்பனைகளோ இல்லாத தெள்ளிய உரை நடைக்கு இந்த நூலை ஓர் உதாரணமாக எடுத்துக் காட்டுவர் அறிஞர்கள். இந்த நூலின் மூலம் கிரேக்கர்களின் தாய்நாட்டுப் பற்று, விடாமுயற்சி, சகிப்புத் தன்மை முதலியவைகளை நாம் ஒருவாறு அறிந்து கொள்ளுகிறோம்.

திரைத் துணுக்குகள்

நமது நிருபர் சென்னை ஸ்டுடியோ ஒன்றில் எடிட்டிங் பகுதியில் கேள்விப்பட்டது: ''--சாஸ்திரி (சென்ஸார் போர்டு அதிகாரியாய் இருந்தவர்) நடனத்தின் குறிப்பிட்ட பகுதி தரக் குறைவாக இருக்கிறதென்று அதை வெட்டுமாறு சொல்லி விட்டார். சரியென்று அதை வெட்டி விட்டால் பாட்டும் இடையில் துண்டாடப்பட்டு இசையின் உருவம் அழிந்து விடுமே? ஆகவே, பாடல் சிதைந்து விடாமல் இருக்க அந்தப் பகுதிக்கு— சுமார் ஐந்து விநாடிகளுக்கு—வேறு ஒரு காட்சியைச் சேர்க்க வேண்டும். இட்டு நிரப்பும் இந்தப் பகுதி எதுவாக இருக்கலாம்? ஒரு தூணைக் காட்டலாம்; அல்லது என். டி. ராமராவைக் காட்டலாம். தூணைக் காட்டுவதை விட என். டி. ராமராவைக் காட்டுவதே மேலென்று அவரையே காண்பித்து விட்டேன்...!''



என். டி. ராமராவின் நடிப்பைப் பற்றி மேற்படி 'எடிட்டர்' ஹாஸ்யமாகக் கூறியது கூடச் சிலருக்குத் தவறாகத் தோன்றலாம்; வேறு சிலருக்குச் சரியென்று படலாம். ஆனால் ஏழைகளின் துயரக் கண்ணீரைப் பார்த்த பிறகு தாம் தூணாக நிற்காமல் மனமுருகி அவர்களுக்கு உதவக் காத்திருப்பதைத் தெளிவுபடுத்தி விட்டார் என். டி. ராமராவ்.

விஜயவாடாவிலும் மற்ற இடங்களிலும் குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டதை யெல்லாம் கண்டித்ததுடன் நில்லாது ஒரு லட்சம் ரூபாயை ஆந்திர முதன்மந்திரி பிரும்மானந்த ரெட்டியிடம் கொடுத்து அதை உசிதம்போல் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தும்படி கூறியிருக்கிறார். திரு ராமராவின் நல்ல இதயத்தை நாட்டு மக்களெல்லாம் போற்றுவார்கள்.


ஃ ஃ ஃ

★ சென்ற வாரம் வெளியான புதிருக்கு விடை: 1956ல் அமெரிக்கா சென்றிருந்த போது, ஹாலிவுட்டில் படாதிபதிகளை இந்தோனேஷிய ஜனாதிபதி மனதாரப் பாராட்டினார். காரணம் என்ன தெரியுமா? ஆசியாவில் சமீப காலமாக நடந்த வெற்றிகரமான புரட்சிகளுக்கெல்லாம் ஹாலிவுட் படாதிபதிகள் பெருமளவுக்குத் துணை புரிந்திருப்பதாக எடுத்துக் காட்டி அவர்களை வணங்கினார் சுகர்னோ. ஹாலிவுட் படங்களில் சாதாரண அமெரிக்க மக்கள்கூட குளிர் சாதனப் பெட்டிகள், மோட்டார் கார்கள் முதலியவற்றைச் சொந்தத்தில் வைத்துக் கொண்டிருப்பதாய்க் காட்டியதால் ஆசிய மக்களுக்குத் தங்களுக்கும் அத்தகைய வசதிகளைப் பெற உரிமை உண்டு என்ற புது விழிப்பு ஏற்பட்டு அரசியல், தொழில் புரட்சிகளுக்குக் காரணமாயிருந்தன என்றார்.

இன்பக் கனவே எழிலுருவே...
ஏற்றம் மிகுந்த ஓவியமே


உங்கள் இன்பக் கனவுகள் நனவாக, கவர்ச்சியான சக்தி சில்க்
ஆடைகளை அணிந்து எழிலோவியமாகத் திகழுங்கள்.
கவனமான நுண்ணிய சேவை, வண்ண வண்ண மாதிரிகள். சக்தி
சில்க்குகள், உங்கள் மனம் கவரும் மாதிரிகளில் தயாரிக்கப்
படுகின்றன. உங்கள் வனப்பின் பூரணப் பொலிவை
எடுத்துக்காட்ட சக்தி சில்க் ஆடைகளை அணியுங்கள்.

Shakti Silks
போதார் தயாரிப்புகள்



கிரேப்ஸ் · டஃபேட்டாஸ் · ஸாட்டின்ஸ் · புரோகேட்ஸ் · ஸைலான் மற்றும் ரேயான்ஸ் · 'டெரிலீன்',
ஸாட்டின் மற்றும் ஸாட்டின்ஸ் · ரேயான் ஸாட்டின்ஸ்

சென்னையில் ஜெர்மனி–



மேற்கு ஜெர்மானிய ராஷ்டிரபதி லூபெக் விஜயம்

'மெத்த வளருது மேற்கே'


என்று அந்த நாட்களில் பாடினார் மகாகவி பாரதியார். இன்று நம்முடன் அவர் வாழ நாம் அதிருஷ்டம் செய்திருந்தோமானால் அவர் உற்சாகத்துடன் புதிதாகவே,

'மெத்த வளருது சென்னையின்தெற்கே
மேற்கத்திய பொறியியல் வேகமாய் இங்கே'

என்று பாடியிருப்பாரோ என்னவோ? அடையாற்றுக்குத் தென் பகுதியிலும் அதை ஒட்டியும் வளர்ந்திருக்கும், வளர்ந்து வரும் பொறியியல் கல்லூரிகளையும் தொழில் நுணுக்கப் பள்ளிகளையும் பார்த்துப் பிரமித்து நின்றிருப்பார்.

கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில் நுணுக்கக் கல்லூரி, சர்க்கார் தொழிற் பள்ளி, தோல் ஆராய்ச்சி நிலையம் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டே வரும்போது நாம் நம்மையறியாமலேயே ஜெர்மனிக்குள் நுழைந்து விடுகிறோம். ஆம்! அடையாறு பகுதியில் ஜெர்மனியே இருக்கிறது! சந்தேகமிருந்தால் தயவு செய்து சிரமத்தைப் பார்க்காமல் 'இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலஜி (Indian Institute of Technology) என்ற அறிவிப்புப் பலகையைத் தாங்கி நிற்கும் வாசலுக்குள் புகுந்து ஒரு மைல் நடந்தால் ஜெர்மனிக்குள் நுழையலாம்! ஆம்! மத்திய சர்க்கார் ஆதரவில் நிறுவப்பட்டு நடந்து வரும் இந்தப் பொறியியல் கல்லூரி முழுக்க முழுக்க மேற்கு ஜெர்மனி சர்க்காரின் அன்பினாலும் ஆதரவினாலும் தோன்றக் காரணமாக இருந்தது. ஜெர்மனி ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாய் பெறுமான பொறியியல் சாதனங்களைக் கொடுக்க முன்வந்ததோடல்லாமல் இருபது பேராசிரியர்களையும் தொழில் நிபுணர்களான ஐந்து 'போர் மென்'களையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தது. இவர்கள் நம் மாணவர்களுக்குத் தொழிற் கல்வியில் பயிற்சியளிக்கிறார்கள். நம்முடைய ஆசிரியர்களை அவர்கள் நாட்டுக்கு அழைத்துப் போய் விசேஷப் பயிற்சியளித்துப் பேராசிரியர்களாக மாற்றித் திருப்பியனுப்புகிறார்கள். ஜெர்மானியக் கல்விமுறை மணக்கும் இந்தப் பெரிய நிலப்பரப்பை சென்னையில் ஜெர்மனி என்று குறிப்பிடுவதில் தவறு ஒன்றுமில்லையே!

இரண்டாவது உலக யுத்த காலம் வரை அப்போது ஆட்சியில் இருந்த சர்க்கார் பாரத இளைஞர்களின் பொறியியல் கல்வி ஆர்வத்தைப் பற்றி அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. ஏற்கனவே இயங்கி வந்த கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறியவர்களும் இறக்குமதியாகும் யந்திர சாதனங்களைப் பராமரிக்கும் காவலர்களாகத்தான் உபயோகப்படுத்தப்பட்டார்கள். ஆனால்



நவீன ஜெர்மானிய இயந்திரங்களில்
தொழில் பயிலும் மாணவர்கள்

இரண்டாவது உலக யுத்தம் சர்க்காரின் கண்களைத் திறக்கச் செய்தது. நாட்டின் வளர்ந்து வரும் தேவைகளையும், அவசர வேலைகளையும் சமாளிக்க, ஆராய்ச்சிபூர்வமான உயர் பொறியியல் கல்வி தேவை என்று உணர்ந்தார்கள். அந்த நினைப்பின் விளைவாகத்தான் நளினி ரஞ்சன் சர்க்கார் தலைமையில் 'உயர் சக்திக்குழு' ஒன்று நிறுவப்பட்டது. நாட்டின் வடக்கு கிழக்கு தெற்கு மேற்குப் பகுதிகளில் உயர் தொழில் நுணுக்கக் கல்லூரிகள் நிறுவப்படுவதின் மூலம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று 1946ல் இக்குழு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

இந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டதின் காரணமாக முதலில் கரக்பூரில் தோன்றிய பொறியியல் கல்லூரி 1951ல் செயல்படத் தொடங்கியது. ஆனால் ஆராய்ச்சித் துறையில் போதிய அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. பரிசோதனைகளுக்கான நுண்ணிய உபகரணங்களுக்கும் பஞ்சமாகி விட்டது. ஆகையால் உடனடியாக வெளிநாடுகளில் உள்ள பேராசிரியர்களின் உதவியையும் உபகரணங்களின் இறக்குமதியையும் நாடச் சர்க்கார் முனைந்தது. அமெரிக்கா, பிரிட்டன், ரஷியா எல்லா நாடுகளுமே இந்த ஆரம்ப கட்ட இடுக்கண்களைப் போக்கத் தாராள மனப்பான்மையுடன் ஆசிரியர்களையும் ஆராய்ச்சிச் சாதனங்களையும் கொடுத்து உதவின. கரக்பூர் கல்லூரி கண்டத்திலிருந்து தப்பித் தழைத்து வளரத் தொடங்கியது.

நளினி ரஞ்சன் சர்க்கார் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் இரண்டாவது பொறியியல் கல்லூரி 1958ம் ஆண்டில் பம்பாயில் ருஷ்ய சர்க்காரின் முழு ஒத்துழைப்புடன் ஆரம்பமாயிற்று.

காலம் சென்ற நம் பாரதப் பிரதமர் ஜவாஹர்லால் 1956ல் மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்த போது ஜெர்மனி அரசியல் நிர்வாகம் உயர்தரப் பொறியியல் கல்லூரி



இதுபோன்ற அதிஅற்புதமான கட்டிடங்கள் கல்லூரியில் நிறைய உண்டு

ஒன்றுக்கான வசதிகளைச் செய்து தருவதாக வாக்களித்தது. அந்த வாக்களிப்பின் விளைவு தான் 1959ம் ஆண்டில் சென்னையில் தோன்றிய மூன்றாவது பொறியியல் கல்லூரி.

தென் பிராந்தியத்தில் எங்கு இந்தக் கல்லூரியை ஆரம்பிப்பது என்று சர்ச்சைகளெல்லாம் முடிந்த பிறகு சென்னையையே தேர்ந்தெடுத்தார்கள். கிண்டி ராஜபவனத்தை அடுத்த விஸ்தீரணமான பிரதேசத்தைச் சகல வசதிகளுடன் தமிழ் நாட்டுச் சர்க்கார் அளித்து உதவியது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் காடாக இருந்த இந்தப் பிரதேசம் ஒரு தனி நகரமாகவே மாறிக் கொண்டிருக்கிறது. பரிசோதனைச் சாலைகளும் தொழில் பட்டறைகளும், ஆசிரியர்கள், நிர்வாகிகளுக்கான குடியிருப்பு வீடுகளும், ஹாஸ்டல்களும் இடைவிடாத முயற்சியுடன் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், தொழிலாளிகள் எல்லோருமாகச் சேர்ந்து மொத்தம் பதினாயிரம் பேர்கள் வரை வசிக்க வேண்டிய பகுதியல்லவா ?

இந்தக் கல்லூரி வட்டத்துக்கு உள்ளே போடத் திட்டமிடப்பட்டிருக்கும் போக்குவரத்துச் சாலைகளின் மொத்த நீளம் 16.4 மைல் என்றால் நிலப்பரப்பின் விஸ்தீரணத்தை நாம் ஊகித்துக் கொள்ளலாம். இதில் முக்கால் திட்டத்துக்கு இப்போது நிறைவேற்றியாகி விட்டது. மத்திய சர்க்காரின் நிர்வாகத்தையும் மாகாண சர்க்கார் உதவியையும் ஜெர்மானிய சர்க்காரின் அன்பையும் எப்போதும் நினைவூட்டும் வண்ணம் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் மூன்று பிரதான சாலைகளுக்கு முறையே 'டில்லி அவென்யூ' 'மதராஸ் அவென்யூ' 'பான் அவென்யூ' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

டைரக்டர் சென் குப்தா



இங்கு அளிக்கப்படும் படிப்பின் காலம்ஐந்தாண்டு. மற்றப் பொறியியல்கல்லூரிகளில் நுழையத் தேவையான புகுமுக வகுப்புத் தேர்ச்சியே போதும். ஆரம்பித்த முதல் இரண்டு வருடங்களில் விண்ணப்பதாரர்களின் புகுமுகப் பரீட்சை மார்க்குகளின் அடிப்படையில் அனுமதித்தார்கள். ஆனால் சென்னைக் கல்லூரியைத் தொடர்ந்து இந்திய–அமெரிக்கக் கூட்டின் அடிப்படையில் கான்பூர் பொறியியல் கல்லூரியும், இந்திய–பிரிட்டிஷ் கூட்டின் ஏற்பாட்டில்



ரிஜிஸ்திரார் நடராஜன்

டில்லி பொறியியல் கல்லூரியும் தோன்றிய பிறகு ஆண்டுதோறும் ஐந்து கல்லூரிகளுக்குமாக, அகில இந்திய அடிப்படையில் ஒரு நுழைவுப் பரீட்சை வைத்து அதில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறுபவர்களை அனுமதிக்கிறார்கள். ரிஜிஸ்திரார் திரு நடராஜன் கூறியது போல இங்கு மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை. அவர்களே தங்கள் திறமையால் சேர்ந்துகொள்கிறார்கள்.

கல்லூரியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுப் பேராசிரியர் சென் குப்தா நிர்வகிக்கிறார். இதைத் தவிர பொது நிர்வாகத்தைக் கவனிக்கக் கல்லூரியின் ஆரம்ப நாட்களிலிருந்தே திரு ஆர். நடராஜன் ஐ.ஏ.எஸ். அவர்களைத் தமிழ் நாட்டு அரசாங்கம் கொடுத்து உதவி செய்திருக்கிறது.

பொறியியல் அறிவு மாத்திரம் மனிதனின் மனவளர்ச்சிக்குப் பூரணத்துவம் கொடுக்காது என்று பல மேதைகள் சொல்லியிருக்கும் அறிவுரைகளின் அடிப்படையில் இங்கு பொறியியல் படிக்க வரும் மாணவர்களுக்கு 'ஹ்யூமானிட்டீஸ்' என்று சொல்லப்படும் இதர விஞ்ஞானமல்லாத பாடங்களும் ஐந்தாண்டுகளிலும் தொடர்ந்து போதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். முதல் வருடம் ஆங்கிலம், இரண்டாம் ஆண்டு ஜெர்மன் மொழி, மூன்றும் ஆண்டு பொருளாதாரம், நான்காம் ஆண்டு சரித்திரம், கடைசி ஆண்டு தொழில் நிர்வாகம், மனோதத்துவம் முதலியவை.

''ஆங்கிலமும் ஜெர்மனும் படிப்பதால் பொறியியல் துறையில் அம்மொழிகளில் வெளியாகும் புதுப் புது நூல்களைப் படித்துப் பயனுறலாம். ஓர் இன்ஜினீயர் பொருளாதாரம், தொழில் நிர்வாகம் இவற்றைக் கற்பதைக் கூடப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் சரித்திரமும் மனோதத்துவமும் அவர்களுக்கு எதற்கு?'' என்று கேட்டோம்.

''நிர்வாகிகள் தங்களுக்குக் கீழ் வேலை பார்க்கும் தொழிலாளர்களைச் சரியாகப் புரிந்துகொண்டு செயலாற்றாத காரணத்தால்தான் பல இடங்களில் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மனோதத்துவத்தை அறிந்த பொறியியல் நிபுணன் தொழிலாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதிலும் திறமைமிக்கவனாய் இருப்பான்.''

''சரி, சரித்திரம்?''

''விஞ்ஞான அறிவை ஒருவன் அதிகமாகப் பெறப் பெறக் கூடவே அவனுக்கு மமதையும் தோன்றிவிடலாம். நாமன்றி ஏதுமில்லை. நாம் நினைத்தால் உலகை ஆக்கலாம்; அழிக்கலாம் என்று இன்றைய விஞ்ஞானி நினைக்கத் தொடங்கலாம். உலக சரித்திரத்தை அவன் கற்றுணர்ந்தால், சொல்லி மாளாத எத்தனையோ துன்பங்களுக்கு உள்ளாகியும் மனந்தளராது வாழ்ந்து வளரத் துடிக்கும் மானிட சமூகத்தினிடம் அவனுக்கு அன்பும் மதிப்பும் பெருகும். தன் திறமையெல்லாம் ஆக்க வேலைகளுக்கு, ஜனசமுதாயத்தின் முன்னேற்றத்துக்குப் பயன்பட வேண்டும் என்பதை உணர்வான்.''

மாணவர்கள் ஐந்து ஆண்டு காலமும் கல்லூரி ஹாஸ்டலில்தான் தங்கிப் படிக்க வேண்டும் என்ற கண்டிப்பு அமுலில் இருந்து வருகிறது. பழங்கால குருகுலவாச முறை!

எம். எஸ்ஸி., எம். (டெக்) பி. எச்டி. முதலிய உயர் ஆராய்ச்சிப் படிப்புக்கான வசதிகளையும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அளித்து வருகிறார்கள். இந்தத் துறை மேலும் நிறைய விஸ்தரிக்கப்படவிருக்கிறது. இந்த அகில இந்தியப் பொறியியல் கல்லூரிகளின் நோக்கமே ஆராய்ச்சியாளர்களை நிறைய தோற்றுவிப்பதுதானே!

பாரதத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து இங்கு தங்கிப் படிக்கிறார்கள் மாணவர்கள். தேசிய ஒருமைப்பாடு இங்கே ஆரம்பமாகிவிடுகிறது. நாகாலாந்து மாணவரும் நாஞ்சில் நாட்டு மாணவரும் இங்குதானே சந்தித்துப் பழக வாய்ப்பு ஏற்படுகிறது?

ஹாஸ்டல் வாசம் நிறைய சௌகரியம் வாய்ந்தது. அநேகமாக நாற்பது சதவிகிதத்துக்கு மேலாகவே மாணவர்களுக்குத் திறமையையும் குடும்ப நிலையையும் அனுசரித்து உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. திறந்த வெளி அரங்கம் ஒன்று பிரமிக்கத்தக்க முறையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

முதல் ஐந்து ஆண்டுகளைக் கடந்து விட்டிருக்கும் இந்தக் கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா இந்த மாதம் பதின்மூன்றும் தேதி பாரத ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடக்கவிருக்கிறது. தொண்ணூற்றி ஒரு மாணவர்கள் தங்கள் சீரிய உழைப்பின் பரிசாக பி. (டெக்) பட்டத்தைப் பெற விருக்கிறார்கள். இவர்களில் ஐம்பத்தி ஏழு பேர்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இதைத் தவிர, கணிதம், ரசாயனம், பௌதிகம் முதலிய பிரிவுகளில் பத்தொன்பது ஆராய்ச்சி மாணவர்கள் எம். எஸ்ஸி. பட்டம்பெறவிருக்கிறார்கள்.

மெக்கானிக்கல் இஞ்சினீயரிங் பிரிவில் சேர்ந்து படித்த எஸ். ஆர். தங்கவேலு என்ற மாணவர் முதல்வராக வந்து பாரத ஜனாதிபதி பெயரால் அளிக்கப்படவிருக்கும் தங்கப் பதக்கத்தைப் பெறவிருக்கிறார். 'தங்கமான மாணவர்' என்று கல்லூரி நிர்வாகம் நிஜமாகவே பெருமைப்படலாமல்லவா?

இதே பிரிவைச் சேர்ந்த நான்காம் வருட மாணவர்கள் இருவர் சொந்தமாக இரண்டு பொறியியல் உபகரணங்களை நிர்மாணித்து அவைகளைத் தங்கள் 'சொந்தக் கண்டுபிடிப்பு' என்று பதிவுசெய்து கொண்டிருக்கிறார்கள்! கல்லூரியின் நோக்கத்தை நடைமுறையில் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்களே, இந்த அசகாய சூரர்கள்!

'ஜெர்மனியில் தயாரானது' **(Made in Germany)** என்ற குறிப்பு அந்த நாட்களில் எந்தப் பண்டத்தின் மீது இருந்தாலும் 'மார்க்கெட்டில்' அதற்கு மதிப்பு அதிகம். இன்று ஜெர்மனியே இங்கு வந்து நம் மாணவ மணிகளைப் பாரதத்தின் வருங்காலத் தேவைக்குத் தயாரித்துக் கொடுக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த மாணவ மணிகள் சமூகத்துக்குத் தங்கள் கடமையை உணர்ந்து பொறுப்புடன் சேவையிலும் ஆராய்ச்சியிலும் தங்கள் பணியைச் செய்தார்களானால் பெற்றோர்கள், கல்லூரி மட்டுமின்றி நாடே பெருமைப்படலாமல்லவா ?

—கோ. க.



மனக்கண்

அந்த இரவின் நிசப்தத்தையும் தனிமையையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் யாரோ மறைந்திருந்து பெருமூச்சு விடுவதுபோல் வேப்ப மரங்களின் அசைவில் இடையிடையே காற்றுச் சிலிர்ப்பதும் தணிவதுமாக இருந்தது. மரக் கூட்டத்துக்கு மேலே சலனமற்றிருந்த ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு திடீரென்று நட்சத்திரம் ஒன்று கீழே விழுந்தது. அதுவரை அந்த மரக் கூட்டங்களையும் ஆகாயத்தையும் நிதானமாக விரும்பிப் பார்த்துக் கொண்டிருந்த சுகுணா நட்சத்திரம் விழுந்ததைப் பார்க்கச் சகிக்காமல் பால்கனியிலிருந்து உட்புறமாகத் திரும்பி நடந்தாள். நட்சத்திரம் விழுவதைப் பார்த்தால் கெடுதல் என்றும் அந்தக் கெடுதல் தீருவதற்குப் பரிகாரமாக விழுந்த நட்சத்திரத்தைக் கண்ட கையோடு ஏதாவதொரு பச்சைமரக் கூட்டத்தையும் பார்த்துவிட வேண்டும் என்றும் யாரோ சொல்லியிருந்ததை நினைத்தாள் அவள். பச்சை மரக் கூட்டமே இல்லாத இடத்தில் நட்சத்திரம் விழுவதைக் கண்டாலோ பச்சை மரக் கூட்டத்தையும் நட்சத்திரம் விழுவதையும் ஒன்றாகச் சேர்த்தே காண நேர்ந்தாலோ, என்ன செய்வதென்று நினைக்கும்போது அவளுக்குச் சிரிப்பாக இருக்கும். எத்தனை மூட நம்பிக்கைகள் இந்த ஏழைத் தேசத்திலே என்று அவள் சில வேளைகளில் வியப்பதும் உண்டு.

சுற்றும் முற்றும் காற்றில்லாத பேரொடுக்கத்தில் அலைகளும், சலனமுமில்லாத நீர்த்தடாகத்தைப்போல் இரவு மிக மிக அமைதியாகத் தேங்கி யிருந்தது. உள்ளே மின்சார விசிறி விரைந்து ஓடும் வழக்கமான ஓசை கேட்கிறது. அவர் நன்றாகத் தூங்கிவிட்டார் போல் இருக்கிறது. பாவம்! 'கண்ணாடியைக் கூடக் கழற்றி வைக்காமல் ஈஸிசேரில் சாய்ந்தபடியே தூங்கியிருக்கிறார்' என்று அனுதாபம் பெருகியது அவள் மனத்தில். 'கண்கள் தெரியாது' என்ற குறையை மறைக்கும் அந்த அழகிய கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி மேஜை மேல் வைத்த

போது, ''இந்த அபூர்வமான மனிதருக்குக் கண்களும் இருந்திருக்குமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்று ஒரு விநாடி தனக்குத் தானே நினைந்து உருகினாள் சுகுணா. இந்த உலகத்தில் இரண்டு கண்களும் இருக்கிற பார்வை உள்ள மனிதர்களான எத்தனையோ பல்லாயிரம் பேர்களுக்கு இல்லாத புகழும் பொருளும், திறமையும் அவருக்கு இருந்தன. இருந்தாலும் அவர் கண் பார்வையையும் பெற்றிருப்பாரானால் இந்த உலகமும் அவரும் எவ்வளவோ பாக்கியசாலிகளாகக் கொடுத்து வைத்தவர்களாக இருந்திருப்பார்கள்.

'அவரும்தான் என்ன? பிறவிக் குருடரில்லையே! கல்லூரிப் படிப்பு முடிகிறவரை வசீகரமான கண்களும் வனப்பு மிகுந்த பார்வையுமாகத்தான் இந்த உலகத்தைச் சுற்றி வந்திருக்கிறார் அவர். மின்னலில் கண் போய் விட்டதாக நானே கேள்விப்பட்டிருந்தேன். இங்கு வந்து இணைந்து அவருடைய இந்த வாழ்க்கைக்கு ஒரு துணையாகவும் ஆனபின் அவரே ஒருமுறை தம்முடைய வாலிபப் பருவத்தில் மின்னலுக்குக் கண்களைப்

நா. பார்த்தசாரதி

பலி கொடுக்க நேர்ந்த அந்த வரலாற்றை என்னிடம் கதை கதையாகச் சொல்லியிருக்கிறார். என்னை அவருடைய மனைவி என்று மட்டும் நான் கருதுவதோ சொல்லுவதோ நிச்சயமாக அவருக்குப் பிடிக்காது.

' ''என்னைப்போல் ஒரு குருடனுக்கு நீ மனைவியாக இருப்பதைவிட வாழ்க்கைத் துணையாக இருப்பதுதான் பொருத்தம். இனி நான் உலகத்தைக் காண்பதற்கும், உலகம் தன்னை எனக்குக் காட்டுவதற்கும் நீயே கண்களாவாய்! இரண்டு பேருக்குமாகச் சேர்த்துப் பார்க்கிற கண்களுக்குப் பொறுப்பும் சிரமமும் அதிகம் அம்மா! என்னுடைய பணத்துக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு என்னைக் கணவனாக ஒப்புக் கொண்டு கழுத்தை நீட்டுவதற்கு எத்தனையோ ஏழைப் பெண்கள் துணிந்து முன் வரலாம். நானோ ஒரு மனைவியை மட்டும் தேடவில்லை. என்னை ஒப்படைக்க ஒரு நம்பிக்கை வாய்ந்த துணையைத் தேடுகிறேன். துணையில்லாமல் நீண்ட தூரம் நடந்துவிட முடியும் என்ற நம்பிக்கை இந்தக் குருடனுக்கு இல்லை. வாழ்க்கையில் இன்னும் போக வேண்டிய தூரமும், கடக்க வேண்டிய மேடு பள்ளங்களும் அதிகமாயிருக்கும் போலத் தோன்றுகிறது'' என்று அவர் அடிக்கடி சொல்லுகிற வார்த்தைகளும் எனக்கு இப்போது நினைவு வருகின்றன.'

சுகுணா இப்படி ஏதேதோ ஞாபகங்களால் தூண்டப்பட்டு உறக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தாள். எதிரேயிருந்த தேக்கு மரப் பீரோவின் கதவில் பதித்திருந்த முழுநீள நிலைக் கண்ணாடியில் தற்செயலாகவும் அவசரமாகவும் தெரிந்தது அவள் உருவம். தான் அழகு என்பதை அவளே மறந்து போய்விட்ட காரணத்தால் ஒரு விநாடி வேறு யாரோ அதிரூபவதியான ஓர் அழகியைப் பார்ப்பதுபோல் பிரமை தட்டியது. தன்னை மறக்கும் போது அப்படி மறக்கின்ற நேரம் ஒரே ஒரு கணமாக இருந்தாலும் அது சுவாரசியமாகத்தான் இருக்கிறது. மேஜை விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது. மேஜைமேல் பதில் எழுதவேண்டிய கடிதங்களும், பிரதி எடுத்து நகல் செய்யவேண்டிய கையெழுத்துக் கற்றைகளும், அடுத்த வார 'மணி மாலை' இதழுக்கான புருபுகளும் குவிந்து கிடக்கின்றன. விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதற்கு முன்னடையாளமாகக் காற்றுக் குளிர்ந்து ஈரமாகிக் கொண்டு வரு




ஆஹா
Kolynos
ASP/GHJK-4K TAM
... கோலினஸ்
புதியது-தூயது...
கோலினஸின் சுவை:
கோலினஸின் நுரை:
கோலினஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்,
மற்றவர்களும் விரும்புவார்கள்.
அந்த ஐந்தாவது சிறுவனுக்கு ஒரு அருமையான யோசனை: கோலினஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல் புன்னகை புரியவும்: கோலினஸ் டென்டல் கிரீம் மூலம் உன்னுடைய பற்களை நாள்தோறும் காலையிலும் இரவிலும் துலக்கவும். மற்றவர்கள் மத்தியில் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் உலவ உதவுவது கோலினஸ்.
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினஸ் தரும் புன்னகை

கிறது. இதோ காலைப் பத்திரிகைகளைக் கொண்டு வந்து போடும் பையனின் சைக்கிள் மணியோசை கேட்கிறது. தோட்டத்துப் பன்னீர்மரத்தின் உச்சிக் கிளைகள் எல்லாம் மாடி வராந்தா வரையில் உயர்ந்திருப்பதால் அந்தக் கிளைகளிலிருந்து கலையான இரகசியம் ஒன்று வெளியாவதுபோல் மெல்ல மெல்ல வாசனை வருகிறது. இந்த வீடும் இதன் மாடியும், இங்கிருக்கும் காரியங்களும் அவளுக்குப் பழக்கமாகவும், கடமையாகவும் பதிந்து படிந்து பல நாட்களாகி விட்டன. புகழும், பொருளும், கண் திறந்து பார்த்துச் செய்யவேண்டிய காரியங்களும், நிறைந்த ஒரு குருட்டுப் பத்திரிகாசிரியருக்கு வாழ்க்கைத் துணைவியாகிவிட்டவளுக்குப் பொறுப்பு அதிகம்தான். கண்ணாடியில் ஒரு விநாடி தன்னை மறந்து பார்த்து முடிவில் அது தன்னுடையதென்று புரிந்து கொண்டு பரவசமானது போலவே இந்த வாழ்க்கைக்கு உடன்பட்ட போதும், இதை வாழத் தொடங்கிய போதும் தன்னை மறந்த நிலையில்தான் இந்தத் தியாகத்தை அவள் செய்திருந்தாள். தன்னை வியந்து தலை கனத்துக் கொண்டிருக்கிறவர்களால் எதையும் தியாகம் செய்ய முடியாது தான். அவளோ இளமையில் அவரை அதிகம் வியந்தாள். அவருடைய எழுத்துக்களால் மிக அதிகமாக வசீகரிக்கப்பட்டிருந்தாள். இன்னொருவருடைய குணத்துக்கும், மனத்துக்கும் ஆட்படுகிறவர்களால்தான் எதையும் விட்டுக் கொடுக்க முடியும்! எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்ய முடியும். பத்தொன்பது வயதுக் குமரி நாற்பது வயதுக் குருடரை விரும்பித் தேடிப் போய் ஆசைப்பட்டுமணந்து கொண்டு அவருக்குத் துணைவியாகி விட்டாள் என்பதை உலகம் நம்ப முடியாமல்தான் இருந்தது. அந்த முதல் தினத்தையும் முதல் சந்திப்பையும் இப்போது நினைத்தால்கூட அவளுக்கு மெய் சிலிர்த்தது.

ஃ ஃ ஃ

அது நடந்தபோது 'மணி மாலை' வார இதழில் அவருடைய 'திராட்சைத் தோட்டம்' தொடர்கதை வெளி வரத் தொடங்கியிருந்தது. இரண்டு வாரமோ, மூன்று வாரமோ, மிக அருமையாக வெளி வந்த அந்தத் தொடர்கதை திடீரென்று நான்காவது வாரம் வரவில்லை. 'காரியாலயத்தில் நேர்ந்திருக்கும் சில குழப்பங்களால் நமது ஆசிரியர் குமார கவியின் 'திராட்சைத் தோட்டம்' தொடர்கதை இன்னும்சிலவாரங்களுக்கு வெளி வராது என்பதை நேயர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்' என்ற அறிவிப்பைப் பார்த்தபோது மனம் வருந்தித் தவித்த பல்லாயிரம் வாசகர்களில் கருணாவும் ஒருத்தி. மணி மாலை ஆசிரியரும், பிரபல எழுத்தாளருமான குமார கவி ஒரு கண்ணிழந்த அந்தகர் என்பதை அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவருடைய தொடர்கதை வெளி வராமற் போன அதே இதழில் மணிமாலை ஆசிரியருக்கு ஒரு காரியதரிசி தேவை என்றும், அந்தக் காரியதரிசிக்கு என்னென்ன யோக்கியதாம்சங்கள் தேவை என்றும் குறிப்பிட்டு ஒரு விளம்பரம் வந்திருந்தது. 'இண்டரோடு கல்லூரிப் படிப்பை நிறுத்தி விட்டு— வாழ்க்கையைப் பற்றிப் பலவிதமாக எதிர்பார்க்கிற மனத்தோடு வீட்டில் அடைந்து கிடந்த கருணா ஏதோ ஓர் அசட்டுத் துணிச்சலில் மணிமாலை காரியாலயத்துக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தாள். எளிமையான அந்த இடம் சக்தி வாய்ந்த தெய்வம் ஒன்றின் கோவிலைப் போல் இருந்தது. எதிலும் தடுமாறி விழவோ தடுக்கவோ முடியாமல் விசாலமாக ஒருவர் உலாவி நடப்பதற்கு வசதியாக அறையின் பெரும் பகுதி இடம் காலியாக விடப்பட்டிருந்தது. மெல்லிய வாசனையாய் அறை முழுவதும் ஒடிகோலோன் நறுமணம் பரவியிருந்தது. ஒரு மூலையில் தரையில் சிறிய பட்டு மெத்தை விரித்து அதன் மேல் வீணைஒன்று உறங்கிக் கிடந்தது. இன்னொரு மூலையில் சுவரோரமாக இருந்த மேஜையில் டெலிபோனும் எழுதுவதற்கான வெள்ளைக் காகித அடுக்குகளும், புரூபுகளும், பின்குஷன், கடிதங்கள், உறைகள் ஆகிய ஆபீஸ் பண்டங்களும் நிறைந்திருந்தன. அருகே ஒரு சிறிய நாற்காலியும் இருந்தது. அறைக் கதவைத் திறந்தவுடன் எதிரே தெரிகிற மாதிரித் தணிவான கட்டில் ஒன்றில்மெத்தையிட்டுச் சாய்ந்து கொள்வதற்கு வசதியான திண்டுகளும் போட்டிருந்த இருக்கையில் ஓர் ஓரமாக ஒதுங்கினாற் போலக் குமார கவி சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். கறுப்புக் கண்ணாடியிட்டு மூடிய கண்களுக்குப் பார்க்கும் சக்தியில்லை என்பதை மறந்துவிட்டுப் பார்க்க முடிந்த கண்களையே ஓர் அழகுக்காகவும் குளிர்ச்சிக்காகவும் கறுப்புக் கண்ணாடியினுள் மூடிக் கொண்டிருப்பதாக நினைத்தால் அவர் ஒரு சுந்தரபுருஷனாகத்தான் விளங்கினார். சிவந்த நிறம், பரந்த நெற்றி, கூரிய மூக்கு, புன்னகை தயங்கிய உதடுகள். ஆஜானுபாகுவான தோற்றம். மின்னல் அறுந்து விழுந்து கிடப்பது போல் சாய்ந்திருந்தார். நரை சிறிதுமில்லாமல் படிய வாரிவிட்டிருந்தும் சுருள் சுருளாக அலைந்து சரிந்த கிராப்புத் தலை.

''காரியதரிசி வேண்டுமென்று நாம் செய்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு இந்தப் பெண்மணி நேரில் வந்திருக்கிறார்'' என்று மானேஜர் அவளை அறிமுகப்படுத்தவும், ''அப்படியா? அந்த மூலையில் மேஜையருகே இருக்கிற நாற்காலியில் உட்காரம்மா!'' என்று குமார கவி கனிவுடன் உபசாரமாகச் சொன்னார். அந்தத் தோற்றத்தின் மென்மையிலும், அந்தக் குரலின் வசீகரத்திலும், அந்தப் புன்சிரிப்பின் நயத்திலும் மயங்கிப் பார்க்க முடியாத அந்தக் கண்கள் தன்னைப் பார்ப்பது போலவே கருதிக் கொண்டு நாணிப் போய் அந்த நாற்காலியில் பட்டும் படாமலும் ஒதுங்கினாற் போல் அமர்ந்தாள் கருணா.

''இந்த வாரம் உங்கள் 'திராட்சைத் தோட்டம்' ஏன் வரவில்லை சார்? எங்களுக்கெல்லாம் இந்த வார மணிமாலையைப் பிரித்ததும் பெருத்த ஏமாற்றமாகி விட்டது.....'' என்று முதல் உரையாடல் அவ

விடமிருந்து பிறந்ததும் அவர் பதில் சொல்லச் சற்றே தயங்கினாற் போலச் சிரித்து விட்டுப் பின்பு கூறினார்:

''திராட்சைத் தோட்டம் வராததனால் தான் நீ இங்கு வந்திருக்கிறாய்!''

''அதெப்படி சார்?.... நான்.... நான் வந்து.....''

''எப்படி என்பதை நானே சொல்லி விடுகிறேன். திராட்சைத் தோட்டத்தை இரவு பகலாக உடனிருந்து நான் சொல்லச்சொல்லக் கேட்டு எழுதி — எழுதியதை மறுபடி வாசித்துக் காண்பித்து — வாசித்ததில் நான் திருத்தம் சொல்லி — நான் சொல்லிய திருத்தங்களுடன் செப்பனிட்டு அச்சுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த காரியதரிசி திடீரென்று என்னை நிர்க்கதியாக விட்டு விட்டு ஒரு வாரத்துக்கு முன்பு கொஞ்சம் பணத்துடன் சொல்லாமல் கொள்ளாமல் கம்பி நீட்டி விட்டான். இந்தக் கதையை நான் போதாத வேளையில் ஆரம்பித்திருக்கிறேன் போல் இருக்கிறது. அதனால் தான் மனம் நிம்மதியிழந்து தொடர் கதை சில வாரங்களுக்கு வெளி வராதென்று அறிவிப்புப் போடச் சொல்லி விட்டுக் காரியதரிசிக்கும் விளம்பரம் செய்தேன். ஒரு குருடனின் பலவீனங்களோடும் ஒரு கதாசிரியனின் பலங்களோடும் நான் செயல்பட வேண்டியிருக்கிறது. பொறுமையும், நிதானமும் மிகுந்த ஒரு நர்ஸ் ஒரு நோயாளியைக் கவனித்துக் கொள்வதைவிட அதிகமாக என்னைக் கவனித்துக் கொள்ள ஓர் ஆள் வேண்டியிருக்கிறது. இதை உத்தியோகமாக ஏற்றுக் கொண்டு வருகிறவர்களிடம் நான் என்னைப் பரிபூரணமாக ஒப்படைக்க முடிவதில்லை. உதவியாக அங்கீகரித்துக் கொண்டு என் மேல் உள்ள மதிப்பின் காரணமாக இலவச சேவை செய்ய வருகிறவர்களை நானே அதிக வேலை வாங்கத் தயங்க வேண்டியிருக்கிறது. புகழ் பெற்ற நான் தனிமையில் எத்தனை நிராதரவாய் இருக்கிறேன், பார்த்தாயா?''

—என்று நீண்ட நாள் பழகிப் புரிந்து கொண்ட ஒருத்தியிடம் குறைப்பட்டு வருந்துவது போல் அவர் வருந்திக் கூறிய வார்த்தைகள் சுகுணாவைக் கண் கலங்கச் செய்தன. அவள் பயபக்தியோடு அவரை நோக்கி வேண்டினாள் :

''எந்த விதத்திலாவது உங்களுக்கு உபகாரம் செய்து பெருமைப்பட முடியுமானால் அதை என் பாக்கியமாகக் கருதுவேன்.''

''உன்னுடைய விருப்பத்தை வரவேற்கிறேன் அம்மா! ஆனால் இந்த முறை நான் தேர்ந்தெடுக்கிற துணை மிக உறுதியானதாகவும், இறுதி வரை என்னை நிர்க்கதியாக விட்டு விடாமல் உடன் வரக் கூடியதாகவும் இருக்க வேண்டும். நீ பாரதியாருடைய கவிதைகளைப் படித்திருக்கிறாய் அல்லவா? தோத்திரப் பாடல்களிலே 'கோவிந்தன் பாட்டு' என்று ஒரு தலைப்பு இருக்கும். அந்தப் பாடலின் கடைசிப் பகுதியிலே,

'' என்கண்ணை மறந்துன் இருகண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு ''

என்று அவர் கூறத்தொடங்கிய பாடலை,

நின் கண்ணாற் புவி எல்லாம் நீ எனவே
நான் கண்டு நிறைவு கொண்டு...''

என்று மீதியும் கூறி அவள் முடித்தாள்.

இனிய குரலில் அந்தப் பாடலின் பின்னிரு வரிகளை அவள் கூறிய பின் அவர் அவளை நோக்கிச் சொல்லலானார் : ''என்னுடைய தேவையை மிக மிகப் பொருத்தமான வார்த்தைகளால் உனக்கு நான் விளக்க வேண்டுமானால் இந்தப் பாடலை அப்படியே சொல்லி விட்டு விடலாம். கண்ணில்லாத நான் இந்த உலகத்தைப் பார்ப்பதற்கு நம்பிக்கையான கண்கள் இரண்டு எனக்கு வேண்டும்.''

''நீங்கள் இந்த உலகத்தைப் பார்க்கும் கண்களாக நான் இருந்து உங்களுக்குத் துணை புரியலாம் என்ற வைராக்கியம் எனக்கு இருக்கிறது சார்!'' என்றாள் சுகுணா.

''இந்த விநாடி வரை என்னுடைய மனக் கண்ணால் நான் உன்னைப் புரிந்து கொண்ட மட்டும் உன்னிடமுள்ள இரண்டு தன்மைகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. இந்த அறைக்குள் இன்று நீ வந்த போது தரையதிராமல் புஷ்பம் உதிர்வது போல் ஓசையின்றி நடந்து வந்தாய்! உனக்கும் முன்னால் நீ உன் கூந்தலில் சூடிக் கொண்டு வந்திருக்கும் மல்லிகைப் பூவின் வாசனையும் கைகளில் ஒலிக்கும் வளைகளின் ஒலியும் என்னை நாடி ஓடி வந்த காரணத்தால் ஒரு பெண் வந்திருக்கிறாள் என்பதை நான் உய்த்துணர்ந்து கொண்டேன். வாயதிராமல் மெல்லிய குரலில் சங்கீதத்தைப் போல் நிரவிப் பேசுகிறாய் நீ! தரையதிராமல் நடப்பதும், வாயதிராமல் பேசுவதும் என்னைக் கவருகிற குணங்கள். இவற்றைத் தவிர உன்னிடமுள்ள வேறு சாமர்த்தியங்களை இனி நீதான் எனக்குச் சொல்ல வேண்டும்.''

''எனக்கு ஆங்கிலமும் தமிழும் நன்றாக எழுதப் படிக்கத் தெரியும். கையெழுத்து ஓரளவு அச்சுக் குண்டாக இருக்கும். டைப்ரைட்டிங் 'லோயர்' பாஸ் செய்திருக்கிறேன். வீணை வாசிக்கத் தெரியும். கொஞ்ச நாள் அடுத்த தெரு நட்டுவனாருடைய கலாசாலையில் நாட்டிய வகுப்புக்கும் போய்வந்திருக்கிறேன். கார் 'டிரைவிங்' பழக்கம் உண்டு. என்னுடைய இவ்வளவு சாமர்த்தியங்களும் உங்களுக்குக் கொஞ்சமாவது பயன்பட முடியுமானால் நான் அதிர்ஷ்டம் செய்தவளாவேன் சார்.''

''அதிர்ஷ்டம் என்று சொல்லாதேயம்மா! அதிர்ஷ்டத்தை நான் நம்புவதில்லை. நமக்கு அநுகூலமாக முடிகிறவற்றை எல்லாம் அதிர்ஷ்டம் என்றும், பிரதிகூலமாக முடிகிறவற்றைஎல்லாம் துரதிர்ஷ்டம் என்றும் வகுத்து உலக வழக்கில் மிகவும் குழந்தைத் தனமானதொரு தத்துவத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். அது போகட்டும்! நீ மணி மாலை இதழ்களை ஆரம்பத்திலிருந்து படித்திருக்கிறாயா?''

''அநேகமாக மணிமாலை இதழ்கள் எல்லாவற்றையுமே நான் படித்திருக்கிறேன். மணிமாலை இதழ்களைத் தவிர உங்களுடைய கதைகளையும், கவிதைகளையும், நாவல்களையும் நூல் வடிவிலும் பல முறை படித்திருக்

கிறேன். 'பாற் கடல்' என்ற நாவலில் 'பேசிய பேச்சுக்குத்தான் பதங்கள் சாட்சியாய் நிற்கும். பேசாத நினைப்புக்கு மனம் தான் சாட்சி. மனம் மட்டுமே சாட்சியாக நிற்கிற பல ஞாபகங்களுக்கு நிதானமும் பொறுமையும் இல்லாத இந்த அவசரக்கார உலகத்தில் நிரூபணமே கிடையாது போல் இருக்கிறது' என்று தன் காதலை நிரூபிப்பதற்குப் பதங்களையும் பேச்சையும் சாட்சியாக்க முடியாமல் தவிக்கும் ஓர் ஊமைப் பெண் எண்ணுவதாக எழுதியிருக்கிறீர்களே— அந்த இடத்தை மட்டும் நான் ஆயிரம் தடவைகளுக்குக் குறையாமல் படித்திருப்பேன்.''

''ரொம்பப் புகழாதே! புகழ் என்னைச் சோர்ந்து போகும்படி பண்ணி விடுகிறது. ஒரு நிலைமைக்கு மேல் பழிக்குப் பயப்படுவதுபோல் புகழுக்கும்கூடப் பயந்து விலகி ஒதுங்க வேண்டியிருக்கிறது அம்மா!'' என்று சொல்லிச் சிரித்த போது புகழையும் கடந்து நிற்கும் அவருடைய தன்னம்பிக்கையைக் கருணை வியந்தாள். அன்று இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மணிமாலை ஆசிரியருக்கு வந்த டெலிபோன் கால்கள் எல்லாம் அந்த வார இதழில் திராட்சைத் தோட்டம் தொடர் கதை ஏன் வெளியிடப் பெறவில்லை என்பதை விசாரித்தே வந்தன. முதல் முறை டெலிபோன் மணியடித்த போது மட்டும் அந்த மணியோசையைக் கேட்டு அடையாளமாக நடந்து டெலிபோன் இருந்த மேஜையருகே வந்து நின்று அவரே பதில் கூறினார். அதற்கப்புறம் வந்த 'டெலிபோன் கால்'களுக்கெல்லாம் அவரை எழுந்திருந்து சிரமப்பட விடாமல் உட்கார்த்தி வைத்து விட்டுச் கருணையே பதில் கூறினாள்.

''நியமனம் செய்வதற்கு முன்பே உத்தியோகத்தைப் பார்க்கத் தொடங்கி விட்டாய் போலிருக்கிறது'' என்று சொல்லிச் சிரித்தார் அவர். சில விநாடிகளில் முதன் முதலாக அவள் அப்போதுதான் தன்னைப் பார்த்துப் போவதற்கு வந்திருக்கிறாள் என்பதை அவரே மறந்தவராக, அடுத்த வாரத் தலையங்கத்துக்காக அன்றைய ஆங்கிலச் செய்தித்தாளில் செய்திகளைப் படிக்கச் சொன்னார். 'காமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் சந்தித்துப் பேசிய செய்தியை' அவள் விரிவாகப் படித்த போது அதில் சில சில பகுதிகளைக் குறித்துக் கொள்ளச் சொன்னார். அப்புறம் கருணை தானாகவே மேஜையில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த அன்றையத் தபால்களைப் படித்தாள். கடைசியாகக் காரியங்களில் அலுத்தவர் போல், ''வீணை தெரியும் என்றாயே; ஏதாவது வாசிக்கலாமோ? இந்த அறையிலேயே ஒரு வீணை இருக்கும். நான் கூட எப்போதாவது வாசிப்பேன். கைப் பழக்கத்தில் கூடியவரை அபஸ்வரமில்லாமல் ஏதோ வரும். உனக்குப் பிடித்ததை நீ வாசியேன்'' என்று சொல்லி வீணையை எடுத்து வந்து தர எழுந்திருந்தவரைத் தடுத்து, ''நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். நானே எழுந்து எடுத்து வாசிக்கிறேன்'' என்று எழுந்தாள் கருணை. 'க்ஷீரஸாகர' என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டு அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். மகா கவியான ஒரு மேதைக்கு முன்னால் உட்கார்ந்து வாசிக்கிறோம் என்ற பயபக்தியோடு அன்று அவள் அதை அநுபவித்து வாசித்தாள். அவள் வாசித்து முடித்த போது திடீரென்று குழந்தையின் உற்சாகம் வரப்பெற்றவராய்க் கைகளைத் தட்டிக் கரகோஷ ஆரவாரம் செய்தார் அவர். ''ஏதேது? கச்சேரியே செய்து விடுவாய் போல் இருக்கிறதே? இவ்வளவு தெரிந்து வைத்துக் கொண்டு கொஞ்சம் வீணையும் தெரியும் என்றாயே பார்க்கலாம்!''

''மன்னிக்க வேண்டும் சார்! உங்களுக்கு முன் ஒன்றும் தெரியாதவளாகப் பிரமித்துத் தயங்கி நிற்பதில்தான் நான் சந்தோஷப்பட முடியும்'' என்று விநயமாகப் பதில் இறுத்தாள் கருணை. ஆசைப்பட்டு அவரே இன்னொரு பாட்டும் வாசிக்கச் சொன்னார். நல்ல வேளையாக அவர் விரும்பிய அந்தப் பாட்டும்



அவளுக்குத் தெரிந்ததாகவே இருந்தது. 'தெலியலேது ராமா பக்தி மார்க்கமு' என்ற உருக்கமான கீர்த்தனையை அவர் விரும்பினார். அதையும் அவள் நன்றாக வாசித்து முடித்த போது அவருக்குப் பிடிபடாத மகிழ்ச்சிபெருகி விட்டது. அவரை அவள் வியந்தது தவிர இந்த விநாடியில் அவரும் அவளை வியந்தார்.


'' 'தேனுகா'வில் எப்போதுமே தோடியின் பல்லாயிரம் நயங்களில் மிக அபூர்வமானதொரு நயத்தின் சாயை படர்ந்திருக்கும். அதை நான் ரொம்ப ரொம்ப ரசிப்பேன்'' என்று முகம் மலர்ந்தார் அவர். இப்படிப் பல நாள் நியமனமும் பதவியும் இல்லாமல் அவள் அவருக்குக் கண்களாக இருந்து பயன்பட்டுப் பயன்பட்டு முடிவில் அவளே அவரை வென்று கவர்ந்தாள். அவளிடம் அவர் நம்பிக்கையோடும் சிரத்தையோடும் தன்னை ஒப்படைத்துச் சிறைப்பட்டார். 'புகழ் பெற்ற நான் தனிமையில் எவ்வளவு நிராதரவாயிருக்கிறேன் பார் அம்மா!' என்று அவர் கவலைப்பட்ட வேதனை கருணையால் தீர்ந்து விட்டது. அன்றிலிருந்து மணிமாலை காரியாலயத்தில் எல்லாக் காரியங்

களும் கறுகறுப்பாக நடக்கத் தொடங்கின.
திராட்சைத் தோட்டம் அற்புதமாக வாரா
வாரம் வெளிவரத் தொடங்கியது.
வாலிபப் பருவத்திற்கேற்ப தாய் தந்தை—
இருவரையும் இழந்து மாமன் வீட்டில்
வளர்ந்து — கருணையும் அன்பும் அறியாத
மாமியின் கொடுமைகளிலும் பொறுமையும்
நிதானமும் கற்று—சாந்த ஸ்வரூபியான மாமா
வின் அன்பிலே நம்பிக்கை வைத்துப் படிப்பு
முதல் உலகம் வரை ஓரளவு கற்றுத் தேறிய
பின் — அந்த வீட்டுக்குத்தான் பாரமாயிருக்கக்
கூடாதென்று புரிந்து கொண்டு உத்தியோக
மும் உறவும் தேடி உலகத்தை எதிர்பார்த்துக்
கொண்டிருந்தவளுக்குக் குமாரகவி புகலிடம்
அளித்து விட்டார். இரண்டு நிராதரவுகள்
ஒன்று சேர்ந்த போது தனித் தனியாய்
இருவருமே துணையை அடைந்து விட்டதை
உணர்ந்தனர். கல்லூரிப் படிப்பிலிருந்து
அவர்கள் குடியிருந்த அந்த வீட்டின் மற்
றொரு பகுதியில் ஒண்டுக் குடித்தனமிருந்த
பாட்டு வாத்தியார் ஓசிக்குச் சொல்லிக்
கொடுத்த வீணை வரை எதுவுமே அவளுக்கு
வரக் கூடாதென்று கொடுமைக்கார மாமி
சாபமிட்டதற்கு மாறாக அவளுக்குத்தான்
எல்லாம் நான் முந்தி நீ முந்தி என்று
போட்டி போட்டுக் கொண்டு வந்தன.
மாமியால் செய்ய முடிந்த உபகாரம், ''மாடு
மாதிரி வளர்ந்தாச்சு! இன்னும் படிப்பென்ன
வேண்டியிருக்கு, படிப்பு?'' என்று 'இண்ட
ரோடு' அவளை மட்டம் தட்டி வீட்டில் உட்
கார வைக்க முடிந்த உபகாரம்தான். ''நாட்
டியம், வீணையின்னு கண்ட கண்ட தடிய
னோட எல்லாம் போயிட்டு வந்தியோ — வீட்
டுக்குள்ளே காலை வைக்க விடமாட்டேன்''
என்று அவளுடைய துறுதுறுப்பான கலை
ஆர்வத்தையும் ஒடுக்கி நடக்கிற காலை ஒடிக்
கப் போவதாகச் சொல்லிக் கொண்டே மனத்
தின் கால்களை முறித்து வீட்டில் உட்கார்த்தி
யும் அத்தனையையும் மீறி அவள் வளர்ந்திருந்
தாள் — மலர்ந்திருந்தாள். தன்னை மறக்
கின்ற அல்லது தன்னை இழக்கின்ற பரந்த
பெருந்தன்மையை இந்தக் கசப்பு நிறைந்த
வாழ்க்கைதான் அவளுக்குக் கற்றுக் கொடுத்
திருந்தது. ஏதாவது ஓர் உறவைக் கற்பித்துக்
கொள்ளாமல் உத்தியோகமாகவோ, உபசார
மாகவோ மட்டும் ஒரு பெண் ஓர் ஆடவனை
நெருங்கி வாழ்வதைக் கௌரவமாகவோ,
நாகரிகமாகவோ அங்கீகரித்துக் கொள்வதற்கு
அத்தனை தாராள மனமுள்ளவர்கள் இந்தத்
தேசத்தில் இன்று வரை எங்கே ஏற்பட்டிருக்
கிறார்கள்? நேரம் காலம் பாராமல் கருணா
குமாரகவியோடு காரில் சுற்றியதும், டிரை
வர்கூட இல்லாமல் அவளே அவருடன் தனி
மையில் காரை ஓட்டிக் கொண்டு போன
தும், இரவு பகல் பாராமல் அவருடைய அறை
யிலும், வீட்டின் மாடியிலும் உடனிருந்து
அவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிய
தும்—வம்பு பேசுகிற இந்த உலகத்தின் கண்
களில் நியாயமான காரியங்களாகப்படவில்லை.

''குமார கவிஞர் ரொம்பப் பசையுள்ள
ஆளோ இல்லையோ? அதனால்தான் இந்தக்
குட்டி அந்தக் குருடனை மயக்கி வளைக்கப்
பார்க்கிறாள்'' என்று இலை மறை காய்மறை
வாக மற்றவர்கள் பேசுவது அவள்
காதிலேயே விழத் தொடங்கியது.
கூச்சத்தையும் வெட்கத்தையும் துறந்து
இந்த வம்பை யெல்லாம் ஒரு நாள் அவ
ரிடமே சொல்லி அழுதபின், ''தெய்வமே!
உடனே என்னைக் கலியாணம் பண்ணிக்
கொண்டு விடுங்கள். அல்லது நம்பிக்கை
வாய்ந்த வேறொரு காரியதரிசியைத் தேடிக்
கொண்டு என்னை வெளியே அனுப்பிவிடுங்கள்.
என்னால்தான் உங்களைப் பற்றிக் கன்னாபின்னா
வென்று பேசுகிறார்கள்....'' என்று அவள்
வேண்டிய போது நாற்பது வயது வரை ஏற்
படுத்திக் கொள்ளத் தயங்கி விட்ட ஒரு
வாழ்வை நினைத்துக் கண்தெரியாத தன்
னுடன் மனைவியாகக் கைகோத்து நடக்கும்
தண்டனையை ஓர் இளம் பெண்ணுக்கு அளித்
துத்தான் ஆகவேண்டுமா? — என்னும் சிந்
தனையில் மூழ்கினார் குமாரகவி. கருணாவோ,
பழி சொல்லத் தொடங்கி விட்ட உலகத்தின்
வாய் நிச்சயமாக அடைத்துப் போய் விடும்
படி பழியையும் பழி வாங்கிவிடுகிற பிடிவாதத்
தோடு ஏறக்குறைய இருபது வயதுக்கு மேல்
மூத்தவரான அந்தக் குமாரகவிக்குத் தன்னைச்
சமர்ப்பிக்கத் தயாராகி விட்டாள். அவரும்
தீர்க்கமாக யோசித்தபின், ''உன்னுடைய
இடம் இன்னொருவரால் நிரப்ப முடியாது.
உன்னை இழப்பதற்குப் பயந்து உனக்காக நான்
என்னை இழந்து விடலாமென்றுதான் தோன்று
கிறது. உன்னை நான் மணப்பதற்குச் சம்மதிக்
கிறேன். ஆனாலும் இது ரொம்பப் பெரிய சுய
நலம்தான்'' என்று நாத் தழுதழுக்கக் கூறிய
பின் ஒரு மணி நேரத்தில் தீர்மானம் செய்து
அரை மணி நேரத்தில் பதிவுத் திருமண
ரிஜிஸ்திரார் அலுவலகத்துக்குப் போய்க் கண
வனும் மனைவியுமாக வாழப் போவதாகக்
கையெழுத்திட்டுவிட்டு வந்தார்கள் அவர்கள்.
மறுநாள் காலைப் பத்திரிகைகளில் குருடரான
குமார கவியின் திடீர்த் திருமணம் பிரமாதப்
பட்டது. எவ்வளவு பிரமாதப்படுகிற விஷய
மும் நாளடைவில் பரபரப்பும் புதுமையும்
தேய்ந்து பழசாகத்தானே வேண்டும். அவர்
களுடைய அதிசயக் கல்யாணமும் அப்படி ஒரு
நாள் பழசாகிப் பரபரப்புக் குறைந்து புதுக்
கருக்குத் தேய்ந்து எல்லாருக்கும் தெரிந்து
விட்ட இரகசியமாய் இனி யாரும் தெரிந்து
கொள்ளத் தவிக்காத பகிரங்கமாகி விட்டது.
ஆனால் அந்தக் கலியாணத்துக்கு உடன்பட்ட
போது, ''மனக் கண்ணால் மட்டுமே
உலகத்தை அறிய முடிந்தவனுக்குச் சில
சௌகரியங்களும் உண்டு; பல அசௌக
ரியங்களும் உண்டு கருணா! அந்தச் சௌகரிய
அசௌகரியங்களை இன்று முதல் இனி நான்
உன் கண் பார்வையில் விட்டு விடுகிறேன்''
என்று சொல்லித் தன்னைச் சமர்ப்பித்து
விட அவரை நாடி வந்த அவளிடம் பெருந்
தன்மையாகத் தம்மையே சமர்ப்பித்திருந்
தார் அவர்.

இந்த அர்த்தம் நிறைந்த வாக்கியங்களை
அவள் அடிக்கடி நினைவுகூருவது உண்டு. அவ
ளுடைய ஒவ்வோர் இரவும் அவருக்கு வந்த
தபால்கள், பத்திரிகைக்கு வந்த கதைகள்,

புத்தகங்கள் ஆகியவற்றை அவருக்குப் படித்துச் சொல்லுவதிலும், அவர் சொல்வதை எழுதிக் கொள்வதிலும் அவசர அவசரமாகவும் சொல்கிறவரின் வேகத்தைப் பின்தொடர்வதற்காகவும் விரைந்து கிறுக்கிக் கிறுக்கி எழுதியவற்றைப் பின்பு அச்சுக்குக் கொடுப்பதற்கு ஏற்றபடி பிரதி எடுப்பதிலுமாகக் கழிந்திருக்கின்றன. எத்தனையோ பல இரவுகளில் அவர் தூங்கிய பின்பும் அவள் விழித்திருந்து பால்கனிக்கு அப்பால் பெருமூச்சு விடுவது போல் சீறும் வேப்பமரக்காற்றையும், அகஸ்மாத்தாக ஆகாயத்திலிருந்து உதிரும் ஏதோ ஒரு நட்சத்திரத்தையும் அதன் சாவையும் தகனத்தையும் பார்த்து இரசித்திருக்கிறாள். 'எவ்வளவோ நட்சத்திரங்கள் உதிர்ந்த பின்னும் நஷ்டப்படாத இந்த ஆகாயம் இன்னும் அழகாகத்தான் இருக்கிறது. இப்படி இடைவிடாமல், நாள் தவறாமல் நட்சத்திரங்கள் உதிர்ந்து கொண்டேயிருந்தால் ஒருநாள் ஆகாயம் சூனியமாகி.... அப்பப்பா! நினைப்பதற்கே இரசக் குறைவாயிருக்கிறதே? என்று அந்த அபூத ஞாபகம் சலித்து அப்புறம் உள்ளே போய்ப் படுத்திருக்கிறாள். அவளுடைய எத்தனையோ இரவுகள் ஒரேமாதிரிக் கழிந்திருக்கின்றன. மிகவும் சோர்வாகவும் சலிப்பாகவும் இருக்கும் போது தன்னை அவர் மணந்து கொண்ட புதிதில் திராட்சைத் தோட்டம் தொடர் கதையில் வரவேண்டிய சில அத்தியாயங்களை எழுதுவதற்காகக் குருகுமலைப் பள்ளத்தாக்கிலிருந்த திராட்சைத் தோட்டங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று அவரைக் காரில் அழைத்துக் கொண்டு போயிருந்த பௌர்ணமி இரவை ஞாபகப்படுத்திக் கொள்ளுவாள் அவள். அன்று அவர் மிக மிக உற்சாகமாயிருந்தார். கன்னங்கரேலென்று கொத்துக் கொத்தாகத் தொங்கிய கறுப்புத் திராட்சைக் குலைகளையும், மிக நீண்ட வெள்ளைத் திராட்சைக் குலைகளையும், நடுநடுவே 'ஸில்வர் ஓக்ஸ்' மரங்களைக் கட்டை கட்டையாகக் கத்திரித்து விட்டு—அவற்றைத் தூண்களாகக் கொண்டு மூங்கில் பிளாச்சுக்களால் வேய்ந்திருந்த பந்தலில் கண்ணுக்கெட்டிய தூரம் பல ஏக்கர் நிலப் பரப்பில் திராட்சைக் கொடிகள் படர்ந்திருக்கும் அழகையும், அவற்றிற்கு மேலே மலைச் சரிவில் நிலாக் காயும் அழகையும் அன்று அவர் பொருட்டுத் தன் கண்களால் பார்த்து அவருக்கு வர்ணித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள். அப்போது முதல் முதலாக அவளை அல்லது அவள் அழகை மனக் கண்ணால் பார்த்து இரசித்தவர்போல் குறும்புத்தனமான காதல் நிறைந்த வார்த்தைகள் சிலவற்றைப் பேசியிருந்தார் அவர்.



''நீ வர்ணிக்கிற இந்தத் திராட்சைப் பழங்களை விடச் சுவையும் மதுரமும் நிறைந்த வேறு இரண்டு திராட்சைக் கனிகளை எனக்குத் தெரியும், கருணா! அவை மண்ணில் முளைக்காமல் மரத்தில் படராமல் கனிந்திருக்கும். சொல் அதிராமல் சங்கீதம்போல் இனிய குரலில் பேசும் அந்தத் திராட்சைக் கனிகள் இரண்டும்தான் இதோ இப்போது இந்தத் திராட்சைத் தோட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனவே'' என்று கூறிவிட்டு அவள் முகத்தருகே கையைக் கொணர்ந்து வார்த்தை அதிராமல் வாய் திறந்து பேசும் அந்த வெல்வெட் உதடுகளை மிகவும் அடையாளமாகத் தொட்டுக் காண்பித்துவிட்டுக் கைகொட்டிச் சிரித்தார். அப்போதும் தன்னைப் பார்க்க முடியாத அவர் கண்களுக்கு முன்—அவை தன்னைப் பார்ப்பதாகவே பாவித்துக் கொண்டு நாணினாள் கருணா. முழுக்க முழுக்கத் திராட்சைத் தோட்டத்தின் சூழ்நிலையிலேயே நிகழும் அந்த நாவலில் காதலும், நிராசையும், சுகமும் துக்கமும்; வறுமையும், வளமையும் அமைந்து வர உணர்ச்சிகரமாக ஒவ்வோர் அத்தியாயத்தையும் எழுதி வந்தார் அவர். ஒரு பழம் புளிக்கிறது. இன்னொரு பழம் இனிக்கிறது. 'தோட்டம் முழுதும் இனிக்கின்ற பழங்களே பழுக்கும் திராட்சை வனமோ அல்லது தோட்டம் முழுவதும் புளிக்கின்ற பழமே பழுக்கும் திராட்சை வனமோ எங்கும் கிடையாது. சுக துக்கங்கள் கலந்த வாழ்க்கையைப் போல் ஒரே மண்ணில் வருத்த வாழ்வில் இன்ப துன்பங்களைக் கலந்தே எதிர்பார்க்கும் மனிதர்களைப்போல் அந்தத் திராட்சைத் தோட்டமும் இருக்கது—என்று அந்த நாவலின் கதாபாத்திரங்களையும், அவர்களின் சுக துக்க அநுபவங்களையுமே ஒரு திராட்சைத் தோட்டமாக உருவகப்படுத்திக் கதையை முடிக்கவேண்டும் என்று அவர் நினைத்திருந்தது அவளுக்குத் தெரியும். இன்னொரு நாள் அவர் அவளிடம் வேறோர் ஆச்சரியகரமான சொப்பனத்தைப் பற்றிச் சொல்லியிருந்தார். ''கருணா! நேற்றிரவு நீ எழுதிக் கொள்வதற்காகத் திராட்சைத் தோட்டத்தின் தொடர் கதையின் அத்தியாயங்கள் சிலவற்றை 'டிக்டேட்' செய்து விட்டுத் தூங்கப்போனேன் அல்லவா? அந்தத் தூக்கத்தில் ஓர் அபூர்வமான சொப்பனம் கண்டேன். என் கண்களுக்கு முன்னால் பளபளக்கும் வர்ணக் கோளங்கள்போல் கறுப்பிலும், வெளுப்பிலும், சிவப்பிலும், நீலத்திலுமாக ஒரே திராட்சைக் கனிகளாக உருள்கின்றன. உற்றுப் பார்த்தபோது ஒவ்வொரு கனியிலும் உன் முகம் தெரிகிறது. சொப்பனத்தில் நான் குருடனாக இல்லாததால் உன் முகத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது. நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்தத் திராட்சைக் கனிகள் அத்தனையும் உன் உதடுகளாக மாறி நகைக்கின்ற மாதிரித் தெரிந்தன. அப்புறம் நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்தக் கனி ரசம் ததும்பும் உதடுகளை....'' என்று உற்சாகமாகக் கதை சொல்வது போல் சொல்லிக் கொண்டே வந்தவர் குறும்புத்தனமாகச் சிரித்துவிட்டுப் பேச்சை நிறுத்திவிட்டார். மீதம் பேச வேண்டிய வார்த்தைகளை அந்தப் புன்ன

கையே பிரதிநிதியாக இருந்து அவளுக்குச் சொல்லி முடித்து விட்டது. அந்த விநாடியிலும் பார்க்க முடியாத அந்தக் கண்கள் தன்னையே உற்றுப் பார்க்கின்றன போல் பாவித்துக்கொண்டு அவள் மெய் நிறையத் ததும்பி வழியும் நாணத்தோடு நின்றாள். மனம் விரும்பி நயந்த நாயகனை நினைக்கும்போது நாணி நிற்கும் பண்பை உயர்ந்த தரத்துப் பெண்களின் இலட்சணமாகக் காவியங்கள் சொல்கின்றன. கம்பீரமான இலக்கிய நாயகனான அவள் கணவன் சரசமாக உரையாடும்போது அவளும் தன்னையறியாமலே அப்படி நாணி நிற்பது வழக்கமாகி விட்டது.

''கருணா! மனம் விகாரப்படாமல் இப்போது நான் சொல்வதை அப்படியே கேட்டுக்கொள்! 'பணமும் சௌகரியங்களும் பெரும் புகழும் உள்ள ஒரு குருடனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்ட நிர்ப்பந்தத்திற்காகக் கருணா மாடாய் உழைக்கிறாள். ஏதோ வாழ்க்கைப்பட்டு விட்டாளே ஒழியச் சந்தோஷமாக அவள் வாழவில்லை' என்று உன்னைப் பற்றித் தப்பாக நினைத்து யாரும் அநாவசியமாய் அநுதாபப் படவோ, வம்பு பேசவோ சிறிதும் இடம் வைக்காமல் நீ உன்னை நன்றாக அலங்கரித்துக் கொள்ள வேண்டும். சந்தோஷமாகத் துலங்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் உன்னளவு சந்தோஷம் உலகத்திலேயே வேறு யாருக்கும் இல்லை என்பதுபோல் உன்னைக் காண்பவர்களுக்கெல்லாம் தோன்றும்படி அத்தனை மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் உன்னை நீ உலகுக்குக் காண்பித்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த ஜாதி மல்லிகைப் பூக்கள் சதா காலமும் உன் கூந்தலில் மணந்து கொண்டிருக்க வேண்டும். பூப்போன்ற உன் முன் கைகளில் கலின் கலின் என்று வளைகள் குலுங்க வேண்டும். நீ நடந்து வரும்போதெல்லாம் உன்னுடைய கால் விரல்களில் மெட்டி தாளமிட வேண்டும். அப்படித் தாளமிடுவது போல் ஓசை எழுப்பி நடந்து உனக்குப் பழக்கமில்லை என்றாலும் நான் கேட்டு மகிழுவதற்காக — அந்த மகிழ்ச்சியிலிருந்து என் மனக் கண்ணில் பல்லாயிரம் கற்பனைகள் தெரிவதற்காக நீ உன் கால்களில் மெட்டியிட்டு நடந்து வரவேண்டும். கருணா! நீ ரொம்ப ரொம்ப அழகாக இருப்பதாக முதல் முதலாக நீ இந்த வீட்டுக்கு வந்த மறுதினம் இங்கிருக்கிற வேலைக்காரப் பெண் என்னிடம் வந்து வாய் ஓயாமல் சொல்லிப் பெருமைப்பட்டாள். அவள் அப்படிச் சொல்லியபோது உன்னுடைய அழகைப் பார்ப்பதற்காகவாவது ஒரு விநாடி என் கண்களுக்குப் பார்க்கும் ஆற்றலை அடைந்து பின் இழக்க வேண்டும் போல் தவித்தேன் நான். இந்த உலகத்தில் எதைப் பார்ப்பதற்காகவும் என்னுடைய சொந்தக் கண்கள் எனக்கு வேண்டும் என்று நான் இனிமேல் தவிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் உன்னைப் பார்ப்பதற்கு மட்டும் என் சொந்தக் கண்கள் ஒரு விநாடி நேரம் எனக்கு வேண்டும்போலிருக்கிறது. உன்னைத் தவிர மற்றெல்லாவற்றையும் காண்பதற்கு உன் கண்களே போதும் எனக்கு'' — என்று குரல் கரகரத்து உணர்ச்சி மயமாகிப் பேசிக் கொண்டு வரும்போதே அழுதுவிட்டார் அவர். அவள் ஒரு நாள் பூ வைத்துக் கொள்ளவில்லை என்றாலும் அவருக்குக் கோபம் வரும். என்றாவது கால் விரல்கள் வலிக்கிறதென்று அவள் மெட்டி போட்டுக்கொள்ளாமல் நடந்தால் அவருக்குப் பிடிக்காது. திராட்சைத் தோட்டம் தொடர் கதை முடிந்ததும் அதைப் புத்தகமாக வெளியிட்ட போது, 'அந்தகனாகிய நான் உலகத்தைப்பார்ப்பதற்கும், பார்த்துப் புரிந்துகொள்வதற்கும் நம்பிக்கை வாய்ந்த கண்களாக விளங்கிவரும் என் அருமை வாழ்க்கைத் துணைவி கருணாவுக்கு இந்தப் புத்தகத்தைச் சமர்ப்பணம் செய்கிறேன்'' என்று முன்னுரையில் எழுதியிருந்தார் அவர். அந்த முன்னுரையை அவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதும்போது கருணாவே அதை எவ்வளவோ எடுத்துக்கூறி மறுத்துப் பார்த்தாள். ''உங்களுக்குப் பணிவிடை புரிந்து உங்கள் வாழ்க்கைத் துணைவியாயிருப்பதற்காக நான் அல்லவா பெருமைப்பட வேண்டும்? நானே பிடிவாதமாகவும், தீர்மானமாகவும், உங்களுக்குச் சமர்ப்பணமாகியிருக்கும்போது நீங்கள் எனக்குச் சமர்ப்பணம் செய்வது கொஞ்சம்கூட நன்றாக இல்லை'' என்று விளக்கிச் சொல்லிவிட்டு, முன்னுரையில் அவர் கூறிய அந்தச் சமர்ப்பண வார்த்தைகளை எழுதத் தயங்கியவளை, ''நான் சொல்வதை அப்படியே எழுது கருணா! தயவுசெய்து இதை மட்டும் மறுத்துப் பேசாதே. அன்று திராட்சைத் தோட்டம்' தொடர் கதையைப் பிரதி செய்து எழுதி அச்சுக்குக் கொடுக்க யாருமில்லாமல் அது நின்றுபோயிருந்த நாளில் நீ என்னைத் தேடி வந்து எனக்குத் துணையாகியிராவிட்டால் இந்தப் புத்தகமே வெளி வந்திருக்க இயலாது. அதனால் இதைச் சமர்ப்பணம் செய்வதற்கு உன்னைவிடப் பொருத்தமானவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது'' என்று வற்புறுத்தித் தாம் விரும்பியபடியே செய்துவிட்டார் அவர். அதில் உள்ளூர அவளுக்கும் பெருமைதான். தொடர் கதை முடிந்து ஓய்வாயிருந்த காலத்தில் வெளி நாடுகளின் கலாசார உறவுகளைப் பரிமாறிக் கொள்ளும் பொருட்டு இந்திய அரசாங்கம் ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரிவு செய்து அனுப்ப இருந்த மூவரில் குமார கவியின் பெயர் முதலாவதாக இருந்தது. கருணாவின் கண்களால்தான் ஐரோப்பிய நாடுகளை அவர் சுற்றிப் பார்த்தார். 'உடல்நிலை காரணமாகத் தமக்கு வசதிப்படாதென்று' அந்த வாய்ப்பையும் பிரயாணத்தையும் அவர் மறுப்பதாக இருந்தார். கருணாதான் அதற்கு அவரை ஒப்புக்கொள்ளச் செய்து அழைத்துப் போய் ஐரோப்பா முழுவதும் சுற்றிக் காண்பித்துவிட்டு வந்தாள். திரும்புகிற வழியில் சிங்கப்பூரில் ஒரு வாரம் தங்கியிருந்தார்கள் அவர்கள். அங்கே தமிழர்கள் பெருவாரியாகக் கூடிய சிறப்புக் கூட்டமொன்றில் குமார கவியைச் சொற்பொழிவு செய்யச் சொன்னார்கள். ''என் எழுத்துக்களால் நான் ஒரு புதிய உலகத்தைப் படைப்பதாகவும் படைக்க ஆசைப்படுவதாகவும்—இங்கு எனக்களித்த வர

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவு

இவைகளுக்கான சிகிச்சையில்

போர்ஹான்ஸ்

டூத்பேஸ்ட் உபயோகித்துப் பெற்ற

வியக்கதக்க பலன்கள்

ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

*[illegible]



என்னுடைய பற்கள் பருப்போல ஆகி விருந்ததால் 1948ல் அவைகளிலிருந்து இரத்தம் கசியத்தொடங்கியது. என் பற்களைப்பற்றிப் பெருமைப்படும் என் கணவர் என்னை போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் உபயோகிக்கச் சொன்னார். அதன்படி நான் போர்ஹான்ஸைத் தவறாமல் உபயோகித்து அதன்மூலம் விசேஷமான பலன்களையும் அடைந்தேன்.

ஜெ. கே. பிலாஸ்பூர்



மூன்று வருடங்களுக்கு முன்பு நான் பல்வலியினால் வேதனைப்பட்டேன். என் நண்பன் ஒருவன் போர்ஹான்ஸை உபயோகிக்கும்படி ஆலோசனை கூறினான். அதை நான் உபயோகிக்கத் தொடங்கினேன். ஒரு மாதம் கழிந்தவுடன் என் பல்வலி குணமானதுடன் என் பற்கள் ஒளிவீசும் வெண்மையுடனிருப்பதைக் கண்டு வியந்தேன். நான் இப்போது போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன்.

சி. பி. பம்பாய்



நான் இளமைப் பிராயத்திலிருந்தே போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன். என் குடும்பத்தில் எல்லோரும் இந்த டூத்பேஸ்டை உபயோகிக்கிறார்கள். ஏனெனில் இது பற்களை ஒளிவீசும் வெண்மையுடனும் ஈறுகளை ஆரோக்கியத்துடனும் இருக்க உதவுகிறதென்பதைக் கண்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

(ஸ்ரீமதி) கே. வி. பங்களூர்

இலவசம் — பற்கள் பராமரிப்பு பற்றி படங்கள் கொண்ட புத்தகம்


ஈறு உபாதைகள் மற்றும் பற்சிதைவிலிருந்து உங்கள் பற்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றி மேலும் அறிய நீங்கள் விரும்பினால், இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு "CARE OF THE TEETH & GUMS" என்ற புத்தகத்தின் (ஆங்கிலத்தில்) பிரதியைப்பெற தபால் செலவுக்கென 15 ந. பை ஸ்டாம்புகளை அனுப்பவும்: டிபார்ட்மெண்ட்: கே-6, மானேர்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, தபால் பை எண். 10031, பம்பாய்-1



...இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு.

போர்ஹான்ஸ்

டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷ் உபயோகியுங்கள்



இந்த டூத்பிரஷ் மட்டுமே

★ உங்கள் பற்களை சுத்தம் செய்வதோடு

★ ஈறுகளையும் இதமாகத் தடவிக் கொடுக்கிறது.

BJJ-TAM

வேற்புரையில் கூறினார்கள்: எழுத்தில் என்னுடைய அபிப்பிராயங்களும், கற்பனைகளும், இவளுடைய பார்வையால்தான்படைக்கப்படுகின்றன. வாழ்க்கைக்குச்செலவாகிற பொருளை ஈட்டுகிறவன் கணவன். வாழ்க்கையைத் தொடங்கி அதன் மேடு பள்ளங்கள் நிறைந்த நீண்டவழியில் ஆண்மை வாய்ந்த துணையாயிருந்து பெண்ணை உடனழைத்துச் செல்கிறவனும் கணவன்தான். அப்படியிருந்தும் நம்முடைய பழைமை வாய்ந்த மொழியில் மனைவிக்குத்தான் வாழ்க்கைத் துணை என்று பெயர். என்னைப் பொறுத்தவரையிலோ நிஜமாகவே இவள்தான் என் வாழ்க்கைக்குத் துணை. நான் ஒரு பெரிய ஆசிரியர் என்பதற்காகவும் என்னுடைய கதைகளும், கவிதைகளும் நாவல்களும் பல்லாயிரக் கணக்கானவர்களைக் கவர்ந்து சிந்திக்க வைத்திருக்கின்றன என்பதற்காகவும் பெருமைப்படுவதைவிட இவள் என்னுடைய சகதர்மிணியாக இருக்கிறாள் என்பதற்காகவே நான் அதிகமாகப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பார்வையால்தான் அபிப்பிராயம் பிறக்கிறது. முதலில் அபிப்பிராயம் கண்களில்தான் பிறக்கிறது. பின்புதான் கருத்தில் பிறக்கிறது. எனக்காக இவள் பார்க்கிறாள். இவள் பார்த்தவற்றை நான் நினைக்கிறேன். பார்வை இவளுடையது. அபிப்பிராயங்கள் என்னுடையவை. இவளை நான் வெறும் மனைவியாக நினைக்கவில்லை. என்னுடைய எழுத்திலும் மனத்திலும் நிரம்பியிருக்கிற சகலவிதமான அழகுகளும், அருமைகளும், இவளுடைய வட்டவசீகரமான கண்களிலிருந்துதான் ஆரம்பமாகின்றன என்று எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு.''

— இப்படி முழுக்க முழுக்க அவளைப் பற்றியே அந்தக் கூட்டத்தில் புகழ் மாரி பொழிந்துவிட்டு உட்கார்ந்தார் அவர். அவருடைய எல்லையற்ற வாஞ்சையும் பிரியமும் பாசமும் தன்னைச் சார்ந்திருக்கிறது என்ற ஒரே நம்பிக்கை வாழ்க்கையின் மற்ற நஷ்டங்களை அவள் தனக்குத் தானே மறந்து போகும்படி செய்திருந்தது.

'துன்ப நினைவுகளும் சோர்வும் பயமும் எல்லாம் அன்பில் அழியுமடி கிளியே!' என்று பாரதியார் பாடியிருக்கிறதைப் போல அவருடைய அன்பு சமுத்திரமாகப் பெருகி வெறும் சமுத்திரமாக அல்ல—கருணை சமுத்திரமாகிப் பெருகித் தன்னைச் சூழ்ந்திருக்கிறதென்ற ஒரே பெருமிதத்தில் துன்பமும், சோர்வும், பயமும் அறியாமல் வாழ்ந்து கொண்டிருந்தாள் அவள்.

ஒரு நாள் பகல் உணவின் போது முன் பின் தகவல் தெரிவிக்காமல் திடீரென்று அவரை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்ய வேண்டுமென்று நினைத்து அவருடைய இலையில் பால் பாயசத்தை ஊற்றிவிட்டு, ''இன்று எனக்குப் பிறந்த நாள்'' என்று கருணை கூறியபோது ''இதை ஏன் முன்பே சொல்லவில்லை? உன்னுடைய பிறந்த நாளை நான் அல்லவா கொண்டாட வேண்டும்? எனக்கு வழிகாட்டித் துணையாயிருந்து அழைத்துச் செல்வதற்குப் பிறந்தவளாயிற்றே நீ'' என்பதாக மறுமொழி கூறிவிட்டுச் சிந்தனையிலாழ்ந்தார் அவர். அன்று மாலையிலே வந்த தபால்களைப் படித்துக் காண்பித்துவிட்டு அவர் சொல்லப் போகிற பதில்களைக் குறித்துக் கொள்வதற்காக அவள் உட்கார்ந்தபோது, ''முதலில் இதை எழுதி நீ எடுத்துக்கொள் கருணை! இது உன்னுடைய பிறந்த நாள் பரிசு'' — என்று சொல்லிவிட்டுக் கருத்து நயம் நிறைந்ததோர் கவிதையை அவர் பாடினார்:

காணக் கண்கோடி வேண்டும் — அந்தக்
கண்கள் அத்தனையும் — நீ
நாணிச் சிரிக்கின்ற நகைமுகத்தை — அதில்
ரகசியமாய் வரும் — உன்
வீணைக் குரல் தரு சொல்லிசையை
விழும் மலர் போல் — இதழ்
பேணித் திறந்து பூப்பூவாய் — நீ
பேசும் அதிசயத்தை — நான்
காணக் கண் கோடி வேண்டும்
கண்டு முடிந்ததுமே — பின்
ஊனச் சிற்றுலகில் வேறேதும்
இருந்து காணமல் — கண்ணில்
ஆன தரிசனத்தின் அழகு குறையாதே
அத்தனை விழியும் அற வேண்டும்

அவள் முழுமையாக எழுதி முடிக்கிறவரை நிதானமாகக் கவிதையைச் சொல்லிவிட்டு, ''பிறந்த நாள் வாழ்த்தாகவும் பரிசாகவும் இந்தக் கவிதையை ஏற்றுக்கொள்ளவேண்டும் தேவி!'' என்று நாடக பாணியில் சிரித்துக் கொண்டே அவர் வேண்டியபோது, அந்த விநாடியிலும் உலகைப் பார்க்க முடியாத அவருடைய கண்கள் தன்னைப் பரிபூர்ணமாக உற்றுப் பார்ப்பது போல் உணர்ந்து பாவித்துக் கொண்டு அதற்கு நாணிக் குழைந்து, ''தெய்வமே! உங்களுடைய சொற்களால் நான் மிக அதிகமாக அலங்கரிக்கப்பட்டு விட்டேன். மகா கவிகளின் சொற்களால் யார் புகழப்படுகிறார்களோ அவர்களுடைய வசீகரம் அந்த வாக்கினாலேயே பெருகி வளர்கிறது என்பார்கள். என்னுடைய வசீகரமும் உங்களுடைய ஆசீர்வாதங்களை ஏற்று வளருமாக'' என்று அவரே புகழ்ந்த அந்த வீணைக்குரலில் இனிதாக மறுமொழி கூறி அவரை வணங்கினாள் அவள். நாளாக நாளாக அவள் மேல் அதிகமான வாஞ்சையையும் அபிமானத்தையும் பொழிந்தார் அவர். பழைமையாகப் பழைமையாக அவள் அதே வேகத்தில் புதுமையாகிப் புது




மையாகி அவரைக் கவர்ந்து கொண்டிருந்தாள். நாட்களும் காலமும்தான் பழமையாயினவே ஒழிய அவள் மாறாத ஆறாத புதுமையாகிக்கொண்டிருந்தாள். அவள் வந்துசேர்ந்த சில ஆண்டுகளில் 'மணிமாலை' வார இதழின் விற்பனை படிப்படியாக ஐம்பதாயிரம் பிரதிகளிலிருந்து எழுபத்தையாயிரம் பிரதிகளுக்கு உயர்ந்து விட்டது. இதனாலெல்லாம் அவர் தாம் அவளுடைய கணவன் என்பதை மறந்து அவளைக் கிருக லட்சுமியாக வழிபட்டுக் கொண்டிருந்தார். காலையில் ஆறு மணிக்கு எழுந்திருந்து அவருக்குக் காப்பி கலந்து கொடுத்துத் தினப் பத்திரிகைகளைப் பொறுமையாகப் படித்துச் சொல்லித் தலையங்கத்துக்குக் குறிப்புக்கள் எடுத்துக்கொண்ட பின் 'மணிமாலை' புரூப்களைப் படித்து அவர் சொல்கிற திருத்தங்களைச் செய்துவைத்து விட்டுத் தபாலில் பத்திரிகைக்கு வருகிற கதைகளையும் படித்த பின் பதினொரு மணிக்கு அவளே டிரைவ் செய்து அவரைக் காரில் ஆபீஸுக்கு அழைத்துப் போவாள். ஆபீஸில் பத்திரிகைக்கு வருகிற பொதுவான கடிதங்கள் காத்திருக்கும். அவற்றைப் படித்துச் சொல்லிப் பதில்களைக் கேட்டுக் குறித்துக் கொள்ள வேண்டும். யாராவது பார்க்க வந்தால் அவர்களை அழைத்து வந்து அறிமுகப்படுத்திவிட்டு அவரும் அவர்களும் பேசும்போது உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். அவரோ பத்து நிமிஷத்துக்கொருதரமாவது 'கருணா!' என்று வாய் நிறையக் கூப்பிடாமல் இருக்க மாட்டார். காரியம் ஒன்றுமில்லாவிட்டாலும் அவள் அருகிலேயே இருக்க வேண்டும் அவருக்கு. 'காப்பி சாப்பிட்டாயா அம்மா?' என்று வாஞ்சையோடு ஒரு பிரியமான குழந்தையை விசாரிப்பது போல் அவளை அவர் திடீரென்று விசாரிப்பார். 'நேரம் தவறாமல் சாப்பிட்டுவிடு அம்மா! கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து வேளாவேளைக்கு 'நீ சாப்பிடப் போ; நேரமாகிவிட்டது' என்று உன்னை உபசரிக்கணும் போல எனக்கு ஆசையாக இருக்கிறது. ஆனால் நான் கடிகாரத்தையும் பார்க்க முடியாது. போன வெள்ளிக் கிழமை பேச்சுப் போக்கில் நானும் ஞாபகப்படுத்தாமல் வேலை வாங்கிக்கொண்டே இருந்து விட்டேன். நீயும் மறந்தது போல் எண்ணெய் நீராட்டத்தைத் தவற விட்டுவிட்டாய். இப்படி இரண்டு எண்ணெய் முறையைத் தவற விட்டு விட்டால் உன் கண்கள் என்ன ஆகும்? உடம்பு என்ன ஆகும்? இரண்டு பேருக்குமாகச் சேர்த்துப் பார்க்க வேண்டிய கண்களுக்குச் சிரமமும் வலியும் அதிகமாயிற்றே?'' என்று அவர் அவளைக் கடிந்து கொள்வார். இந்த அபரிமிதமான பிரியத்தினால்தான் அவள் தன்னை மறந்து வாழ்ந்து கொண்டிருந்தாள். எப்போதாவது இருந்தாற் போலிருக்க, ''நீ வீணை வாசித்து ரொம்ப நாளாயிற்றே? உன்னுடைய வாசிப்பைக் கேட்டால் என் கற்பனை வளர்ந்து புதிதாக ஏதேனும் நல்ல கருத்துக்கள் தோன்றத்தான் செய்யும். தயவு செய்து வாசிக்கிறாயா அம்மா?'' என்று எழுதுவதற்கு விஷயம் சொல்லிக் கொண்டிருந்தவர் நடுவில் நிறுத்திவிட்டு அவளை வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்டு உருகுவார். அப்படி அவர் உருகும்போது அவள் அவருக்கு மிகவும் பிடித்தமான பாட்டு என்ற காரணத்தால் 'தெலியலேது ராமா பக்தி மார்க்கமு' என்பதை மீட்டி வாசிப்பாள். அதன் உருக்கத்திலே மெய் மறந்து குழைந்து அவர் அழுவதும் உண்டு.

ஒரு நாள் இருந்தாற்போலிருந்து அவர் கூறினார்: ''பக்தி மார்க்கம் எதுவென்று எனக்குத் தெரியவில்லையே ராமா? என்ற பாட்டைத்தான் முதன் முதலாக என்னைத் தேடி வந்த அன்றும் நீ இங்கு வாசித்தாய். நடைமுறையில் பார்த்தால் உன்னைத் தவிர வேறு யாருக்குமே பக்தி மார்க்கம் என்னவென்று தெரியாதென்பது போல் அத்தனை அழகாகப் பக்தி செய்து வாழ்கிறாய் நீ! சில சமயங்களில் உன்னை என் மனைவியாக நினைத்துப் பார்க்கவும் மனம் கூசுகிறது அம்மா! தாயைப் போல் அன்பு செய்கிறாய் நீ. குழந்தையைப் போல் பேதையாய் இருக்கிறாய். மனைவியை விடப் பிரியமாய் இருக்கிறாய். அதனால் உன்னை எந்த உறவில் அடக்குவதென்று எனக்கே தயக்கமாயிருக்கிறது? உயர்ந்த சாதி மல்லிகைப் பூக்கள் உன் கூந்தலில் மணக்கவும், நிறைந்த வளைகள் உன் கைகளில் குலுங்கவும், நயமான சங்கீத நாடிகள் உன் ராகங்களில் துடிக்கவும் நீ மகாலட்சுமியாய் என்னைச் சூழ்ந்திருக்கிறவரையில்தான் நான் குருடன் என்பதை இந்த உலகில் என்னால் மறந்திருக்க முடியும் அம்மா!'' என்று உணர்வு மல்க அவர் புகழ்ந்து பேசி உருகும் போது, ''உங்களுடைய இந்தப் புகழையும் நல்லபிப்பிராயத்தையும் கடைசிவரை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்று பொறுப்பாகவும் பயமாகவும் இருக்கிறது கடவுளே'' என்பாள் அவள். !அவநம்பிக்கையும் ஆத்திரமும் அவருக்கு வருவதே இல்லை. ஏதோ செல்வக் குழந்தையை வளர்த்துப் பெருமைப் படுகிற மாதிரி என்னிடம் பிரியமாகப் பழகுகிறார்' என்று கருணாவும் அவரை நினைத்துப் பெருமிதப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் குமார கவி என்ற பெயருக்கோ, ஆசிரியர் 'மணிமாலை' என்ற பெயருக்கோ வருகின்ற நூற்றுக் கணக்கான கடிதங்களை அவளேதான் பிரித்துப் படித்துச் சொல்வது வழக்கம். அன்று காலையிலும் வழக்கமாக அவரை அழைத்துக் கொண்டு காரியாலயத்துக்குப் போன பின் கடிதங்களைப் பிரித்தவள் என்றுமில்லாத ஆச்சரியமாக 'கான்பிடென்ஷியல் – பெர்ஸனல்' என்று போட்டுத் தன் பெயருக்கே ஒரு கடித உறை வந்திருப்பதைப் பார்த்து அதிக வியப்படைந்தாள்.

''இன்று என் பெயருக்குக்கூட ஒரு கடிதம் வந்திருக்கே...? மழைதான் கொட்டப் போகிறது'' என்று அவரிடமே அந்த ஆச்சரியத்தைத் தெரிவித்து விட்டு மற்றக் கடிதங்களையெல்லாம் வழக்கம்போல் படித்துப் பதில் எழுதக் குறிப்பெடுத்துக் கொண்டு கடைசியாக அதைப் படிக்கலா



விதவிதமான
கிளியர்டோன்
குடும்பத்திற்கான
சாமான்கள்
Kleertone
இம்பீரியல் இஸ்திரிப்பெட்டி
இஸ்திரி மேஜை
கெட்டில்
ஒற்றை ஹாட் ப்ளேட்
டோஸ்டர்
மேஜை விசிறி மற்றும்
ஸீலிங் விசிறி
குக்கிங் ரேஞ்சு
வாட்டர் பாய்லர்
ஹாட் கப்ட் காபினெட்
JWT-GRA-2080
எல்லா அதிகாரம் பெற்ற கிளியர்டோன் வியாபாரிகளிடமும்,
நேஷனல்-எக்கோ வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . பாட்னா . செகந்திராபாத்
GRA

தலைவலியிலிருந்து

நல்ல, நிச்சயமான நிவாரணம்



அனாஸின் இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம் அது ஒரு டாக்டரின் குறிப்பைப்போன்று மருந்துகளின் சேர்க்கையாகும்—துரிதமாகவும் நிவாரணமளிக்கிறது.

- வலியிலிருந்து துரித நிவாரணம் அளிப்பதற்கான அனாஸினில் ஒரு பிரத்தியேகமான முறையில் பொருள்கள் சேர்க்கப் பட்டுள்ளன.
- அனாஸின் சாதாரணமாகத் தலைவலிக்குக் காரணமான நரம்புகளின் படபடப்பைப் போக்குகிறது.
- அனாஸின் ஜுரத்தைத் தணிக்க உதவுகிறது.
- அனாஸின் உபயோகிப்பதால் வலி மற்றும் ஜுரத்தினால் ஏற்படும் சோர்வு நீங்குகிறது.

Registered User: GEOFFREY MANNERS & CO. LTD

அனாஸின்

சிறந்தது எனெனில் அது
4 வழிகளில்
வேலை செய்கிறது

2 வில்லைகளுக்கு 13 ந. பைசேதான்

மென்று தனியே வைத்துவிட்டாள். வேலை எல்லாம் முடிந்ததும் ஓய்வாக அதை எடுத்துப் படித்தபோது அவளுக்கு உடம்பு பதறி நடுங்கியது. உச்சந்தலையில் யாரோ ஓங்கி அடிப்பது போல உணர்ந்தாள் அவள். 'நான் யாருக்கும் ஒரு துரோகமும் செய்யவில்லையே; எனக்கு இப்படி ஒரு பழியா?' என்று அவள் நெஞ்சம் குமுறியது.

''உனக்கு ஏதோ ஒரு கடிதாக வந்திருக்கிறதாகக் கூறினாயே, அது என்னவென்றுதான் படியேன் கேட்கலாம்'' என்று எங்கே அவர் கேட்டுவிடுவாரோ என்று அன்றைய தினம் ஒவ்வொரு கணமும் நடுங்கினாள் அவள். நல்லவேளையாக அவர் அன்றும் அதற்கப்புறமும் அதைப் பற்றிக் கேட்கவேயில்லை. ஆனாலும் வந்த கடிதமோ அவளை மிக மிக நிம்மதி இழந்து போகச் செய்து விட்டது. அந்தப் பாழாய்ப் போன கடிதத்தைப் படித்ததிலிருந்து அவளுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. செய்கிற காரியங்களில் எல்லாம் தடுமாறினாள்; அவர் ஒன்று சொன்னால் அவள் கை ஒன்றை எழுதியது. அல்லது ஒன்றுமே எழுதாமல் செயலற்றுத் தடுமாறியது. அவர் ஏதாவது கேட்டால் அவள் ஏதாவது பதில் சொன்னாள். அன்று மாலை வீட்டுக்குத் திரும்பும்போதும் வழக்கம் போல் பூக்கொண்டு வந்திருந்த பூக்காரியிடம் ''இன்று பூ வேண்டாம். இனிமேல் நாளையிலிருந்து நிரந்தரமாகவும் நிறுத்திவிடு'' என்று கருணா எரிந்து விழுந்தாள். வாழ்வில் முதன் முதலாகப் பொறுமை இழந்து ஆத்திரமாகப் பேசினாள் கருணா. உள்ளே அறைக்குள் போய் அவர் செய்து போட்டிருந்த வைரத்தோடு, மூக்குத்தி, கைவளைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கழற்றி வைத்தாள். பட்டுப் புடைவையை நீக்கிவிட்டுச் சாதாரணமான துணிப் புடைவை ஒன்றைக் கட்டிக் கொண்டாள். ஏதோ ஞாபகத்தில் அழுகை அழுகையாக வந்தது அவளுக்கு. இரவு படுத்துக் கொள்ளும்போது அவர் கேட்டார்:



''மத்தியானத்திலிருந்து ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய் அம்மா? அதிகம் சிரித்துப் பேசவில்லை. பேசினாலும் தடுமாறுகிறாய்? உடம்புக்கு ஏதாவது சரியில்லையா? பூக்கூட வைத்துக்கொள்ளவில்லை போலிருக்கு? டாக்டருக்கு ஃபோன் பண்ணி வரவழைக்கட்டுமா?''

''வேண்டாம்....''

''ஏன்? என்மேல் ஏதாவது கோபமா? நான் உன்னைக் கண் திறந்து பார்க்க முடியவில்லையானாலும் இன்று நீ சிறிதும் சந்தோஷமாயில்லை என்று என் மனக் கண் எனக்குப் பார்த்துச் சொல்லிவிட்டது...'' என்று பாசம் நிறைந்த குரலில் அவர் பேசி விசாரித்த போதிலே, — 'இவரை எதற்காக வேறுபடுத்தி நினைக்க வேண்டும் நான்? இவரிடமே அந்தக் கடிதத்தைப் படித்துக் காண்பித்து விட்டால் என்ன?' என்று ஒரு கணம் நினைத்து அடுத்த கணம், 'ஐயையோ! அப்படிச் செய்யவே கூடாது. இதனால் இவருடைய மனசும் விகாரமடைந்து என்மேல் சந்தேகப்படும். ஏற்கெனவே கண் பார்வை அற்றவர். குருடர்களுக்குச் சந்தேகம் அதிகமாக இருக்கும். என்னிடம் இவர் வைத்திருக்கும் அபரிமிதமான பிரியத்தை இந்த அற்பக் கடிதத்தைப் படித்துக் காண்பித்து அதன் மூலம் நான் இழக்கத்தான் வேண்டுமா? இந்தப் பிரியமும் இந்த நம்பிக்கையும் மாறி இவருக்கு என்மேல் சந்தேகம் வந்துவிட்டால் எனக்கு அது தாங்க முடியாத தண்டனையா யிருக்குமே! ஆகவே இதை மறைத்தாலும் நல்லதுதான்! ஒருவர் நிம்மதி இழந்து தவிப்பதற்குப் பதில் இருவரும் நிம்மதி இழந்து பரஸ்பரம் ஒருவரையொருவர் நம்பாமல் போகிற நிலை வந்துவிடுமோ என்று எண்ணி எண்ணி முடிவில் அந்த எண்ணம் அழுகையில் போய் நின்றது. 'புகழ் அதை அடைகிறவர்களின் தகுதியையும் பொறுப்பையும்—அவர்களை மறந்து கொண்டிருக்கிற வேளை பார்த்து அவர்களுக்கு நினைவூட்டுகிறது' என்று இவரே திராட்சைத் தோட்டத்தில் எழுதி யிருப்பதுபோல் என்னைப் புகழ்ந்து புகழ்ந்து மனத்தின் மிக உயரமான இடத்தில் தூக்கி வைத்துக் கொண்டாடி என் பொறுப்பை எனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார் இவர். இந்தக் கடிதத்தைப் படித்துச் சொல்வதனால் இவர் என்னைக் குறைவாக நினைக்க நேருமானால் அந்த நஷ்டத்தைத் தாங்கிக்கொள்வதை விடச் சாவது மேலான காரியமா யிருக்கும் எனக்கு' என்று நினைந்து நினைந்து உள்ளேயே புழுங்கினாள் அவள். அவருடைய அன்பு போய்விடுமோ என்ற சந்தேகத்தினாலேயே துன்ப நினைவுகளும், சோர்வும், பயமும் எல்லாம் அவளுள் தலைகாட்டி வாட்டலாயின.

மேலும் ஒரு வாரத்துக்குள் அதே பழைய கையெழுத்துடனே அதே மிரட்டலை மிரட்டி இன்னும் இரண்டு மூன்று கடிதங்கள் அவளுக்குக் கிடைத்து விட்டன. 'சிவிச் சிங்காரித்துப் பூமுடிப்பதும், பட்டும் நகையுமாக நீ பிறர் முன் மினுக்கித் திரிவதும் குருட்டுக் கணவனை ஏமாற்றிவிட்டு யாரிடமாவது திருட்டுக் காதல் புரிவதற்காகத்தானே?' என்று தொடங்கி இன்னும் ஏதேதோ பச்சை பச்சையாக அபாண்டப் பழிகளைச் சுமத்தி வசை பாடிவிட்டு, 'நீ திருந்தவில்லையானால் உன் குட்டுத் தானே நியாய நேசனில் வெளியாகி ஊரெல்லாம் அம்பலமாகும்' என்ற — மிரட்டலோடு முடிந்திருந்தன அந்தக் கடிதங்கள். ஒரு பாவமுமறியாத அவளை அக்கடிதங்கள் உள்ளும் புறமும் ஒடுக்கி அழச் செய்துவிட்டன. பதினைந்து நாட்களில் அவள் கையில் இந்தமாதிரி ஆபாசமாக மிரட்டும் கடிதங்கள் ஐந்தாறு சேர்ந்துவிட்டன. கண்கள் குழிந்து முகம் கறுத்து உள்ளும் புறமும் ஒடுங்கித் தளர்ந்துபோனாள் அவள். இப்படி அவள் தவித்து ஒடுங்கிக் கொண்டிருந்ததை அந்தக் கண்ணில்லாத மனிதர் காணாமலுமில்லை: ஆனால் அதை அடிக்கடி அவளிடம்

கேட்டுக் கோபித்துக் கொள்வதும் அநாகரிகம் என்பதுபோல் கருதியவராய், ''ஏனோ சில நாட்களாய் நீ ரொம்பவும் வாடியிருப்பதாய்த் தெரிகிறது'' என்று மட்டுமே அடிக்கடி குறிப்பாகச் சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

அன்று பௌர்ணமி. இரவு பன்னிரண்டு மணிவரை கடிதங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்துவிட்டு அப்புறமும் உறக்கம் வராத காரணத்தால் அவளை எழுதிக்கொள்ளச் சொல்லி ஒரு சிறு கதையையும் கூறிய பின் மூன்றுமணிக்குத்தான் படுக்கைக்குச் சென்றார் அவர். அவளும் உடன் சென்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். இருவருக்குமே உறக்கம் வரவில்லை. படுக்கையில் சும்மா புரண்டு கொண்டிருந்தார்கள். ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவும்இல்லை. படுத்த சிறிது நேரம் கழித்துத் திடீரென்று தாங்கமுடியாத துயரத்தால் மனம் வெடித்து அழுபவள் போல் படுக்கையிலேயே விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள் அவள்.



''ஏன் அழுகிறாய் அம்மா? ஒரு குருடனுக்கு வாழ்க்கைப்பட்டு நம் அழகும், இளமையும் வீணாகிவிட்டதே என்று சில நாட்களாக உனக்குள் ஒரு கலக்கம் வந்திருப்பதை நானே உணர்கிறேன். என்னால் உனக்கு ஒரு சந்தோஷமும் இல்லை. இந்தக் குருடனை உன் கணவனென்று காண்பித்து உலகில் நீ இன்னொரு பெண்ணுக்கு முன்னால் பெருமைப் படக்கூட முடியாது. அதனால்தான் நீ பூ வைத்துக் கொள்வதை நிறுத்திவிட்டாய். கைகளில் பண்ணிசைத்த வளைகளைக் கழற்றி விட்டாய். நேற்றிரவு நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது நான் தொட்டுப் பார்த்து உணர்ந்ததிலிருந்து நான் பிரியத்தோடு உனக்குச் செய்து அணிவித்திருந்த வைரத் தோடுகளையும் மூக்குத்திகளையும்கூட நீ கழற்றி எறிந்துவிட்டாய் என்று தெரிந்தது. அசௌகரியங்களும் கஷ்டங்களும் நிறைந்த ஒரு புகழ்பெற்ற பணக்காரக் குருடனோடு வாழ்வதில் என்ன சுகம் இருக்க முடியும்? பணமும் புகழும் பார்வை ஆகமாட்டா. ஆனால் சுகமில்லாத இந்த வாழ்க்கையையும் சுகமுடையதாகச் செய்து கொண்டு உன்னுடைய பார்வையால் என் அபிப்பிராயங்கள் உருவாகும்படி நீ இவ்வளவு காலம் என்னோடு வாழ்ந்த வாழ்க்கையை உணர்ந்து நீ ஒரு தேவதையாக என் மனக் கண்ணுக்குத் தோன்றினாய்! ஏனென்றால் மானிடப் பெண்ணுக்கு இத்தனை பொறுமையும் நிதானமும் வரமுடியாதென்று எண்ணி உன்னைத் தேவதையாக நினைத்து வரித்திருந்தேன் நான்...'' என்று அவர் கூறியதும் அவள் அழுகை மேலும் அதிகமாகிக் குமுறியது. தன்னுடைய மௌனமும் மாறுதலும் 'அவரை எப்படி எப்படியோ தவறாக எண்ணச் செய்து விட்டனவே' என்றறிந்தபோது அவள்—அழுகை இன்னும் அதிகமாகியது. அவள் அவர் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டுப் பேசலானாள்.

''தெய்வமே! நான் சொல்வதை இப்போது நிதானமாகக் கேளுங்கள். என் கவலையும் வேதனையும் உங்களால் நான் அடைந்ததில்லை. உங்களை நான் ஒரு விநாடிகூடக் குறைவாக நினைத்தறிய மாட்டேன். உங்களுக்குக் கண்ணில்லையே என்பது என்னை ஒருபோதும் வருத்தச் செய்ததில்லை. கண்ணிருக்கிறவர்களை எல்லாம் விட நீங்கள் பெரியவர். உங்களுடைய மனத்துக்கே கண்ணின் ஆற்றல் உண்டு. கண்ணிருக்கிறவர்கள் அழகாயிருக்கிற பெண்ணின்மேல் சந்தேகப் படுகிறார்கள். நீங்கள் யார் மேலும் சந்தேகமே படுவதில்லை. என்னை நம்புகிறீர்கள். உங்களுக்காகவும் சேர்த்து உலகைக் காண நம்பிக்கையாகஎன் கண்களை நியமித்திருக்கிறீர்கள் நீங்கள். ஆகவே உங்களிடமிருந்து எதையும் நான் மறைக்கக் கூடாது. இப்போது நான் கூறப்போகிற இந்த விஷயத்தைப் பொறுத்தவரை பார்வை என்னுடையது. அபிப்பிராயம் இனி உங்களிடமிருந்துதான் பிறக்க வேண்டும். உங்கள் மனத்தில் என்மேல் உருவாயிருக்கும் எல்லையற்ற அபிமானம் குன்றிப்போகுமோ என்று பயந்து போய் இந்தப் பதினைந்து நாட்களாய் இதை நான் உங்களிடம் மறைத்தேன். இப்போது இனியும் அப்படி மறைக்கும் உத்தேசமில்லை. நான் உங்களைப் பரிபூர்ணமாக நம்புகிறேன்'' என்று சொல்லி எழுந்து போய் மேஜை டிராயரில் மறைவாக வைத்திருந்த அந்த மிரட்டல் கடிதங்கள் எல்லாவற்றையும் எடுத்து வந்து அவற்றில் எழுதியிருந்தவற்றை ஓர் அட்சரம் கூட மறைக்காமல் பச்சை பச்சையாக அப்படியே அவருக்குப் படித்துச் சொல்லத் தொடங்கினாள் அவள். அபவாதம் தன்னைப் பற்றியது என்ற கூச்சமோ, சலனமோ தயக்கமோ சிறிதும் இல்லாமல் கடமையைச் செய்கிற ஒரு கர்ம வீரனின் பலத்தோடு அவருக்கு அப்படி அப்படியே அவற்றைப் படித்துக் காட்டினாள் அவள். படித்து முடித்துவிட்டுக் குமுறிக் குமுறி மறுபடியும் அழத் தொடங்கினாள் அவள். சில விநாடிகள் இருவரும் ஒருவரை ஒருவர் மனக் கண்ணால் பரிசோதித்துக்கொண்டார்கள். சிறிது நேர மௌனத்துக்குப் பின் மீண்டும் அவளே அவரிடம் முதலில் பேசினாள். ''தெய்வமே! பார்வை என்னுடையது. அபிப்பிராயம் உங்களுடையது. உங்களுக்காகவும் சேர்த்து உலகைப் பார்க்க என் கண்களை நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். என் கண்கள் உங்களுக்குத் தெரியாமல் எதையும் மறைக்காது. இதை இத்தனை நாள் மறைத்ததற்காக என்னை மன்னிக்க வேண்டும்.''

''சுகுணா! இதை நினைத்துப் பயந்து நீ இவ்வளவு நாள் இப்படி ஒடுங்கிப் போயிருக்க வேண்டியதில்லை. உன்னுடைய மனோ பலம்

இதை நீ வாய் கூசாமல் எனக்குப் படித்துக் காண்பித்திருந்தது தெரியவில்லையா? உன் அழகை எப்போதேனும் காண்பதற்காக வாவது ஒரு விநாடி எனக்குக் கண் பார்வை வரவேண்டும் என்று முன்பு பல முறை நான் நினைத்தேன். இப்போது எனக்கு அந்த ஆசை போயே போய்விட்டது. ஒருவேளை நீ அழகாய் இருப்பதைப் பார்த்தால் என் கண்களிலும் சந்தேகம் தோன்றலாம். உன் மனம் அழகா யிருப்பதை நான் நிரந்தரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்தப் பார்வை ஒன்றுமட்டுமே போதுமென்று இப்போது திருப்திப்படுகிறேன் நான். அசடே! இதற் காக இப்படி அழலாமா? மாமிசக் கண் களால் மட்டுமே பார்க்கத் தெரிந்த யாரோ ஒரு சாதாரண மனிதன் ஏதோ கிறுக்கி யிருக்கிறான். இந்தப் பார்வைக்கு என்னிடம் அபிப்பிராயமே கிடையாது. உன் அழகை நான் பார்க்கிற பார்வை வேறு. அதை நான் மனக் கண்ணால் பார்க்கிறேன் அம்மா! அதனால் அதைப் பற்றிய அபிப்பிராயம் என்றும் மிக மிக உயர்ந்ததாகவே இருக்கும். உன்னை நான் பார்ப்பதற்கும் புரிந்துகொள் வதற்கும் இந்த அயோக்கியனின் கண்கள் எனக்குத் தேவையில்லை. உன்னை மட்டும் பார்ப்பதற்கென்று வேறு விஷயங்களைப் பார்த்துக் களைப்படுத்திக் கொள்ளாத-தனிக் கண் ஒன்றை நான் பெற்றிருக்கிறேன் அம்மா! இந்த விநாடியிலிருந்து மறுபடி பூவும், வளையுமாக நீ என் கிருகலட்சுமி யாக வந்து நில். நீ பார்வை! நான் அபிப் பிராயம்! நமக்குள் இரண்டும் எப்போதும் வேறுபடுவதில்லை. எனக்காக உலகைக் காண நான் நம்பிக்கையாக உன் கண்களை நிய மித்திருக்கிறேன். அதே சமயத்தில் உன்னைக் காண மட்டும் என்னிடம் தனியாகவே ஒரு கண் இருக்கிறது'' என்று வாஞ்சையோடு கூறிவிட்டு ஒரு செல்லக் குழந்தையைப் பாசத்தோடு தழுவுவது போல் ஆதரவாக அருகில் நெருங்கி அவளை அணைத்துக் கொண்டார் அவர்.


''விடிந்து விட்டது'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள் அவள். ''உனக்கும் எனக்கும் என்று சொல்! பதினைந்து நாட் களுக்குப் பிறகு மறுபடி விடிந்திருக்கிறது அம்மா! இத்தனை வருஷங்களாக உன்னை மறந்து எனக்காக என் கண்களால் உலகத் தைப் பார்த்தவரை நீ தியாகியாயிருந் தாய். இந்தக் கடிதங்கள் உன்னை மிரட் டிய காலத்தில் நீ என்னை மறந்து உனக் காக மட்டுமே உலகைப் பார்க்கத் தொடங் கினாய். அதனால் அந்தச் சுயநலத்தில் வாடி னாய். தன்னை மறந்த பரவசத்தில்தான் அம்மா தியாகம் பிறக்கிறது! நீ தேவதை! நான் உன்னைக் குறை சொல்ல மாட்டேன். பூதம் காட்டுகிற கண்ணாடியைப் போல் பார்வையும் அபிப்பிராயமும் முரண்படு கிற நிலைமையும் உலகில் உண்டு. நல்ல கண்ணாடியில் பார்க்காதது நம் குறை. இது மாதிரிக் கடிதம் ஏதாவது இனி வந் தால் என்னிடம் சொல்லாமலே கிழித்தெறி. அபிப்பிராயத்தை உருவாக்க அவசியமில்லாத வெறும் பார்வை அளவில் நின்றுவிடவேண் டிய சிறிய விஷயங்கள் எத்தனையோ உலகில் உண்டு. அவற்றைப் பற்றியும் அபிப்பிராயம் கொள்ள ஆரம்பித்தால் அப்புறம் வீண் கவலைதான் நம்மை வாட்டும். மிக மிகக் கஷ்டமானவற்றையும் பார். வேண்டா மென்று சொல்லவில்லை. ஆனால் பார்வை மட்டும்தான் உனக்குச் சொந்தம். அபிப் பிராயமும் கவலையும் படுவதற்கு நான் இருக்கிறேன். தாமதமின்றி உன் பார்வை களை என்னிடம் சமர்ப்பித்துவிடு. அந்தக் கடிதங்களைப் பார்த்து நீயே அபிப்பிராயத் தையும் படைத்துக் கொண்டு உனக்குள் உருகிச் சீரழிந்தது போல் இனி ஒரு கணமும் செய்யாதே! ஞாபகம் வைத்துக்கொள்! எனக்காக உலகைப் பார்க்க மட்டும்தான் நம்பிக்கை வாய்ந்த உன் கண்களை நான் நியமித்திருக்கிறேன்...'' என்று அவர் கூறிய வேளையில் தன்னைக் காண முடியாத அந்தக் கண்கள் தன்னை மட்டுமே காண முடிந்த ஒரு மானசீகக் கண்ணால் உற்று நோக்கிக் காண்பதாகத் தனக்குத்தானே பாவித்துக் கொண்டு இப்போதும் நாணினாள் கருணா.

நம்பிக்கைக்குப் பாத்திரமான 'டெட்டால்'



கோடைக் கட்டிகளைத் தடுக்க உதவும்

வியர்வையே மென்மையான சருமத்தின் பரம விரோதி. அது வியர்வைக்குருவை உண்டாக்கி, அரிப்பையும் எரிச்சலையும் கொடுக்கும். சொறிவதன் மூலம் நன்மை இல்லை, தீமையே விளையும். ஆதலால், உலகிலேயே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருமிநாசினி 'டெட்டால்' கலந்த நீர் கொண்டு அதனைக் கழுவி, அரிப்பையும் எரிச்சலையும் தணியுங்கள். நீங்கள் குளிக்கும் நீரில் 'டெட்டால்' கலந்திருந்தால் வியர்வைக்குருவை ஆற்றுவதுடன் அது பரவுவதையோ அல்லது கோடைக் கட்டிகளாக மாறுவதையோ தடுக்க உதவும். உங்கள் சருமத்தில் வியர்வைக்குரு கண்டிருந்தால் அதனைக் குணப்படுத்தத் தவறாத கிருமிநாசினி 'டெட்டாலே'.



'டெட்டாலை' குளிக்கும் நீருடன் கலந்து உபயோகித்தால் நறுமணத்துடன் உற்சாகத்தையும் கொடுக்கும். தொண்டைப் புண்களைத் தடுப்பதற்கு 'டெட்டால்' கலந்த நீர் கொப்பளிக்க உதவும். தரைகளைக் கழுவும் போதோ அல்லது துடைக்கையிலோ நீரில் 'டெட்டாலை' கலந்து உபயோகியுங்கள்.

அட்லாண்டிக் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)



தெருவில் ஒரு பெரியவர் செல்கிறார். அவருக்குச் சற்றுப் பின்னால் ஓர் இளைஞன் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருக்கிறான்:

''ஏய், அவள் பெயர் என்னவோ சொல்வாயே, ஆத்தாவா?....''

''எனக்கு ஒரு பெண்ணையும் தெரியாது, அப்பா?''

''ஆத்தா...! குட்டி என்று சொல்வாயே, சாப்பிடும்போது கூட இடது கையில் வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருப்பாயே.''

''அதுவா? அகாதா கிறிஸ்டி புத்தகத்தைச் சொல்கிறீர்களா?''

''ஆமாம்! அதையெல்லாம் படித்துக் கொண்டிருந்தால் என்னமாடா பரீட்சையில் நிறைய மார்க்கு வாங்க முடியும்? உனக்கு மார்க்கு குறைச்சல் அதனாலே காலேஜில் இடமில்லே என்று அந்தப் பால் என்கிறவர் சொன்னாரே?''

''பிரின்ஸிபாலைச் சொல்கிறீர்களா? சப்தரிஷி நிறைய மார்க்குகள் வாங்கியிருக்கிறான். அவன் பெயரைக் கேட்டதுமே அவனுக்கும் இடமில்லே என்று சொல்லி விட்டாரே!'' என்றான் பையன்.

கல்லூரிகளில் இடம் அகப்படாததற்காக மாணவர்களும், மாணவிகளும், அவர்களுடைய பெற்றோர்களும் இட்டுவரும் நவீன சாபங்கள் பலிப்பதாயிருந்தால் பல பிரின்ஸிபால்கள் மீதும், சர்வகலாசாலை அதிகாரிகள் மீதும் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்திருக்கும்; அவர்கள் மோட்டார் வண்டிகளை அரசாங்க பஸ்களே தாக்கியிருக்கும்.

இடம் கொடுக்கும் விஷயத்தில் புகார்கள் ஏற்படாமல் இருப்பதற்காக இரண்டொரு யோசனைகள் கூற விரும்புகிறேன்.

மனுச் செய்துகொண்டிருக்கும் பெயர்களைச் சீட்டுகள் எழுதிப் போட்டுப் பொறுக்கி எடுத்து ஆசனங்கள் அளிக்கலாம். நாம் தலைவிதியில் நம்பிக்கையுள்ளவர்களாதலால் இதன் முடிவைப் பற்றிக் குறை கூற மாட்டோம். குறை கூற வாய் ஏது?

ஆசனங்களைப் பகிரங்கமாக ஏலம் விட்டு மிக உயர்ந்த தொகைக்கு ஏலம் கேட்கும் மாணவர்களுக்கு அவற்றை அளிக்கலாம். இதன் பயனாக நிறையப் பணம் கிடைக்கும். இந்தத் தொகையை வைத்துக் கொண்டு டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் திருப்திப்படும்படி கல்லூரிகளில் வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு அதிகப்படியான ஆசனங்கள் அளிக்க அனுமதி பெறலாம்.

* * *

1937ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது நேருஜியும், லால்பகதூர் சாஸ்திரியும், உத்தரப் பிரதேச கிராமங்களில் காங்கிரஸுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்து வந்தார்கள். ஒரு கிராமத்தில் கூட்டத்தினர் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடந்துகொள்ளாததால் நேருஜி கடும் கோபமுற்று அவர்கள் தலை மீதேறியே நடந்து சென்று அவர்களை அமைதியுடனிருக்கச் செய்தார். இரவு பதினொரு மணிக்குப் பிரசங்கத்தை முடித்துக் கொண்டு கிளம்பியபோது இருவருக்கும் ஒரே பசி, தாகம். ஆனால் கிராமத்தினர் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. காரணம், சிற்றுண்டி, தேநீர்ப் பானம் முதலியவற்றைத் தயாராய் வைத்துக் கொண்டிருந்த தொண்டர்கள், நேருஜி தமது கோபத்தில் தலையிலேயே கொட்டினாலும் என்ன செய்வதென்று பயந்து கொண்டு தலைமறைவாயிருந்து விட்டார்கள்.

நண்பர்கள் இருவரும் ஊருக்கு வெளியே உள்ள ஒரு ஹோட்டலில் ரொட்டி தின்று டீ குடித்தார்கள். அதற்கான பணத்தைக் கொடுப்பதற்காகக் காலஞ்சென்ற பிரதமர் தமது பைகளை ஆராய்ந்தார். அவர் கையில் கொஞ்சம் சில்லறை கிடைத்தது. அது போதாது. தற்போதைய பிரதமர் தமது சட்டைப் பைகளைச் சோதனை செய்து சில அணாக்களை எடுத்துக் கொடுத்தார். மொத்தத்தில் ஹோட்டல்காரருக்குக் கொடுத்தாக

வேண்டிய தொகை இருந்தது. இந்தச் சம்பவத்தை லால் பஹாதூர் சாஸ்திரி ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆமாம்! அவர்களிடம் போதிய சில்லறை இல்லாமலிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஹோட்டல்காரர் அவர்களைச் சும்மா விட்டிருப்பாரா?

ஃ ஃ ஃ

சார்லி சாப்ளினது ஆரம்ப காலப் படங்களில் அவர் அடிக்கடி ஹோட்டல்களில் சாப்பிட்டுவிட்டு, தம்பிடிகூடக் கொடுக்க முடியாமல் திண்டாடும் காட்சிகள் வரும். பழைய சிறிய அமெரிக்க ஹோட்டல்களில் ஒரு வழக்கம் உண்டு. யாராவது தின்றுவிட்டுப் பணம் கொடுக்காவிட்டால் அதற்குப் பதிலாக அங்கே வேலை செய்தாக வேண்டும். சாப்ளின் வேலை செய்வார். ஒரு தட்டு நிறையக் கண்ணாடி டம்ளர்களை எடுத்துக் கொண்டு போய்க் கீழே போட்டு உடைத்து விடுவார். பிறகு அந்த டம்ளர்களின் கிரயத்தைக் கொடுப்பதற்காகத் தொடர்ந்து வேலை செய்யும்படி நேரும்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் மக்நமாரா என்ற ஓர் அமெரிக்க வாலிப வியாபாரி, ஒரு நண்பருடன் ஒரு ஹோட்டலில் தங்கிச் சாப்பிட்டார். பணம் கொடுப்பதற்காகப் பணப் பையை எடுத்துப் பார்த்த போது போதிய பணமில்லை. ஹோட்டல் மானேஜர் பணத்தைக் கீழே வைத்துவிட்டுத் தான் போக வேண்டுமென்று கண்டித்துக் கூறிவிட்டார். அந்த வியாபாரி தன் மனைவிக்கு டெலிபோன் செய்து பணம் தருவிக்கும்படியாயிற்று.

மறுநாள் அவர் தமது நண்பரான ஒரு வக்கீலுடன் இந்தச் சம்பவம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது 'டைனர்ஸ் கிளப்' என்று ஒன்று ஆரம்பிப்பதென்று தீர்மானித்து அப்படியே ஆரம்பித்து விட்டனர்.

இந்தக் கிளப் இப்போது பெரிய ஸ்தாபனமாகிவிட்டிருக்கிறது. உலகத்திலுள்ள குறிப்பிட்ட சில பெரிய ஹோட்டல்கள், துணிக் கடைகள், சாமான் கடைகள், மோட்டார் கம்பெனிகள், நகைக் கடைகள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. கிளப்பின் அங்கத்தினராகும் யாரும் தாம் அங்கத்தினர் என்று காட்டும் கார்டைக் காண்பித்துவிட்டு எங்கே வேண்டுமானாலும் பிரயாணம் செய்யலாம். எந்தச் சாமான் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். கையில் ஒரு தம்பிடி எடுத்துக் கொண்டு போக வேண்டியதில்லை. ஆனால் மாதம் முடிந்ததும் சங்கம் சேகரித்து அனுப்பும் 'பில்'களுக்கு உடனே பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். இந்தச் சங்கத்துக்குச் சுமார் 110 தேசங்களில் இருபது லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்தியாவிலும் இத்தகைய சங்கம் ஒன்று நடைபெற்று வருகிறது. இதில் ஒரு சிறிய சிரமம் இருக்கிறது. குறைந்த அளவு ஒரு லட்சாதிபதியாயிருந்தால்தான் நமக்குக் கட்டுப்படியாகும்!

இந்தக் கிளப்பில் அங்கத்தினராவதை அடிப்படையாகக் கொண்டு பிடிக்கப்பட்ட 'டைனர்ஸ் கிளப்பைச் சேர்ந்த மனிதன்' என்ற படம் இப்போது சென்னை ஒடியன் தியேட்டரில் ஓடிக் கொண்டிருக்கிறது. புகழ் பெற்ற நகைச்சுவை நடிகரான டானி கே. இதன் கதாநாயகன். அவர் டைனர்ஸ் கிளப்பில் வேலை பார்க்கிறார். புதிதாக அங்கத்தினராக விரும்புபவர்களது மனுக்களைக் கவனித்துச் சிபாரிசு செய்ய வேண்டிய பொறுப்பு அவருடையது. காரியாலயத்திலுள்ள அவரது காதலி ஒரு காகிதத் துண்டில் ஏதோ எழுதி அனுப்புகிறாள். அதில் அவர் 'ஓ.கே.' என்று எழுதும்போது அந்த எழுத்துக்கள் அடியிலுள்ள ஒரு மனு நமூனாவிலும் விழுந்து விடுகிறது.

அந்த மனு ஒரு பெரிய மோசக்காரனது: அவன் அங்கத்தினராகிக் கிளப்பின் அடையாளச்சீட்டான கார்டைப் பெற்றுக் கொண்டு விட்டால் பல வியாபார ஸ்தாபனங்கள் பலத்த நஷ்டமடைய நேரிடும். கதாநாயகன் அந்தக் கார்டைத் திரும்பப் பெறப் பல விதத்தில் முயலுகிறான். ஒவ்வொரு வித முயற்சியும் ஒரு வேடிக்கையான கட்டமாக அமைந்திருக்கிறது. கடைசியில் மோசக்காரன் தான் கிளப் அங்கத்தினன் என்ற முறையில் பதினாறு மோட்டார் வண்டிகளைப் பைசாகூடக் கொடுக்காமல் வாங்கிவிடும் போது சிக்கல் முற்றுகிறது. முடிவில் கதாநாயகன் மோசக்காரனிடமிருந்து அங்கத்தினர் கார்டைப் பெற்றுத் தன் காதலியையும் விவாகம் செய்து கொள்ளுகிறான். காதலியின் பாகத்தை மார்த்தா ஹையர் ஏற்றிருக்கிறார். மிகவும் சிறிய படம். சிரிப்பூட்டும் 'சுத்தமான' படம்.

டானி கேயின் நகைச்சுவை நடிப்பு தனிப்பட்ட வகையைச் சேர்ந்தது. அவரைப் பற்றிய மற்றும் பல விஷயங்களும் அப்படியே.

அவர் முதன் முதல் படாதிபதி ஸாம் கோல்டுவினைச் சந்தித்தபோது அவருக்கு டானி கேயைப் பிடித்து விட்டது. ஆனால் அவரது மூக்கைப் பிடிக்கவில்லை. அது நீளமாகவும் வளைவாகவும் இருந்தது. அது போட்டோப் படங்களில் விகாரமாயிருந்தது. அறுத்து ஒட்டவைத்து ஏதாவது செய்யலாமா என்று பார்த்தார்கள். கோல்டுவின் ஒரு நாள் ''கண்டு பிடித்து விட்டேன், கண்டுபிடித்து விட்டேன்'' என்று கூறிக் கொண்டு வந்தார். டானிகேயின் தலைமயிரை இலேசான பொன்னிறமாக்கச் சொன்னார். வளைந்த நீள மூக்குக்கும் தங்க நிறத் தலைமயிருக்கும் அப்படி ஓர் அழகுப் பொருத்தம் இருக்கிறது போலும்!

டானி கே சில படங்களில் பாடுவதுமுண்டு: 'நான்சென்ஸ்' வகையைச் சேர்ந்த அந்தப் பாட்டுக்களை 'கம்போஸ்' செய்வது அவர் மனைவி ஸில்வியாவே.

அவர் வெறும் சினிமா நடிகர் மட்டுமல்ல: ஐ. நா. சார்பாக அவர் பிற்போக்கான குழந்தைகளுக்காக நிதி திரட்டுவதற்காகவும் அவர்களை நேரில் பார்த்துச் சிரிக்க வைப்பதற்காகவும் இருபத்தெட்டு தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். **என். ஆர்.**



சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனே சிக்கனமானது! எத்தனே புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் டின்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டுடன் சிறிய தரம் கிடைக்கிறது.
எத்தனே நறுமண முடையது! எத்தனே நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்- வெளியே செல்லுமுன்- தாராளமாக உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனே சௌக்கியமானது! எத்தனே மிருதுவானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All-Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
மதராஸ்-17

''நேரம் காலம் தெரியாமல்...... தொல்லைக்கு மேல் தொல்லை. நல்ல டாக்டர் வேலை....'' என்ற சிடுசிடுப்புடன் கதவைத் திறந்து வெளியே வந்த அந்தப் பெண், ''டாக்டர் சாப்பிடுகிறார்'' என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதன் அவசியம் இருக்கவில்லை.

மேனுதட்டில் முத்து முத்தாகக் கோத்து நின்ற வியர்வையும், இடுப்பில் செருகிய சேலையும், உடையில் தெளித்திருந்த மிளகு ரசத்தின் வாசனையும் அவளை யும் முந்திக் கொண்டு உண்மையை விளக்கி விட்டன.

''அம்மா!'' என்று அந்த நோஞ்சல் உடம்புக் கிழவன் தீனமாக அழைக்க....

''சும்மா கெடடா சோமாறி!'' என்று கான்ஸ்டபிள் அதட்ட....


''யாரது? கண்ணுசாமியா?'' உற்றுப் பார்த்த அந்தப் பெண் முகம் சுளித்தாள்.

அந்தக் கிழவன் கண்ணுசாமியை அவளுக்குத் தெரியும். அவளுக்கும், டாக்டருக்கும் ஒரே செல்லப் பெண்ணான 'பேபி'யைத் தினமும் பள்ளிக்கு அழைத் துச் செல்லும் ரிக்ஷாக்காரன் அவன் அவனா இப்படி?

கிழவனிடமிருந்து வந்த அந்தச் சாராய நெடி வயிற்றைப் புரட்ட, அருவருப்பால் உதடு கோண, ''சரி... சரி.... கான்ஸ்டபிள்! அப்படியே உட்கார்ந்திரு! டாக்டர் வருவார்'' என்று மீண்டும் அருவருப்புடன் கிழவனைப் பார்த்து விட்டு, ஆத்திரத் துடன் கதவைச் சாத்தி விட்டு உள்ளே போனாள்.

''உட்காருடா அப்படி!'' என்று கான்ஸ்டபிள் கைத் தடியால் கிழவனை நெட்டித் தள்ள, தோட்டத்து மண் ணில் விழுந்த அவன் மெல்லத் தள்ளாடி எழுந்து முழங்காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்தான்.

போலீஸ்காரர் படிக்கட்டில் வாட்ட மாக அமர்ந்து, சாவகாசமாக ஒரு பீடியைக் கொளுத்தினார். அவர் உள் ளத்தில் இழைந்துக் கொண்டிருந்த நிம்மதி, திருப்தியுடன் கூடிய ஒரு நீண்ட பெருமூச்சாக வெளியேறியது. முன்னிரவு நிலவு வானத்தில் ஒரு கோலமிட்டுக் கொண் டிருந்தது.





அதன் கவர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டது போல் சுற்றிலும் நட்சத்திரங்கள் சிணுங்கிக் கொண்டிருந்தன.

''டாக்டர் வருவார். சர்டிபிகேட் கொடுப்பார்.'' அவர் மனம் ஆனந்தமாகக் கணக்குப் போட்டது. ''அந்தச் சிடுமூஞ்சி இன்ஸ்பெக்டர் முன்னாலே கொண்டு போய் நிறுத்த வேணும். எவ்வளவு மிரட்டினார். இரண்டு வாரங்களாக கேஸே பிடிக்கவில்லை என்று. இப்போது என்ன சொல்லுகிறீர் என்று கேட்பது போல் பார்க்க வேண்டும்; முறைக்க வேண்டும்.''

அதுதானே! ஊரில் உலகத்தில் குற்றம் குறைகளும், திருட்டுப் புரட்டுகளும் நடக்கவில்லை என்றால் சந்தோஷப் படுவார்கள். அதை விட்டு.... விட்டு..... பிடிக்கிறாயா கேஸை, அல்லது வீட்டுக்கு அனுப்பவா என்றால் அது என்ன நியாயமோ !

சுத்தமான மனசில்லாத மனிதர் !

அவரது இரண்டாவது இழுப்புக்குப் பிடி கணிசமான அளவுக்குத் தீய்ந்து கருகியது.

விம்மல் !

நிமிர்ந்து பார்த்தார். அந்தக் கிழவன்தான் கால் முட்டிகளிடையே முகம் புதைத்து விம்மினான்.

''ஏய், கிழவா! ஏண்டா பொம்பிளை மாதிரி அழுறே?'' என்று அதட்டினார் கான்ஸ்டபிள். ஆனால் அவன் விம்மல் அதிகமாயிற்றே தவிர அடங்கவில்லை.

அவன் தோள்கள் குலுங்கிக் குலுங்கி அடங்கின.

''ஏய்! உதைபடா அவலே! வாயை மூடப் போகிறாயா இல்லையா?'' என்று அதட்டியவர் ஏகத்தாளமாகச் சிரித்தார். ''குடிக்கிறச்சே எங்கேபோச்சு இந்தப் புத்தி?''

''ஸாமி!'' அவன் மெல்ல நிமிர்ந்தான். ''நான் குடிக்கல்லீங்க! சத்தியமாச் சொல்றேன். நான் குடிக்கலே.....''

''தெரியும்டா சோமாறி!'' அலட்சியமாகக் கூறினார் கான்ஸ்டபிள். ''நானும் பன்னிரண்டு வருஷமா போலீஸ் வேலை பார்க்கிறேன். இத்தனை வருஷ சர்வீஸ்லே

பிழைப்புக்காக...

ராஜேந்திரகுமார்

ஒருத்தனாவது தான் குடிச்சிருக்கிறதாக ஒப்புக் கொள்வாறா? ஹாம்!'' அவன் உதடுகள் மீண்டும் பீடியை உறிஞ்சின. ''ஏய், கிழவா! இதுக்கு முந்தி உன்னைப் போலீஸ் ஸ்டேஷனிலேயே பார்த்ததில்லையே! நீ என்ன இந்தப் பேட்டைக்குப் புதுசா?''

''இல்லே ஸாமி. இருவத்தேழு வருஷமா இதே பேட்டையிலேதான் இருக்கேன்!''

'' அப்படியா!'' என்று அதிசயப்பட்டார் கான்ஸ்டபிள். ''ஆச்சரியமாயிருக்கே! அப்படின்னு இத்தனை நாளும் போலீஸை நல்லா ஏமாத்திக்கிட்டு வரேன்னு சொல்லு.''

''அப்படிச் சொல்லாதீங்க ஸாமி.'' கை எடுத்துக் கும்பிட்டான் கிழவன். ''நான் எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகிறவனில்லீங்க.''

''ஹாம்!'' என்றார் கான்ஸ்டபிள். அவர் மனத்தில் ஏதோ சலிப்பு.

'' ....உண்மைதானுங்க. எனக்கும் போலீஸுக்கும் எந்த சம்பந்தமும் மிருந்ததில்லீங்க. நினைப்பு தெரிஞ்ச நாளிலே யிருந்து... கிராமத்திலே காடும் கழனியுமா கௌரவமாகத்தான் வாழ்ந்துக்கிட்டிருந்தேனுங்க எங்க குடும்பம் நல்ல குடும்பமுங்க. மாடும் கன்னும், வீடும் வாசலுமா ராசா மாதிரி ஆண்ட குடும்பமுங்க. ஆனா.... சேர்ந்தாப் போல நாலு வருஷமா வானம் திறக்காம போயிடுச்சுங்க. வெள்ளாமையிலே மண்ணு விழுந்திடுச்சு. பிழைப்புக்காக வந்த விலைக்குக் காட்டை வித்துட்டுப் பட்டணத்துக்கு வந்துட்டேனுங்க. நேரே இந்த ரோட்டுக்கா போய்ச் சோத்துக் கைப்பக்கம் திரும்பினா இருக்கு பாருங்க தினகரன் வீவிங் மில்லு. அங்கேதானுங்க பீட்டரா சேர்ந்தேன். வாயிக்கும், வயத்துக்கும் பஞ்சமில்லாம இருந்ததுங்க... கல்யாணம் பண்ணிக்கிட்டுப் பிள்ளை குட்டிங்களைப் பெத்து வாழ்ந்தேனுங்க. பட்ட காலிலேயே படுங்கிற மாதிரி.... கல்யாணமான என் ஒரே மகன் பஸ் ஏறிச் செத்துப் போயிட்டானுங்க. நானும் படுக்கையிலே விழுந்து வேலையும் போயிடுச்சு....''

''நிறுத்துடா. உன் புராணத்தை'' என்று கான்ஸ்டபிள் சீறினார். போலீஸுக்கே இருக்கக் கூடாத சற்றே இளகிய மனம்



அவருக்கு உண்டு. எங்கே மனம் நழுவிப் போய் விடுவோமோ என்ற பயம்.

''ஐயா!'' கிழவன் தயங்கினான். ''ஒண்ணு கேட்லாமுங்களா?''

''என்ன?'' என்றார் அவர் சலிப்புடன்.

''எதுக்குங்க என்னே டாக்டரய்யா வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கீங்க? என்னே என்ன செய்யப் போறீங்க?''

''டாக்டரையா வந்து நீ குடிச்சதா சர்டிபிகேட் கொடுப்பார்.''

''என் சட்டை மேலேயிருக்கிறது சாராயம் தானுங்க. ஆனால் நான் குடிக்கலேங்க.'' பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டுக் கூறினான். ''அவசரம் அவசரமா வீட்டுக்குத் திரும்பிக்கிட்டிருந்தேனுங்க. இருட்டுப் பாதையிலே போய்க்கிட்டிருந்தேன். மசமசன்னு வளர்ந்த ஒரு ரௌடிப் பய நெருங்கி வந்தானுங்க. வந்து..... இந்த ரோடு நேரே சூளைம்பேடு போவுதான்னு கேட்டான். நான் ஆமாங்கிறதுக்குள்ளே..... கையிலேயிருந்த புட்டியை என் வாயிலேயும் சட்டையிலேயுமா கவுத்துட்டான். நான் வாயைத் திறந்து கத்தறதுக்குள்ளே ஓடியே போயிட்டானுங்க.''

ஒரு வினாடி நேரத்துக்கு அவனே வெறிக்க நோக்கி விட்டு, ''ஏண்டா! கதையா அளக்கறே?'' என்றார் போலீஸ்காரர்.

''கதையில்லேங்க! நெஜம்தான். நான் நடுங்கிப் போயிட்டேனுங்க. பயத்தோட பதுங்கிப் பதுங்கி வீட்டுக்குப் போய்கிட்டிருக்கிறப்போ.....நீங்க.....வந்து....''

''சும்மா கிடடா, கிழவா! உளறினால் கழுத்தை ஒடிப்பேன்.'' அவரது ஆக்ரோசத்தைக் கண்டதும் நடுங்கிப் போய் விட்டான் கிழவன். பழையபடி கால் முட்டிகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மலானான் கிழவன்.

''மணி என்ன ஆவுதுங்க?''

''ஏன் கொஞ்சம் லேட்டா போனா அதிகாரி கோபிப்பாரோ?''

''இல்லேங்க! வீட்டிலே குழந்தைங்க எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்க.''

கோவென்று கதறி விட்டான் கிழவன்.

கொஞ்ச நேரம் புலம்பிக் கொண்டிருந்த கிழவன் கண்களைத் துடைத்துக் கொண்டு கேட்டான். ''ஐயா! எனக்கு ஒரே ஒரு உதவி பண்ணுறீங்களா? உங்களே என் மகன் போல நினைச்சுக் கேட்கிறேன். செய்வீங்களா என் ராஜா!''

''சொல்லித் தொலே.....''

கிழவன் மடியைப் பிரித்து உள்ளேயிருந்து ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை வெளியே எடுத்து நீட்டினான். ''இதை வாங்கிக்குங்க.''

''அடப் பாவி!'' இரைத்துப் போனார் போலீசுக்காரர். ''செய்யறதையும் செய்துட்டு லஞ்சமா தர்றே! ராஸ்கல்! இதுக்காகவே நாலு நாள் அதிகமா உள்ளே தள்ளச் சொல்றேன் இரு.''

''ஐயையோ! நான் லஞ்சம் தரலேங்க! உங்களை நம்பி ஒரு உதவி கேட்கிறேன். நேத்து மத்தியானத்திலேயிருந்து என் பேரக் குழந்தைங்க குலேப் பட்டினியா கிடக்குதுங்க. ரிக்ஷா வண்டி வேறே கடையாணி கழண்டு போய்ப் பொழைப்பிலே மண்ணைள்ளிப் போட்டுடுச்சு. நொய்யரிசி வாங்கக் கூட வழியில்லே. இன்னைக்குத்தான் காலையிலேயிருந்து ரிக்ஷா முதலாளிக்காகக் காத்திருந்து, அவர் காலிலே கையிலே விழுந்து அஞ்சு ரூவா வாங்கிக்கிட்டு வந்தேன். குழந்தைங்களுக்கு இன்னைக்கு ராத்திரியாவது கஞ்சி ஊத்தலாம்னு நினைச்சிருந்தேன்.....ஹூம்!''

இனமறியாத ஓர் உணர்ச்சி கான்ஸ்டபிள் நெஞ்சை நடுக்கி எடுத்தது.

''இப்ப டாக்டரய்யா வருவாரு...'' கிழவன் விரக்தியுடன் பேசினான். ''காயிதம் கொடுப்பாரு. ஜெயிலுக்குக் கொண்டு போவீங்க. எப்படியும் ஒரு நாலு நாளாவது உள்ளேயிருக்க வேண்டி வரும். நான் தப்பவே முடியாது.....''

''அதுக்கு நானென்ன பண்ண? பணத்தை வாங்கிக்கிட்டு உன்னே விடவா!''

''வேண்டாங்க! அது உங்களுக்கு நல்லதில்லே. எனக்கும் பிரயோசனமில்லே....ரூபாயில்லாம வீட்டுக்குப் போய்க் குழந்தைங்க பட்டினியாலே வாடறதைப் பார்க்கிறதைவிட நான் ஜெயிலுக்கே போறேன். பெரிய மனசு பண்ணி இந்தப் பணத்தை என் வீட்டுக்குக் கொண்டு போய் என் சின்னப் பொண்ணு கண்ணாத்தாகிட்டே கொடுத்தீங்கன்னா...... என் கண்ணாத்தா நல்ல புத்திசாலிப் பொண்ணு. நான் திரும்பி வர்ற வரைக்கும் இந்த அஞ்சு ரூபாயை வைச்சே குழந்தைங்களுக்குக் கஞ்சி ஊத்திடுவா.''—குழந்தைகள் என்றதும் கிழவனின் முகம் திரிந்தது. ''என் மகனோட கடைசிப் பொண்ணு. பொண்ணுத் தாயி மூணு வயசுங்க. என் மேலே உசிரையே வைச்சிருப்பாள். ராத்திரி எந்நேரமானாலும் நான் வராமல் தூங்கவே மாட்டாள். அந்த மூலே சாயபு கடையிலேயிருந்து கம்மர்கட் வாங்கிட்டுப் போவேன். அதை வாயிலே அடக்கிக்கிட்டாதானுங்க அவளுக்குத் தூக்கமே வரும். ஐயா! பிள்ளை குட்டிங்க பெத்திருப்பீங்களே! உங்களுக்கு அதுங் கொணம் புரியாமலா போகும். இதோ!'' என்று மடியிலிருந்து வழவழாக் காகிதத்தில் சுருட்டிய இரண்டு கம்மர்கட் உருண்டைகளை எடுத்து நீட்டினான். ''தயவுசெஞ்சு இதைக் கொண்டு போய் அவகிட்டே தந்திடுங்க. எனக்குத் தெரியும். இந்நேரம் அவள் வாசல் படிக்கட்டிலேயே உட்கார்ந்திருப்பா! நான் ஜெயிலுக்குப் போறதைப் பத்தி மட்டும் தயவுசெய்து சொல்லிடாதீங்க.''

''ஏய், கிழவா!'' ஏதோ இனமறியாத பதற்றமும், ஆவேசமும் வந்து அழுக்க வீரிட்டார் கான்ஸ்டபிள். ''சும்மா கிடக்கமாட்டே நீ'' என்று எட்டி ஓர் உதை விட்டார் கான்ஸ்டபிள். மல்லாந்து விழுந்த கிழவன் எழுந்து உட்கார்ந்த போது அவன் கண்ணிலே அளவு மிருந்த வெறி காணப்பட்டது.

''அடப்பாவி! என் குடும்பத்தையே பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறியா? நீ விளங்குவியா? நீ நாசமாப் போக.... மாரியாத்தா உன் கண்ணைப் பொசுக்க....'' என்று சபித்தவன் திடீரென்று கான்ஸ்டபிளைச் சற்றும் எதிர்பாராத விதமாகச் சட்டென்று இழுத்துப் புல் தரையில் தள்ளினான்.


ஜலதோஷத்தை எதிர்க்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சிவப்பு லேபில்

சாப்பிடுங்கள்









சாதாரண ஜலதோஷம்கூட அபாயகரமானது தான். அது உடலைப் பலவீனப் படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் ஜலதோஷத்தை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்பிரின் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வாராமல் தடுக்கும் சக்தியையூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப் பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் வாராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

JWT-WL. 1245 (a)

தொப்பியும், தடியும் பக்கத்துக்கொன்றாகப் பறந்து சிதற மல்லாந்து விழுந்த கான்ஸ்டபிளின் அலறலைக் கேட்டு, டாக்டரும் அவர் மனைவியும் வெளியே ஓடி வந்தார்கள்.

கொடி உலர்த்தும் கொம்பை ஓங்கியவாறு ஆவேசமாக நிற்கும் கிழவனைக் கண்டதும், டாக்டர் மனைவி, கணவனை வெளியே போக வொட்டாமல் உள்ளுக்கு இழுத்தாள்.

''கான்ஸ்டபிள்! என்னப்பா இதெல்லாம்? ஆள் ரொம்பவும் சீரியஸா குடிச்சிருப்பான் போலிருக்கிறதே!'' என்றார் பதற்றத்துடன்.

ஒரு விநாடி மௌனத்துக்குப் பிறகு, ''இல்லே, டாக்டர்'' என்றார் கான்ஸ்டபிள். ''இவனை யாரோ மடக்கி வேணுமின்னே சாராயத்தை அவன் மேலே கொட்டியிருக்காங்க. அவன் பேச்சு தெளிவாயிருக்கு. நடத்தையும் சுத்தமாயிருக்கு.''

அவனை வினோதமாகப் பார்த்த டாக்டர், ''நீ ஏன் அலறினே?'' என்று கேட்டார்.

''தவறி விழுந்துட்டேன் சார். சிரமத்துக்கு மன்னிக்கணும்'' என்றவர் கிழவனை அணைத்துக் கொண்டு நடந்தார். ''வா, கிழவா!''

''அப்படின்னா கேஸ்?''

''வேண்டாம் சார்!'' என்று கூறி அழைத்துச் செல்லும் கான்ஸ்டபிளை ஒட்டிக் கொண்டு நடந்தான் கிழவன்.

''போய் வா. கிழவா!'' என்று அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டு நடந்தார். கிழவன் சொன்னது பொய்யில்லே. அவன் பேத்தி பொன்னுத்தாயி வாசலிலேயே காத்திருந்தாள்.

நல்ல வேளை! அந்தக் கிழவன் மட்டும் ஒரு விநாடி காலம் பழிவாங்க நினைத்துச் சும்மாயிருந்திருந்தால்..... நினைத்துப் பார்க்கவே ச்சமாயிருந்தது அவருக்கு.

அவர் அமர்ந்திருந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளிய பொந்திலிருந்து தூக்கிய வாலுடன் சரசர வென்று ஓடி வந்த அந்தக் கருந்தேள்களில் ஒன்று கடித்திருந்தாலும்.... அவருக்கு இருக்கும் சீதளஉடம்புக்குப் பிழைப்பதே கஷ்டம். அதை நினைத்தாலே மயிர்க்கூச்செடுத்தது அவருக்கு. நொடியில் பாய்ந்து. இவரை இழுத்துத் தள்ளி என்ன ஆவேசமாக அடித்துக் கொன்றான் கிழவன்.

மனப்பூர்வமாகக் கிழவனுக்கு நன்றி கூறியது அவர் நெஞ்சம்.

''வாத்தியாரே!'' கரகரப்பான குரலைக் கேட்டு நின்றார் போலீஸ்காரர். அந்தக் குரலுக்குரிய ரௌடி அவரை நெருங்கி வந்தான். ''என்ன, சேக் மால்தானா! சட்டுன்னு சொல்லு, நான் அடுத்த தெருவுக்குப் போகணும்.'' அவன் கன்னத்தில் ஓர் அறுப்பு.

''டேய் ரங்கா! அதைக் கொடு இப்படி'' என்றவர், அந்த ரௌடி மடியிலிருந்து பறித்தார் சாராய புட்டியை.

''என்ன வாத்தியாரே! ஏன்?'' என்று ரௌடி அலறும் போதே..... ''இந்த வழி எல்லாம் நமக்கு வேண்டாம்'' என்று அந்தப் புட்டியைத் தூக்கிச் சகதி நிரம்பிய சாக்கடையில் வீசி எறிந்து விட்டு நடந்தார்.

நாளைக்கு....

வேதாந்தத் தத்துவக் கதை

சோறும் சுமையும்



வழிப்போக்கன் ஒருவன் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான். அவன் தன் தலையில் ஆகாரத்துக்காகச் சோற்றுச் சுமையை வைத்துக்கொண்டு சென்றான். நெடுந்தூரம் நடந்ததும் பசியும், களைப்பும், சோர்வும் ஏற்பட்டன அவனுக்கு. கால்கள் தள்ளாடின. தலையிலிருந்த கட்டுச் சோற்றின் கனம் வேறு அவனுக்குப் பெரும் சுமையாக இருந்தது.

வழியிலே ஓர் ஆறு வந்தது. தெள்ளிய நீர் சலசலவென்று ஓடிக் கொண்டிருந்தது.

ஆற்றங் கரையில் உட்கார்ந்து தலையிலே இருந்த கட்டுச் சோற்றை இறக்கிப் புசித்தான். கட்டுச்சோற்றைச் சுற்றியிருந்த துணியை நீரில் நனைத்துப் பிழிந்து மேலே போட்டுக்கொண்டு நடந்தான்.

இப்போது அவன் தெம்பாகவும், ஒரு புது வேகத்துடனும் நடந்தான். அவன் தலையிலே சுமந்த கனம் எங்கும் போகவில்லை. கட்டுச்சோறு தலையிலே தனியாக இருந்தபோது அது அவனுக்குக் கனத்தது. பாரமாக இருந்தது... சுமக்கக் கஷ்டமாக இருந்தது. ஆனால் அதுவே இடம் மாறி உணவாக வயிற்றுக்குள் போனதும் களைப்பு நீங்கி உற்சாகமாக நடக்கலானான். தனித்திருந்த சோறு சுமை நிலை நீங்கி, உணவு நிலை எய்தி அவன் உடலோடு, உயிரோடு ஒன்றிக் கலந்த பின் சோர்வு என்ற பிரமை நிலையைப் போக்கி விடுகிறது.

பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என எண்ணும் மனிதன் இதே போன்று அஞ்ஞான மாயையினால் வாழ்க்கையைச் சுமை போலக் கருதுகிறான். தன்னோடு இறைவன் அந்தர்யாமியாய் ஒன்றி விடும் போது பேரானந்த அனுபூதி நிலையை அடைந்து, அந்தப் 'பரமாத்மா—ஜீவாத்மா' 'ஒருமைப்பாடு உணர்ச்சியை' — ஏக பாவத்தை அனுபவிக்கிறான்.

— கலாபாரதி

கேஸ் பிடித்து வரவில்லை என்பதற்காகக் கறுப்பு மார்க் போட்டு விடுவார் அந்தச் சிடுமூஞ்சி இன்ஸ்பெக்டர். போடட்டுமே!

அதற்காக மனச்சாட்சியை விற்பதா..'? ஊஹூம் !

குங்கும மல்லிகை

பிச்சுமணியும் கல்யாணப் பேச்சைப்பற்றி ஒப்புக்கொள்ளவே, ''லலிதாவைக் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இரு!'' என்று ஆசி கூறினாள் உமா.

பிச்சுமணி கலகலவென்று சிரித்தான்.

''கல்யாணம் நடந்தால் அல்லவா சந்தோஷத்தைப் பற்றி யோசிக்க வேண்டும்!'' என்றான் அவன் அதே சிரிப்புடன் அலட்சியமாக.

''அந்தச் செய்தி உண்மையில்லையா?''

''இல்லை!''

''லலிதாவைக் கல்யாணம் செய்துகொள்ள நீ சம்மதிக்கவில்லையா?''

''சம்மதமா, இல்லையா என்ற கேள்வியையே இதுவரையில் என்னிடம் யாரும் எழுப்பவில்லை!''

உமாவின் நெஞ்சில் இருந்த ஓர் இறுக்கம், இதுவரையில் அவள் உணர்ந்தேயிராத ஓர் இறுக்கம், இப்போது விலகிவிட்டது போல் இருந்தது. அவள் ஆழ்ந்ததொரு பெருமூச்சு விட்டாள்.

பிறகு அவள் தன் வீட்டை நோக்கி நடந்தாள். பிச்சுமணியும் அவளைத் தொடர்ந்தான்.

''பின் எதற்கும் இந்தக் கல்யாணத்தைப் பற்றி அப்படிப் பேசுகிறார்கள்?''

''எல்லாம் என் தாத்தாவால்தான்! கன்யாகுமரியிலிருந்து லலிதா சென்னைக்குப் புறப்பட்டாள். உடனே நானும் போக வேண்டும் என்றேன். அந்த லலிதாவுக்காகத்தான் நான் அப்படிச் சொல்லுகிறேன் என்று என் தாத்தா நினைத்துக் கொண்டு என்னுடைய கல்யாண ஏற்பாடுகளுக்காக விளம்பரப்படுத்துகிறார்.''

''உன் தாத்தா அப்படி நம்பிக்கை கொள்ளும்படியாக நீ இடமளித்தாய், இல்லையா?''

''இல்லாவிட்டால் என் தாத்தா அந்த ஊரை விட்டே கிளம்பியிருக்க மாட்டார்! ஸ்தல யாத்திரை என்ற பெயரில் பல ஊர்களுக்கும் போய்க்கொண்டேயிருப்பார். எனக்கோ உடனே சென்னைக்கு வரவேண்டும்போல் இருந்தது'' என்ற பிச்சுமணி ஆவலோடு உமாவின் உருவப் பொலிவை ஏற இறங்கப் பார்த்தான். பல நாட்களாகப் பார்க்



காதலை யெல்லாம் ஒன்ருகச் சேர்த்து அந்த ஒரே பார்வையில் அநுபவித்துவிட வேண்டும்போல் அவன் தவித்தான்.

உமா மௌனமாக நடந்தாள். அவள் உள்ளத்தில் ஏதோவொன்று துறுதுறுத்துக்கொண்டிருந்தது. அதன் உறுத்தல் அவளையும் மீறி அவள் வாயில் மெல்ல வெளிப்பட்டும் விட்டது.

''கன்யாகுமரியின் கடற்கரையில் நீயும் லலிதாவும் உலாவினீர்களாமே!''

''ஆமாம்! ஆனல் நாளுக அவளைக் கூப்பிடவில்லை. அவளாகத்தான் வந்தாள். அவளுடைய அப்பாவும் என் தாத்தாவும் சேர்ந்து செய்த ஏற்பாடு தான் அதெல்லாம்.''

''நீங்கள் இருவரும்...?''

''கன்யாகுமரியில் பல இடங்களில் சுற்றிப் பொழுது போக்கினேம். அங்குள்ள விசேஷங்களைப் பற்றியெல்லாம் அவள் பல விளக்கங்களும், பல கதைகளும் சொன்னுள். கடலில் நிலா உதயமாவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தபோது கூட அந்த நிலாவைப் பற்றியும் அருமையான ஒரு கதை சொன்னுள்!'' என்முன் பிச்சுமணி.

உமா வேகமாக நடையை எட்டிப் போட்டாள். பிச்சுமணியும் வேகமாக அவளைப் பின்தொடர்ந்தான்.

''ஆனல் அதற்காக நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று அர்த்தமல்ல!'' என்முன் பிச்சுமணி.

அவனை லலிதா காதலிக்கிறுள் என்று டாக்டர் ஜகந்நாதன் சொன்ன விஷயம் இப்போது உமாவின் நினைவில் வந்து நெஞ்சில் சுர்ரென்று தைத்தது.

''பின் என்ன அர்த்தம்? பாவம், அந்தப் பெண்ணேடு நீ பழகியது, பேசியது எல்லாம்...?'' என்று உமா சற்றுக் கடுமையாகவே கேட்டாள்.

''சும்மா பொழுது போக்காகத்தான்! அவளோடு அங்கு சுற்றியதெல்லாம் எனக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருந்தது! அதெல்லாம் ஒரு தமாஷ்!'' என்று அலட்சியமாகச் சொன்ன பிச்சுமணி, ''மேலும் அந்தப் பெண் ஒரு அசடு!'' என்முன்.



உமா சட்டென்று நின்முள். ஆத்திரத்தால் முகமெல்லாம் சிவக்க அவள் நிமிர்ந்து அவனுடைய முகத்தைப் பார்த்தாள்.

''அதெல்லாம் வெறும் வேடிக்கை விளையாட்டா?'' என்று குமுறிய அவள் ''மகா மோசமானவர்கள்தான் அப்படி ஒரு பெண்ணுள்ளத்தோடு விளையாடுவார்கள்!'' என்று கடுகடுத்தாள்.

பிச்சுமணி அயர்ந்து நின்றுவிட்டான். பிறகு, ''உமா!...'' என்று மிருதுவாகக் குழைந்தான்.

ஆனல் அந்தக் குழைவு உமாவைக் குளிர்விக்கப் போதவில்லை. 'ஞானியின் கோபம் காடு தாங்காது' என்பார்கள். அதுபோல், தூங்குகிற புலியைச் சீண்டி

அரு. ராமநாதன்

எழுப்பி விட்டதுபோல் அமைதியே உருவான உமா சீற்றங்கொண்டு விட்டாள்.

''சீட்டாடுவது, வேட்டையாடுவது, ரேஸ் ஆடுவது, பந்தயம் கட்டி விளையாடுவது முதலானவைகளைப் போல் சில ஆடவர்கள் பெண்களின் இருதயங்களோடு விளையாடி அப் பெண்ணுள்ளங்களை உடைப்பதையும் ஒரு தமாஷாகக் கருதுகிறார்கள். பிறகு அந்தத் தமாஷ் முடிந்ததும், 'ஆஹா, என்ன வேடிக்கை!' என்று தங்களுக்குள்ளேயே சிரித்துக் கொண்டு 'பெண்களெல்லாம் எவ்வளவு அசடுகள்' என்று கேலியும் செய்கிறார்கள். பெண்கள் அசடுகளாக இருக்கலாம்! உண்மையில் பல பெண்கள் அசடுகளாகவும் ஆகி விடுகிறார்கள். ஆனால் பெண்களின் அந்தப் பலவீனத்தை அப்படி உபயோகப் படுத்துவது கண்ணியமான செயலா? மனிதத் தன்மையா? பிச்சுமணி! நீயும் அந்த ரகத்தைச் சேர்ந்தவனாக இருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை. நீ கண்ணியமானவன், வெகுளி என்றே நினைத்திருந்தேன்!'' என்று உமா அனல் தெறிப்பது போல் வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினாள்.

கன்யாகுமரியில் லலிதாவின் பெண் உள்ளத்தோடு விளையாடி அவளை ஏமாற்றி விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டு வந்திருப்பதாகத் தன்னை உமா குற்றம் சாட்டுகிறாள் என்று பிச்சுமணி புரிந்து கொண்டான்.

''உமா! நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்து விட்டீர்களா?'' என்று பிச்சுமணி, விறைப்பாக நின்று கொண்டே வெகு அமைதியாகக் கேட்டான்.

''இதற்கு மேல் சொல்லுவதற்கு எதுவுமில்லை!'' என்று உமா சொல்லி விட்டு விருட்டெனக் கிளம்ப முயன்றாள்.

''கொஞ்சம் நில்லுங்கள் உமா!'' என்று பிச்சுமணி குறுக்கே பாய்ந்து நின்று, ''உமா! நான் பெண் உள்ளங்களோடு விளையாடி வஞ்சிக்கிறவன்! கண்ணியம் இல்லாதவன்! மனிதத் தன்மை இல்லாதவன்! இதற்கு மேலும் ஒன்றை நீங்கள் சொல்ல முடியாதா?'' என்றான் பரிதாபமாக.

என்ன என்பது போல் உமா தன் புருவத்தை நெரித்தாள்.

''உண்மையிலே நான் அப்படியெல்லாம் மோசக்காரனாக மாற நேர்ந்தால் எந்தப் பெண்ணுக்காக அப்படி மாறுவேன் என்பது உங்களுக்குத் தெரியாதா, உமா? அதையும் சொல்லி விடுங்கள்!''

உமா தன் உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டாள். போர்க்களத்தில் சட்டென்று தன் கையில் உள்ள ஆயுதங்களையெல்லாம் இழந்து விட்டு எதிரியின் முன்னால் தலை குனிந்து நிற்பது போன்ற நிலைதான் அவளுக்கு ஏற்பட்டது.

பிறகு அவள் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''பிச்சுமணி! எந்தப் பெண்ணும் தனக்காக நீ மோசக்காரனாக மாற வேண்டும் என்று விரும்ப மாட்டாள்! அப்படி நீ மாறினாலும் அதை அவள் ஏற்றுக் கொள்ள மாட்டாள்!'' என்றாள் உருக்கமான குரலில்.

''அது எனக்குத் தெரியும், உமா! ஆனால் எந்தப் பெண் உள்ளத்தோடும் நான் நயவஞ்சகமாக விளையாடுவதில்லை, விளையாடவும் மாட்டேன். அப்படி விளையாடவும் எனக்குத் தெரியாது! இது சத்தியம்!''

''ஆனால் அந்தப் பெண்...?''

''அந்தப் பெண் லலிதாவின் உள்ளத்தை நான் உடைத்து விட்டதாகவோ அவளை ஏமாற்றி விட்டதாகவோ யாரும் குறைசொல்ல முடியாது! அவளை நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக என் தாத்தா நம்பிக் கொண்டிருக்கிறார் என்றால் அப்படி அவர் நம்பும்படி நான் வஞ்சிக்கவில்லை. அவர் தான் தம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்கிறார்.''

''இருந்தாலும் அவர் அப்படி நம்பும்படி உன் மனமறிய நீ இடமளித்திருக்கிறாய்!''

''இல்லாவிட்டால் நாங்கள் உடனே சென்னைக்குக் கிளம்பி வந்திருக்க முடியாது....''

''அதனால் நீ மௌனமாக இருந்து விட்டாய்! உன் மனச்சாட்சியை நீயே ஏமாற்றிக் கொள்ளத் துணிந்திருக்கிறாய்!''

''என் மனச்சாட்சிக்கு ஒன்றுமில்லை, உமா!'' என்ற பிச்சுமணி வெகு தீவிரமாகவும் பரிவோடும் உமாவின் முகத்தை உற்றுப் பார்த்து, ''ஆனால் உமா.... உங்கள் மனச்சாட்சியையே நீங்கள் ஏமாற்றிக் கொண்டு வர முயல்கிறீர்களே, அதுதான் பெரிய கஷ்டம்!....'' என்றான்.

உமாவுக்குக் குபீரென்று உடம்பெல்லாம் வியர்த்து வெடவெடத்தது. நெஞ்சில் கட்ட காயத்தைக் கீறி விடுவது போலவும் வேதனை கிளம்பியது. ஒருகணம் அயர்ந்து நின்றுவிட்ட அவள் மறுகணம் விடுவிடுவென்று நடக்கலானாள்.

பிச்சுமணி ஒரு புன்முறுவலுடன், ''உமா; என் காருக்கு வாருங்கள்!'' என்று கூப்பிட்டான்.

''எதுக்கு? கன்யாகுமரியில் நீ வாங்கி வந்த வளையல்கள், மாலைகள் எல்லாம் எனக்கு வேண்டாம்!''

''அம்மனின் குங்குமம், திருச்செந்தூர் முருகனின் விபூதி எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். அந்தப் பிரசாதங்களை வேண்டாம் என்று சொல்லக் கூடாது, உமா! தயவுசெய்து வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று பிச்சுமணி பரிதாபமாகக் கெஞ்சினான்.

உமா வேறு வழியின்றிக் குங்குமம், விபூதி பிரசாதங்களின் பொட்டலங்களை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

''அப்புறம் உமா...இதோ சங்கு மாலை உங்கள் பாட்டி 'சிவ சிவா' என்று ஜபிப்பதற்கு. இதை நீங்கள் வாங்கிக் கொள்ளாவிட்டால் நானே உங்கள் பாட்டியிடம் கொண்டு போய்க் கொடுக்கிறேன். இதுக்காக ஒன்றும் என்னைப் பாட்டி கோபித்துக் கொள்ள மாட்டார்கள்!'' என்றான் பிச்சுமணி.

''வேண்டாம்! வேண்டாம்! என்னிடமே கொடு'' என்ற உமா அந்தச் சின்ன சங்கு மாலையையும் வாங்கிக் கொண்டாள்.

''அப்புறம் உமா.... உங்கள் சுவர் மாடத்திலுள்ள சின்னப் பிள்ளையாருக்கு இந்த வலம்புரிச் சங்கு!''

உமாவுக்கு உள்ளூறச் சிரிப்பு வந்துவிட்டது. அதை வெளிப்படாதவாறு அடக்கிக் கொண்டு, ''சரி, அதையும் கொடு: அதோடு அந்த மும்மணல் மூட்டைகளையும் கொடு. அவற்றை டியூஷன் குழந்தைகளுக்காகத் தான் அள்ளி வந்திருப்பாய்!'' என்றாள்.

பிச்சுமணி சிரித்தான். அவனுடைய பசுமையான முகமெல்லாம் மலர்ந்து அவனுடைய கண்கள் உற்சாகத்தினால் விரிந்து மின்னின. பிறகு அவன் வளையல்கள், கருமணி மாலை முதலானவைகளை எடுத்து, உமாவின் மிருதுவான கைகளையும், மெழுகு போன்ற மொழு மொழு வென்ற கழுத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே, ''இதையெல்லாம் என்ன செய்வது என்பது தான் தெரியவில்லை!'' என்றான்.

''நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணுக்குக் கொடு!''

''சரி; கல்யாணமான பிறகு நானே அழகழகாகப் போட்டு விடுகிறேன். அப்புறம் அந்தக் கையையும் கழுத்தையும் விடவே மாட்டேன்!'' என்றான் பிச்சுமணி குழந்தைத்தனமாக. தனக்குப் பிரியமானவர்களைக் கையைப் பிடித்துக் கொண்டோ, கழுத்தைக் கட்டிக் கொண்டோ 'விடவே மாட்டேன்' என்று ஆசையாகக் குழந்தை அடம் பிடிக்குமே அது போலவே ஒலித்தது அவன் குரல்.

உமாவின் கையிலும் கழுத்திலும் ஏதோ ஒரு கிளுகிளுப்பு உண்டாயிற்று. அவள் சிலிர்த்துக் கொண்டு ஏதோ ஒன்

குட்டிக்கதை



1940ல் நான் லௌஸானிலிருந்தபோது ஸ்பெயின் தேசத்து அரசர் பதின்மூன்றுவது அல்பான்ஸோவைச் சந்தித்தேன். சுவாரஸ்யமான, வேடிக்கையான குட்டிக் கதைகளைச் சொல்வதில் அல்பான்ஸோவுக்கு நிகர் அவரேதான். இங்கிலாந்து தேசத்து ஏழாவது எட்வர்ட் மன்னரின் இறுதி யாத்திரை ஊர்வலத்தில் தாம் கலந்து கொண்டதைப் பற்றிப் பின்வருமாறு அல்பான்ஸோ கூறினார்.

''எட்வர்டு மன்னரின் இறுதி யாத்திரை ஊர்வலத்தில் கலந்து கொள்ள நான் அவசியம் லண்டனுக்குப் போய்த்தானே ஆக வேண்டும்? நான் மற்ற எல்லாரையும் விட அதிக காலம் ஒரு நாட்டின் மன்னனாக இருந்திருக்கிறேன். பார்க்கப்போனால் என் அப்பா அகால மரணமடைந்த காரணத்தால் நான் பிறப்பதற்கு முன்பாகவே நான் மன்னனாகி விட்டிருக்கிறேன். ஆகவே பிரேத ஊர்வலத்தின்போது எனக்குத் தானே முதலிடம் தரப்பட வேண்டும்? ஆனால் என்னைப் பின்வரிசையில், பல்வேறு தூதராலயங்களில் பணியாற்றும் பிரதிநிதிகளுடன் சேர்த்து விட்டார்கள். நான் இதைப் பொருட்படுத்தவில்லை. மன்னர்களுக்கிடையில் மன்னனாக ஆடம்பரத்துடன் முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டு போவதைக் காட்டிலும் இங்கே இளைஞர்களுடன் தமாஷாகப் பேசிக் கொண்டே நடக்கலாமே என்று மகிழ்ந்தேன். ஆனால் லண்டனிலிருந்த என் நாட்டின் தூதருக்கு இதைப் பொறுக்கவே முடியவில்லை. ரொம்பக் கோபத்துடன் நிர்வாகிகளை அணுகி விளக்கம் கோரினார். பிரிட்டிஷார் இதற்கு மிகவும் சுலபமாகப் பதில் அளித்து விட்டார்கள். 'உங்கள் மன்னரைக் கொல்ல யாரேனும் சதி செய்யக் கூடும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கிறோம்; அந்தக் களேபரத்தில் அவருடன் சேர்ந்து முக்கியப்பட்ட மனிதர்கள் யாரேனும் இறந்து விடக் கூடாதே என்கிற கவலை எங்களுக்கு!''

[காதரின் ராபலோவிச் எழுதியது]

'இது பணத்தைப் பற்றிய விஷயம் அல்ல; கொள்கையைப் பொறுத்த விஷயமே' என்று ஒருவன் சொல்லுவானுனால், அது பெரும்பாலும் பணத்தைப் பொறுத்த விஷயமாகவே இருக்கும். — கின் ஹப்பார்ட்

றைத் தீவிரமாக யோசித்து விட்டு, ''நீ லலிதாவைக் கல்யாணம் செய்துகொண்டால் உன் தாத்தா ரொம்ப சந்தோஷப்படுவார்; அதுக்கான ஏற்பாடுகளை யெல்லாம் செய்து கொண்டிருப்பார், இல்லையா ?'' என்று ஒரு பெருமூச்சுடன் கேட்டாள்.

''அதுக்காக என் எதிர்கால சந்தோஷத்தை நான் இழக்க முடியாது!''

''உன் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடியவர் உன் தாத்தா ஒருவர்தான், பிச்சுமணி!'' என்ருள் உமா குரல் கமுதமுக்க.

''என் தாத்தாவுக்காக என்னை உயிரோடு சமாதியில் வைக்கவும் சம்மதிப்பேனே தவிர லலிதாவை ஒரு போதும் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டேன்!''

''பிச்சுமணி! உனக்கு வேண்டியவர் உன் தாத்தாவைத் தவிர இந்த உலகத்தில் யாருமே இல்லை. அவரிடமே நீ மனம் திறந்து பேசு. அதன் பிறகு அவர் என்ன சொல்கிருரோ அதன் படியே செய். அதுதான் உனக்கு நல்லது!'' என்ருள் உமா பரிவுடன்.

அவளை ஆசையோடு நோக்கிய பிச்சுமணி, அவளது இரு கைகளையும் அப்படியே அள்ளி எடுத்துத் தன் நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டும் என்று தவிதவித்தவனுய் அழாத குரலில், ''என்னை விணுக அலைக்கழிக்காதீர்கள், உமா! என்னைக் கண்டதுமே நீங்கள் பறந்தோடிவிட முயன்றீர்கள். அதை என்னுல் பொறுக்க முடியவில்லை'' என்று பொருமிவிட்டு, ''உமா! நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்துக்குப் பதில் எழுத வேண்டுமென்று துடித்தேன். ஆனுல் எழுத முடியவில்லை. நேரில் பதில் சொல்லலாம் என்றுதான் வந்தேன்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

உமா சட்டெனக் குறுக்கிட்டு, ''நீ பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை, பிச்சுமணி! உன்னுடைய கடிதத்துக்கு என் கடிதமே பதில் சொல்லி விட்டதே !'' என்ருள் பரபரப்புடன்.

''அது எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்! என் கடிதத்தைப் படித்ததும் நீங்கள் கோபப்படவில்லை; கனிவுடன் பதில் எழுதியிருக்கிறீர்கள். அந்தக் கனிவு......'' என்று பிச்சுமணி ஏதோ உணர்ச்சிப் பெருக்கில் உளறுபவன் போலக் குரல் தடுமாறிஞன்.

''பிச்சுமணி, அந்தக் கடிதத்தோடு எல்லா விஷயமும் முடிந்து விட்டது. இனி அதைப் பற்றி மறுபடியும் பேச்செடுக்க வேண்டாம்.''

''சரி. இப்போது அதைப் பற்றி நாம் பேச வேண்டாம்!'' என்று எதிரொலித்த பிச்சுமணி, ''நான் லலிதாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பேனென்று என் தாத்தா விணுக ஆகாசக் கோட்டை கட்டுகிருர் என்பதை அவரிடமே சொல்லி விடுகிறேன். அதனுல் ஒரு பெரிய யுத்தம் மூளுமென்ருலும் பரவாயில்லை. அதை அவரிடம் சொல்லி விடுவதுதான் நேர்மை, நியாயம்!'' என்ருன்.

''யுத்தம் எதற்கு?''

பிச்சுமணி கலகல வென்று சிரித்தான். அந்தச் சிரிப்பு அவனுடைய கண்களிலும் புன்முறுவலாக நர்த்தனமாடியது. அந்தக் கண்களோடு உமாவின் கருவிழிகளை ஊடுருவிப் பார்த்தான். அந்தப் பார்வை உமாவின் நெஞ்சத்தில் வெகு காலமாக மூடிக் கிடக்கும் ஒரு கதவைத் திறக்க முயல்வது போல் இருந்தது.

''எனக்கு வீட்டில் நிறைய வேலை இருக்கிறது!'' என்று உமா நிலைமையைச் சமாளிக்க முயன்ருள்.


''சரி, உமா! உங்களைப் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம். போய் வருகிறேன்! ஆனுல் மறுபடியும் நான் வருவதைக் கண்டால் பறந்தோடி விடாதீர்கள்!''

உமா தன் நெஞ்சை அறிவினுலேயே அடக்கிக் கொண்டாள்.

பிச்சுமணி ஆனந்தத்தால் நர்த்தனம் ஆடுபவன்போல் துள்ளித்துள்ளி நடந்து சென்று தன் காரில் ஏறி உமாவை நோக்கிக் கையை ஆட்டி விட்டுத் தன் காரை வேகமாக ஓட்டிச் சென்ருன். அது வீதி முனையில் மறையும் வரையில் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு உமா நின்ருள்.

பிச்சுமணியின் கார் போய் மறைந்த பிறகும்கூட அதன் ஒலிகள் விதிப் பறவையின் இறக்கைகளைப் போலவே உமாவின் நெஞ்சில் படபடத்துக்கொண்டிருந்தன.

(தொடரும்)



1954 ஆகஸ்டு இரண்டாந் தேதி திங் கட்கிழமையன்று அதிகாலையில் ரேடியோ வைத் திருப்பிய நியூயார்க் நகர மக்கள் திடுக்கிட்டார்கள். அந்தப் பட்டினத்தின் போலீஸ் கமிஷனர் ஆடம்ஸ் பின்வருமாறு ரேடியோவில் பேசினார் :

''உங்கள் வீட்டு ஜன்னல்வழியாக வெளியே பார்க்கும்போது, உங்களுக்கு இன்றைய தினம் ஓர் அமைதியான, அழகான, சாந்தம் நிலவும் நாளாகத் தோன்றும். ஆனால் நியூயார்க் நகரத்தில் எந்தத் தினமுமே அமைதி யாகக் கழிந்ததில்லை. நாளைக் காலை சூரியோ தயம் ஆகுமுன்னர் நம்மில் ஒருவர் கொலை செய்யப்பட்டிருப்பார், மற்றொருவர் நீதிக்குப் புறம்பாக அஜாக்கிரதையாக இருந்த கார ணத்தால் மரணமடைந்திருப்பார். இருபத்தி யேழு பேர்கள் அடி உதை வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்திருப்பார்கள், மூன்று பெண்மணிகள் கற்பழிக்கப்பட்டிருப் பார்கள், நூற்றி நாற்பது வீடுகள் சூறை யாடப்பட்டிருக்கும்; நம்மில் நாற்பது பேர் களுடைய கார்கள் திருட்டுப் போயிருக்கும், முப்பத்தியோரு பேர்கள் தெருவில் நடக்கை யில் துப்பாக்கி முனையில் வழிப்பறி செய்யப் பட்டிருப்பார்கள்; அறுபத்தி ஒன்பது பெரிய கொள்ளைகள் கடைகளிலும் பாங்குகளிலும் நடைபெற்றிருக்கும்; இன்னும் சில்லறை அந்திகளாகப் பதினைந்து குற்றங்கள் இழைக் கப்பட்டிருக்கும். இது நியூயார்க் நகரின் ஒரு நாளைய சராசரிக் கதை!''

செல்வம் கொழிக்கும் இடத்திலேதான் பொறாமையும் மனப் புகைச்சலும் மிகுந்து காணப்படுகின்றன; கொலையும் கொள்ளையும் குறைவின்றி நடைபெறுகின்றன. பணம் டண்ணைச் சுலபமான வழியில் உழைக்க விரும்பாத சோம்பேறிகள் அராய்கிறார்கள். அதில் நிபுணர்களாகவும் மாறுகிறார்கள்.

இவ்வளவு பெரிய குண்டர்களின் கூட்டத் தைச் சமாளிக்க நியூயார்க் போலீஸ் எத்தனை திறமை மிக்கதாய் இருக்க வேண்டும்? நீதியை நிலைநாட்டும் பணியில் அவர்கள் எவ்வளவு தீவிரமாக இறங்க வேண்டும்? உயிரைத் துச்சமாக மதித்து எத்தனை ஆபத்துக்களுக்கு அவர்கள் உட்பட வேண்டியிருக்கும்? இதை யெல்லாம் யோசித்தபோது தன்னலம் கரு தாத அந்த வீரர்களின் வாழ்க்கையைப் பற்றி எழுத நினைத்தேன் நான்.

எண்பத்தொரு லட்சத்து எண்பத்திரண டாயிரம் நியூயார்க் நகர மக்களின் உயிர், உடைமைகளின் பாதுகாவலர்களாய், ஆறா யிரம் மைல் நீளமுள்ள வீதிகளில் வலம் வரும் இருபத்தாறாயிரத்து அறுநூறு போலீஸ்காரர்களையும் இரண்டாயிரம் துப்பறியும் நிபுணர்களையும் பற்றி எப்படி எழுதுவது? முடியாது என்ற காரணத்தால் அவர்களின் பிரதிநிதிகளாக ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்தேன்.

* * *

போலீஸ் தலைமைக் காரியாலயம் ஜானி கோர்டெஸ்ஸுக்குக் கீழ் வேலை பார்க்குமாறு ப்ராங்க் பிலிப்ஸை அனுப்பி வைத்தது. அமெ ரிக்க நாட்டிலேயே மிக அதிகமாகப் பிரசித்தி பெற்ற துப்பறியும் போலீஸ்காரன் ஜானி கோர்டெஸ். இரண்டு தடவைகளில் 'மெடல் ஆப் ஆனர்' என்கிற கௌரவ பதக்கத்தைப் பெற்றவன். இந்தப் பதக்கத்தில் இரண்டினை அணிந்தவர்கள் அமெரிக்கப் போலீஸ் சரித் திரத்திலேயே இன்றுவரை வேறு யாரும் இருந்ததில்லை. ஒரு முறை அந்தப் பதக்கத் தைப் பெற்றவர்களிலும் பெரும்பாலோர் ஒரு போராட்டத்தின் மத்தியில் தங்கள் உயி ரைத் தியாகம் செய்து அந்தக் கௌரவத்தை அடைந்தவர்கள்தான். 'அப்படி இருக்க ஜானிகோர்டெஸ் இன்னும் உயிர் வாழ்ந்தா னென்றால் அவனுடைய சாகசச் செயல்கள் எப்படிப்பட்டவையாயிருந்திருக்க வேண்டும்? அத்தகைய ஒருவனுக்குக் கீழ் பணியாற்றுவ தென்றால் அது எவ்வளவு அதிர்ஷ்டம்?' இவ்

வாறு எண்ணி மனம் பூரித்தான் ப்ராங்க் பிலிப்ஸ்.

ஜானி கோர்டெஸ் இப்போது லெக்ஸ் டயமண்ட் என்பவனைப் பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். லெக்ஸ் டயமண்டும் அவன் கூட்டத்தாரும் போலீஸாருக்குக் கவலை அளிக்கிற மாதிரியாகப் பெரிய அளவுக்கு வளர்ந்து விட்டிருந்தார்கள். அமெரிக்காவில் மதுவிலக்கு அமுலில் இருந்த காலம் அது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதிலும் விற்பனையிலும் அவர்கள் முழுமூச்சுடன் இறங்கி யிருந்தார்கள். அத்துடன் வேறு பலவிதமான தீச் செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர். ஜானி கோர்டெஸ் இதற்கு முன்பாகவே லெக்ஸ் டயமண்டையும் அவன் சகாக்களில் முக்கியமான சிலரையும் சிறைக்குள் தள்ளியிருக்கிறான். தண்டனைக் காலம் முடிந்து இப்போது வெளியே உலாவும் அவர்களுக்கு ஜானியை நன்றாக அடையாளம் தெரியும். ஜானி அவர்கள் அருகில் நெருங்கினாலே, அவர்கள் உஷாராகி விடுவார்கள். ஆகவே அவர்களைக் கண்காணிக்க ஜானிக்குத் தன் சொற்படி கேட்டு நடந்து கொள்ளும் ஒரு 'புது முகம்' தேவைப்பட்டது. அந்தப் புது முகம்தான் ப்ராங்க் பிலிப்ஸ்.

டயமண்டைப் பிடித்து விடுவது சுலபம். ஆனால் அவனைக் கைதாக்கினால் மட்டும் போதாது: நீதி விசாரணை நடத்தி அவனை நீண்ட காலம் உள்ளே தள்ளுவதற்கான தகுந்த ஆதாரங்களுடன் அவன் அகப்பட்டுக் கொள்ள வேண்டும். இந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருந்தான் ஜானி கோர்டெஸ். ஜானியிடமிருந்து கட்டளைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை பிராங்க் பிலிப்ஸ் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டு வந்தான். லெக்ஸ் டயமண்டின் டெலிபோன் பேச்சுக்களையெல்லாம் ஒட்டுக் கேட்டார்கள். தன் டெலிபோன் கம்பிகளுடன் போலீஸார் தங்கள் டெலிபோன் கம்பிகளையும் இணைத்து விடத் தன் டெலிபோன் பேச்சுக்களெல்லாம் அவர்களுடைய தலைமைக் காரியாலயத்தில் வார்த்தை விடாமல் பதிவாகிக்கொண்டிருக்கும் என்பது லெக்ஸ் டயமண்டுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே டெலிபோனில் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கலாம் என்றுதான் கூறுவானே தவிர வேறு எதுவும் அவன் பேசமாட்டான். ப்ராங்க் சந்திப்பு நிகழும் இடங்களுக்குப் போய் மறைந்திருந்து கவனித்தான். லெக்ஸ் டயமெண்டுடன் யார் யார் தொடர்பு கொள்ளுகிறார்கள் என்பதையெல்லாம் குறித்துக் கொண்டு ஜானிகோர்டெஸ்ஸிடம் தகவல் தெரிவித்தான். ''லெக்ஸ் டயமண்டு அண்டு கம்பெனி'' தூங்கிய போது தான் அவன் தூங்கினான். அவர்களுக்குத் தூக்கம் பிடிக்கவில்லையானால் பிலிப்ஸும் விழிப்புடனிருந்தான். லெக்ஸ் டயமண்டின் சகாக்களை நன்றாகக் கவனித்து அவர்கள் உருவங்களை மனத்தில் பதிய வைத்துக்கொண்டான்.

ஒரு முறை டயமண்டின் மனைவி ஆலிஸைப் பற்றிப் பிலிப்ஸ் குறிப்பிட்டபோது கோர்டெஸ் அவளைப் பற்றி ஒரு விசித்திரமான கதையைக் கூறினான். ''டயமண்டை முழுமையாக நம்பும் ஓர் ஆளையோ அல்லது மனப்பூர்வமாக நம்பாத ஒரு பெண்ணையோ காண முடியாது! அவன் மனைவி ஆலிஸை எடுத்துக்கொள். அவனிடம் அவளுக்கு உயிர். அவள் அடிக்கடி டயமண்டின் நண்பர்களுக்கு விருந்து வைப்பாள். விருந்தினரில் ஒருவருடன் பேசிக் கொண்டே அவனை அங்குள்ள ஓர் இரும்பு நாற்காலியில் உட்கார வைப்பாள். நாற்காலியில் குறைந்த சக்தி உடைய மின்சாரக் கம்பி இணைக்கப்பட்டிருக்கும். உரையாடியபடியே ஆலிஸ் ஸ்விட்சைப் போடுவாள். நாற்காலியில் உட்கார்ந்திருந்த விருந்தினன், 'ஷாக்' அடித்ததால் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பான்! எல்லாரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். இது அவர்களுக்கு வேடிக்கை விளையாட்டு. ஆலிஸ் மின்சாரத்தால் தாக்குண்ட அந்த விருந்தினரைப் பார்த்து, 'என் கணவருடன் தொடர்பு கொண்டவர்கள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும்; மரண தண்டனை பெற்று இதை விடப் பலமடங்கு சக்தி வாய்ந்த மின்சார நாற்காலியில் உட்காருவதற்குக்கூடத்தான்! அதற்கு இங்கே இப்போது ஒத்திகை நடந்தது' என்பாள். இது போன்ற தந்திரங்கள் லெக்ஸ் டயமண்டுக்கு ரொம்பப் பிடிக்கும்!''


காலம் ஓடிக் கொண்டிருந்தது. எவ்வளவோ முயன்று பார்த்தும் டயமண்டைப் பிடிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் அவர்களுக்கு அகப்படவில்லை.

'லெக்ஸ்' (கால்கள்) என்ற தன் புனைபெயருக்கு ஏற்ப டயமண்ட் போலீஸார் விரித்த வலைகளில் சிக்காமல் நழுவி வந்தான். சட்டப் புத்தகங்களில் உள்ள எல்லாக் குற்றங்களையும் டயமண்ட் செய்து வருகிறான் என்பது போலீஸாருக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனாலும் என்ன ? கோர்ட்டில் அவனை ஆஜராக்குமளவுக்கு அவர்களுக்கு ருசுக்கள் ஏதும் கிடைக்கவில்லையே.

அத்தனை சாமர்த்தியமாகக் காரியங்களைச் செய்து வந்த டயமண்ட் கூட ஒரு தடவை ஆத்திரத்தில் எல்லை மீறிப் போய் அகப்பட்டுக் கொள்வான் போலிருந்தது. ஹாட்ஸி-டாட்ஸி கிளப் என்று ஓர் இரவுக் கேளிக்கை விடுதியை நடத்தி வந்தான் டயமண்ட். இங்கு ஒரு நாள் நள்ளிரவுக்குப் பிறகு, கூட்டம் குறைந்திருக்கும் சமயம் தன் நண்பன் சார்லியுடன் மது அருந்திக் கொண்டிருந்தான் அவன்.

அப்போது மூன்று பிரபலமான குண்டர்கள் அந்தக் கிளப்புக்குள் நுழைந்தார்கள். தலைமறைவாக வாழும் குண்டர்களின் உலகிலேயே ஒரு கூட்டத்துக்கும் மற்றொரு குழுவுக்கும் இடையில் பகைமை பொறாமை உணர்ச்சிகளெல்லாம் உண்டு. இன்று ஹாட்ஸி — டாட்ஸி கிளப்புக்குள் நுழைந்த மூவரும் வேண்டுமென்றே டயமண்டை வம்புக்கு இழுத்தனர். விவாதத்தின் விளைவாக டயமண்டின் கோபம் உச்சகட்டத்தை அடைந்தது. துப்பாக்கியை உருவி அவர்களில் ஒருவனைத் தீர்த்துக் கட்டினான். டயமண்டின் நண்பன் சார்லி மற்ற இருவரையும் கவனித்துக் கொண்டான். மூன்று குண்டர்களில் இருவர் பரலோகம் சென்றடைந்து விட்ட

ஒவ்வொரு குடும்பமும் வாங்கக்கூடிய
உயர் ரக டால்கம் பவுடர்!



பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்

குளுமையானது, நறுமணமிக்கது,
புத்துணர்ச்சி யூட்டுவது

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் குடும்பத்தினர் அனைவரும் எல்லாப் பருவ காலங்களிலும் உபயோகிக்க ஏற்ற உன்னத டால்கம் பவுடர். இதமளிக்கும் துல்லிய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் வறுத்தெடுக்கும் கோடையிலும் உங்களை நாள் முழுவதும் சுகமாக இருக்க உதவும். புழுக்கமான காலத்திலும் இனிய நறுமணமுள்ள பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் வியர்வையை உறிஞ்சி உங்களை நாள் பூராவும் சுகந்தமான புத்துணர்ச்சியுடன் வைக்கும்!

உங்கள் குடும்பத்தினருக்காக ஒரு டின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் இன்றே வாங்குங்கள்—இப்பொழுது 3 சைஸ்களில் கிடைக்கிறது!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. யில் இணைக்கப்பட்டது)

மக்லீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!





இவ்விதம் சோதியுங்கள்

1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்லீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்லீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

MTP/UP/1-43-TM

னர். ஒருவன் மட்டுமே பலத்த காயங்களுடன் எமனுடன் போராடிக் கொண்டிருந்தான்.

டெலிபோனில் யாரோ செய்தி தெரிவிக்கப் போலீஸ் கார் ஐந்தே நிமிஷங்களில் அந்த ஸ்தலத்தை அடைந்தது. கிளப்புக்கு வந்திருந்த இருபத்தைந்து பேர்களும் டயமண்ட் அமர்ந்திருந்த மேஜையைக் கவனித்துக் கொண்ட 'சர்வர்'கள் இருவரும் கொலையை நேரில் பார்த்திருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரேனும் போலீஸாரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அங்கிருக்க வேண்டுமே? எப்படியோ தலை தப்பினால் போதும் என்று அவர்கள் ஓட்டமெடுத்தார்கள். எவ்வளவு தூரம் ஓட முடியும்? லெக்ஸ் டயமண்டின் கழுகுப் பார்வையிலிருந்து எவ்வாறு தப்ப முடியும்? போலீஸாரிடம் டயமண்டுக்கு எதிராகச் சாட்சி சொல்லக் கூடியவர்களெல்லாம் ஒருவர்பின் ஒருவராக மாயமாய் மறைய ஆரம்பித்தார்கள்; அல்லது திடீரென்று மரணத்தைத் தழுவினார்கள். சார்லியால் சுடப்பட்டு மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த குண்டனும் பயந்து போய் 'என்னை யார் சுட்டார்கள் என்று எனக்கே தெரியாது!' என்றுதான் வாக்குமூலம் கொடுத்தான்!—கடைசியில் சார்லி வேண்டுமென்றே போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டு, 'யார்? நானா? எனக்கொன்றும் தெரியாதே!' என்கிற பாவனையில் நடித்தான். சாட்சியங்கள் ஏதுமே இல்லாததால் போலீஸார் அவனை விடுவிக்க நேர்ந்தது!

எப்படியிருந்தாலும் டயமண்டை இனி வெளியே விட்டு வைப்பது தவறு என்று போலீஸார் தீர்மானித்தனர். ஆனால் அவன் அவர்கள் கண்களில் தென்பட்டால்தானே? அவனைப் பிடிக்க முடிந்த சமயத்தில் சாட்சியங்களுக்காகப் போலீஸார் காத்திருந்தார்கள். பலமான சாட்சியங்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எப்படியோ அவனைக் கைதாக்கி ஏதாவது காரணம் காட்டிச் சிறிது காலமேனும் உள்ளே வைத்திருந்தால் போதும் என்கிற நிலைக்கு அவர்கள் வந்திருந்த சமயத்தில் அவனைக் காணவில்லை!

லெக்ஸ் டயமண்டின் சகோதரன் எட்டி டயமண்ட் க்ஷயரோகத்தால் பிடிக்கப்பட்டு ஓர் ஆஸ்பத்திரியில் கிடந்தான். லெக்ஸ் டயமண்ட் எப்படியும் தான் மிகவும் அன்பு செலுத்தி வந்த தன் சகோதரனைக் காண வருவான் என்று எதிர்பார்த்து, ஒரு துப்பறியும் வீரனை அதே மருத்துவ மனையில் பக்கத்துக் கட்டிலில் நோயாளியாகப் படுத்திருக்குமாறு போலீஸார் அனுப்பி வைத்தனர். டயமண்ட் அங்கு வரவில்லை; மரணம் வந்து விட்டது. எட்டி டயமண்ட் இறந்தவுடன் சகல மரியாதைகளுடன் சவ அடக்கம் நடத்த லெக்ஸ் டயமண்ட் ஏற்பாடு செய்தான்.

'மேற்கு 93ம் நெம்பர் வீதியில் 134ம் நெம்பர் கட்டடத்தில் எட்டி டயமண்டுக்கு இறுதி மரியாதைகள் நடைபெறவிருந்தன. இந்தச் சடங்குக்கு நிச்சயமாக லெக்ஸ் டயமண்ட் வராமல் இருக்க மாட்டான் என்று போலீஸார் நம்பினர்.

ஜானி கோர்டெஸ் அந்தக் கட்டடத்தில் 'லிப்ட்' இயக்குபவனாக ப்ராங்க் பிலிப்ஸை வேஷம் போட்டுக் கொள்ளச் செய்தான். கட்டடத்தில் பூமி மட்டத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டிருந்த கிடங்குகளில் ஏராளமான போலீஸார், ஆயுதம் தாங்கித் தயாராக இருந்தனர். பிலிப்ஸ் எத்தனையோ பேர்களை லிப்டில் ஏற்றிக் கொண்டு எட்டிக்கு இறுதி மரியாதை நடைபெறும் மேல் மாடிக்கு இட்டுச் சென்றான். குண்டர்களின் பட்டாளத்தைச் சேர்ந்த அவர்களில் அநேகமாக அனைவரையுமே அவனுக்கு அடையாளமாகத் தெரியும். லெக்ஸ் டயமண்ட் வந்தானானால் அவனை லிப்டில் ஏற்றி மேல் மாடியில் கொண்டு போய் விட்டு விட்டு உடனடியாக லிப்டை அடிவாரத்துக்குச் செலுத்திப் போய் ஜானி கோர்டெஸுக்கும் போலீஸ் பட்டாளத்துக்கும் தகவல் தெரிவித்துவிட வேண்டும். பிறகு லெக்ஸ் டயமண்ட் சில நிமிஷங்களில் பிடிபட்டு விடுவான். இது அவர்கள் திட்டம்.

இப்போது தான் லிப்டில் ஏற்றிக் கொண்டு போகும் குண்டனின் பெயர் ஸால்வடார் என்பது ப்ராங்குக்குத் தெரிந்ததுதான்.

ஸால்வடார் ப்ராங்கைப் பார்த்தான். ''வழக்கமாக லிப்டை இயக்குபவன் நீ இல்லை போலிருக்கிறதே?'' என்று கேட்டான்.

''இல்லை, அவனுக்கு மூன்று நாட்கள் லீவு. அவனுக்குப் பதில் தாற்காலிகமாகத் தினக் கூலிக்கு நான் வேலை பார்க்கிறேன்.''

''ஓஹோ!'' என்றான் ஸால்வடார். அவனுக்குச் சந்தேகம் வலுத்தது. மேல் மாடிக்குப் போனதும் டெலிபோனை எடுத்து யாருடனோ சங்கேத பாஷையில் ஏதோ பேசினான். விஷயமறிந்து கொண்ட லெக்ஸ் டயமண்ட் தன் சகோதரனுக்கு இறுதி மரியாதை செலுத்த வரவேயில்லை! அவன் இல்லாமலேயே ஊர்வலமும் சவ அடக்கமும் நடந்து முடிந்து விட்டன!

இதற்குச் சில வாரங்களுக்குப் பிறகு லெக்ஸ் டயமண்ட் தன் வக்கீலையும் உடன் வைத்துக் கொண்டு, ஹாட்லி டாட்லி கிளப்பில் கொலை நடந்ததாகக் கூறப்படும் அன்றைய இரவு, தான் வேறு ஏதோ ஓர் ஊரில் இருந்ததாகச் சத்தியம் செய்யும் சில சாட்சிகளுடன் போலீஸாரிடம் வலுவில் வந்து சேர்ந்தான். அவன் பேரில் குற்றம் சுமத்த அணு அளவு தடயமும் போலீஸாருக்குக் கிடைக்கவில்லை.

''நீ சுட்டுக் கொன்றதை நாங்கள் புகைப்படமெடுக்காத குறைதான்; எங்களுக்கு மற்ற எல்லா விஷயங்களும் தெரியும்'' என்றான் ஜானி கோர்டெஸ்.

''அப்படி ஒரு புகைப்படத்தை நீங்கள் கோர்ட்டில் சாட்சியமாகத் தாக்கல் செய்தாலொழிய என்னை ஒன்றும் செய்ய முடியாது'' என்றான் லெக்ஸ் டயமண்ட் புன்னகையுடன்.


இருவரும் கைகுலுக்கினார்கள். இருவரும் இரண்டு துருவங்களிலிருந்தார்கள். இருவ

ரும் அந்த அந்தத் துருவத்தில் மன்னர்களாய் விளங்கினார்கள். போலீஸ் தலைமைக் காரியாலயத்தை விட்டு டயமண்ட் சுதந்திர புருஷனாக வெளியேறினான்.


ஆனால் குண்டர்களின் உலகில் அவனுக்கு எத்தனையோ எதிரிகள். ஒரு நாள் கிக்கி ராபர்ட்ஸ் என்கிற தன் ஆசைநாயகியைச் சந்திக்க அவன் சென்று கொண்டிருந்தான். அவளைச் சந்திக்கு முன்னர் ஓர் இயந்திரத் துப்பாக்கியிலிருந்து சரமாரியாக வெளிப்பட்ட குண்டுகளை அவன் சந்திக்க நேர்ந்தது.

லெக்ஸ் டயமண்ட் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் குதூகலித்தவர் பலர்; மனம் வருந்தியவர்கள் மூன்றே பேர்தான். அவன் மனைவியைத் தவிர ஜானி கோர்டெஸ்ஸும் ப்ராங்க் பிலிப்ஸும் உண்மையாகவே மனம் வருந்தினார்கள். ''என்றைக்காவது ஒருநாள் சரியான சாட்சியங்களுடன் அவனைப் பிடித்து நீதி விசாரணை நடத்தித் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுக்கலாம் என்று லட்சியக் கனவு கண்டு கொண்டிருந்தேன். என் ஆசை நிராசையாயிற்று'' என்று ஜானி கோர்டெஸ் கூறியது தன் மன நிலையை அப்படியே பிரதிபலிப்பதாகச் சொல்லி ஆமோதித்தான் ப்ராங்க் பிலிப்ஸ்.

[குவென்டின் ரெனுல்ட்ஸ் எழுதிய Head Quarters என்ற நூலிலிருந்து ஒரு பகுதி. பிரசுரம்: பாபுலர் லைப்ரரி.]



துக்கடா



பிராங்க் மோல்னர் என்பவர் சிறந்த ஹாஸ்ய எழுத்தாளர். வயிறு வெடிக்கச் சிரிக்க வைக்கும் எத்தனையோ நாடகங்கள் எழுதியுள்ளார்.

பிரபல விஞ்ஞானியான ஐன்ஸ்டீனுக்குப் பிடில் வாசிப்பது மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. அவர் பிடில் வாசித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு சமயம் பிராங்க் மோல்னர் அவரது வாசிப்பைக் கேட்க நேர்ந்தது. மகிழ்ச்சி மிதப்பில் இளநகை புரிந்தார் அவர்.

அதைக் கண்ணுற்ற ஐன்ஸ்டீனுக்கு ஒரு குறும்பு தோன்றியது. பிடில் வாசிப்பதை நிறுத்தி விட்டு, "நல்ல ஆள் ஐயா நீர்! என் பிடில் வாசிப்பைக் கேட்டு இப்படிச் சிரிக்கிறீரே! நானும்தான் உமது நாடகத்தை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். மருந்துக்காவது சிரித்திருப்பேனா?" என்றார்.

ஃ ஃ ஃ

ருஷ்ய எழுத்தாளரான மாக்ஸிம் கார்க்கி ஒரு சமயம் இத்தாலி சென்றிருந்தார். அவர் தங்கியிருந்த விடுதியில், ஒரு கணம்கூட அவரால் கண் அயர முடியவில்லை; எதைப் பற்றியாவது சிந்தனை செய்யலாம் என்றாலும், முடியவில்லை. காரணம் மூட்டைப் பூச்சி உபத்திரவமே. விடுதி முதலாளியிடம் சென்று இது பற்றிப் புகார் கூறினார்.

"இருக்கவே இருக்காது. எங்கள் விடுதியில் பெயருக்குக்கூட ஒரு மூட்டைப் பூச்சி கிடையாது" என்றார் அவர்.

"நான் ஒன்றென்று எங்கே சொன்னேன்? உங்கள் விடுதியில்தான் மூட்டைப் பூச்சி கல்யாணம் செய்து கொண்டு குழந்தை குட்டி மட்டுமென்ன, பேரன் பேத்திகூட எடுத்துக் கொண்டு வாழ்கிறதே! அவற்றிடமும் நீங்கள் ஏதாவது வாடகை வாங்குவது உண்டோ?" என்று கேட்டார் மாக்ஸிம் கார்க்கி.

ஃ ஃ ஃ

கிரிமால்டி என்பவர் சிறந்த விதூஷகர். அவருக்குச் சிறிது காலமாகத் தூக்கமே பிடிக்கவில்லை. படுக்கையில் படுத்துக் கொட்டுக் கொட்டென்று எதையாவது யோசித்துக் கொண்டே யிருப்பார். சிற்சில சமயம் தற்கொலை எண்ணம்கூட அவர் மனத்திலே முளைத்துத் தொந்தரவு தரலாயிற்று. இப்படியே விடுவது நல்லதல்ல என்று எண்ணி ஒரு டாக்டரை அணுகிச் சிகிச்சை கேட்டார்.

"எனக்குத் தெரிந்த வரையில் இதற்கு மருந்து எதுவும் கிடையாது. இப்படியே விட்டு வைப்பதும் நல்லதல்ல. நான் சொல்வதைக் கேளுங்கள். கிரிமால்டி என்னும் விதூஷகரிடம் செல்லுங்கள். அவர் பேச்சில் மனத்தைச் செலுத்தினால், உங்கள் மனக் கவலை தீரக் கூடும்!" என்றார் டாக்டர்.

"அப்படியா? நான் இன்னொரு கிரிமால்டியைத் தேடி எங்கே போவது?" என்று கேட்டார் கிரிமால்டி.

அவர்தான் கிரிமால்டி என்பது தெரிய வரவே, டாக்டர் தலையைச் சொறிந்தார்!

ஃ ஃ ஃ

வராகசாமி வழக்கறிஞர் தொழிலுக்குப் புதிது. அந்த ஊரில் தம் தொழிலை நடத்த வென்று வந்ததும் முதல் காரியமாகத் தம் வீட்டுக்கு ஒரு தொலைபேசியை ஏற்பாடு செய்து கொண்டார். யாராவது வரும் பொழுது தமக்கு வழக்குகள் அதிகம் இருப்பது போலவும் ஓய்வு ஒழிவு இடையாது போலவும் பாசாங்கு செய்யலானார். எப்பொழுது பார்த்தாலும் காதில் தொலைபேசி தான்; வாயில் வழக்குப் பேச்சுத்தான்.

அன்றும் அப்படித்தான்: வெளியே எங்கோ போய் விட்டு வந்தவர், போனைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். ஓர் ஆள் உள்ளே நுழையவே, பிரமாதமாக அளக்கலானார். சிறிது நேரம் நின்று பார்த்தவனுக்கு அலுத்து விட்டது. "சார்! உங்கள் வீட்டுப் போன் சரியாக இயங்கவில்லை என்று எங்களுக்குப் புகார் வந்ததே! சரியாகக் கேட்கிறதென்றால் இப்படிப் புகார் செய்வானேன்?" என்று கேட்டான் வந்தவன்.

"அடடா! நீ போன் ரிப்பேருக்காக வந்திருக்கிறாயா? நான் யாரோ கட்சிக்காரன் என்று எண்ணியல்லவா பேசுவதாகப் பாவனை செய்து கொண்டிருந்தேன்!" என்றார் வக்கீல் வராகசாமி.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்: 'சிலந்திப் பூச்சியும் அரசனும்' என்ற கதையிலிருந்து தெரியும் நீதி என்ன?

ராமு: இடையே உறும் தோல்விகள் எல்லாம் வரும் வெற்றிக்கு அஸ்திவாரம் என்பதாகும்.

கிருஷ்ணன்: சார், ஒரு சந்தேகம். நம் சீனு எப்பொழுது பார்த்தாலும் பொய் பேசுகிறானே! அவன் பேசும் பொய்யெல்லாம் வரும் மெய்க்கு அஸ்திவாரம் என்று சொல்லலாமா, சார்?

ஃ ஃ ஃ

மாபெரும் கம்பெனி அது. நாளொன்றுக்கு நூற்றுக் கணக்கில் அந்தக் கம்பெனியிலிருந்து கடிதங்கள் தபாலில் சேர்க்கப்படும். அன்றும் அப்படித்தான். முதலாளி கையெழுத்திட்டு விட்டுப் போனவர், போயே போய் விட்டார். ஆம், இறந்து விட்டார். துக்கம் கொண்டாடும் முறையிலேயே சில நாட்கள் கம்பெனி மூடப்பட்டிருந்தது. கம்பெனி திறந்த அன்று அவரது அந்தரங்கக் காரியதரிசி கீழ்க்கண்ட குறிப்புடன் கடிதங்களைத் தபாலில் சேர்க்கச் செய்தார்:

"நான் இறந்து விட்டதால் இந்தக் கடிதங்கள் தாமதமாகத் தபாலில் சேர்க்கப்படுகின்றன. மன்னிக்கவும்."

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

